விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 27 வியாழக்கிழமை (13.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 359

## ரணில் பிரதமராக செயற்படுவதற்கு பாராளுமன்றில் பெரும்பான்மை உண்டு

### ஜனாதிபதிக்கு சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிப்பதற்கு பாராளுமன்றத்தில் நம்பிக்கை இருப்பதாக தெரிவிக்கும் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதம் நேற்று மாலை அனுப்பிவைக்கப்பட்டதாக சபாநாயகர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நிலையற் கட்டளைகளின் அடிப்படையில் இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது என்றும் சபாநாயகர் குறித்த கடித 23

### நம்பிக்கை ஆதரவு பிரேரணையில்

## கூட்டமைப்பின் ஆதரவுடன் வெற்றி பெற்றார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகிப்பதற்கு பாராளுமன்றத்தில் நம்பிக்கை இருப்பதாக தெரிவிக்கும் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு ஆதரவாக 117 வாக்குகள் கிடைத்திருந்தன.

இந்த வாக்கெடுப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பி 02

## அரச தரப்பாக செயற்படோம்

### பாராளுமன்றில் மாவை சேனாதிராசா

(கொழும்பு)

அரசாங்கத்தின் தரப்பாக ஒரு போதும் செயற்படப் போவதில்லை என்றும், தாம் எப்போதும் எதிர்க் கட்சியிலேயே செயற்படப் போவதாகவும், பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். 23

### டிசம்பர் 18 வரை

## பாராளுமன்று ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. இதன் போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் பாராளு 23

### தமிழ் மக்களின் பிரச்சினைக்கு

# சட்ட ரீதியாக தீர்வு வழங்கப்படும்

### பாராளுமன்றில் ரணில் உறுதி

(கொழும்பு) வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு புதிய அரசியல் யாப்பின் ஊடாக சட்ட ரீதியாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். பாராளுமன்றத்தில் நம்பிக்கை பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (23-ம் பக்.)



## புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளிகள் விபரம் வெளியாகின

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான, பாடசாலைகள் ரீதியாக வெட்டுப் புள்ளிகள் நேற்று புதன் 23

### மகிந்தவுக்கு எதிரான மனு

## நாளை வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் புதிய அமைச்சரவைக்கு பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவிகளை 23

## ஜனாதிபதியின் பொது வாக்கெடுப்பு சட்ட விரோதமானது

### நிபுணர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைத்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றின் தீர்ப்பு அமையுமாயின் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவ 23

### யாழ். மாநகர சபையின் பாதீடு

## கூட்டமைப்பு – முன்னணி ஆதரவுடன் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் 2019ஆம் ஆண்டுக்கான பாதீடு வாக்கெடுப்பின்றி உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் நேற்று நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் பாதீட்டை வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்ற ஒப்புதலளித்தனர். எனினும் ஈ.பி.டி.பியின் 9 உறுப்பினர்களும் எதிர்ப்பு வெளியிட்டனர். சபையின் அதிகப்படியான உறுப்பினர்களின் முடிவுக்கமைய 23

## தமிழ் மக்களை அரசு ஓரங்கட்டுகிறது

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(பளை)

தமிழ் மக்களை ஓரங்கட்டும் செயற்பாட்டினை இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பளை பிரதேச வைத்தியசாலையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் 02

### மகிந்த – ரணில் இருவருமே

## பிரதமர் பதவிக்கு ஏற்றவர்கள் அல்ல

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்க இருவருமே பிரதமர் கதிரைக்கு ஏற்புடையவர்கள் அல்ல என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக சஜித் பிரேமதாச முன்வைத்த சபை ஒத்திவைப்பு 23

## நாட்டின் ஸ்திரத்தன்மைக்காக ரணிலுக்கு ஆதரவளித்தோம்

### கூட்டமைப்பினர் விளக்கம்

(கொழும்பு)

நாட்டின் ஸ்திரத்தன்மையை யோசித்தே ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவான நம்பிக்கை பிரேரணை நேற்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இதன்போது 117 உறுப்பினர்களின் ஆதரவினை ரணில் விக்கிரமசிங்க பெற்று தன்னுடைய பெரும்பான்மையை நிரூபித்துள்ளார். இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 14 நாடாளு 23

## சரணடைந்தவர்களுக்கு நடந்தது பற்றி இராணுவத்தினர் பதிலளிக்க வேண்டும்!

### இரு சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் போர் முடிவிற்கு வந்த 2009 மே 18- 19ஆம் திகதிகளில் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து, காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு இலங்கை இராணுவம் பதிலளிக்க வேண்டும் என இரு சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

படையினரிடம் சரணடைந்தவர்களின் விபரங்கள் குறித்து ஆராய்ந்து வரும் இரு சர்வதேச அமைப்புகளே இந்த அறிக்கையை விடுத்துள்ளன.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் மனித உரிமை தர ஆய்வு குழு ஆகிய அமைப்புகளே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன. அதிகளவானவர்கள் காணாமல்போன நாடு 02

## சரணடைந்தவர்களுக்கு நடந்தது பற்றி...

களில் இலங்கையும் ஒன்று என தெரிவித்துள்ள இந்த சர்வதேச அமைப்புகள் 500 பேர் ஒரே இடத்தில் ஒரே தருணத்தில் காணாமல் போனமை மிக முக்கியமான விடயம். ஒரே தருணத்தில் பெருமளவானவர்கள் காணாமற்போன சந்தர்ப்பம் இது எனவும் தெரிவித்துள்ளன.

2009 இல் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களின் பாரிய எண்ணிக்கை காரணமாக இது குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின்சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் இதற்கு பதிலாக ஒரு வருடம் கடந்துவிட்டது. இன்னமும் எவரும் 58 வது படைப்பிரிவின் தளபதியாகயிருந்தவரிடம் விசாரணை நடத்தவில்லை.

விடுதலைப் புலிகளின் பகுதியிலிருந்து வந்தவர்கள் படையினரிடம் சரணடையும் போது அப்பகுதி யில் 58 படைப்பிரிவின் தளபதி காணப்பட்டார் என ஐநாவின் தகவல்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்கள் மூலம் அறிய முடிந்துள்ளது என யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிற்கு ஜெனரல் தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதும் இதன் காரணமாக அவர் இராணுவத்தின் மனித உரிமை விவகாரங்களிற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையும் காணாமல்போனவர்களின் குடும்பத்தவர்களிற்கு செய்யும் அவமரியாதை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடும்பத்தவர்களிற்கு பதில் வழங்கப்பட வேண்டும், அவர்களிற்கு உண்மையை அறிவதற்கான உரிமையுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது காணா மல்போனவர்களின் பெயர் விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஐடிஜேபி கடந்த பல வருடங் களாக ஈடுபட்டுள்ளது. தற்போது அதனிடம் 300 பேரின் படங்களும் பெயர்களும் உள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

2011 இல் நாங்கள் சரணடைந்த வேளை காணாமல் போன 20 பேரின் விபரங்களை பெற்றோம், 2014 இல் அது 103 ஆக அதிகரித்தது. இவ்வருட ஆரம்பத்தில் இந்த எண்ணிக்கை 280 ஆக அதிகரித்தது. தற்போது எச்ஆர்டீஏஜி அமைப்பு சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 500ற்கும் அதிகம் என கருதுகின்றது என யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். (ம-3)


## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



(C-4663)

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## கூட்டமைப்பின்...

னர்கள் 14 பேர் ஆதரவாக வாக்களித்ததுடன், மக்கள் விடுதலை முன்னணியில் உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் பாராளுமன்ற அமர்வு நேற்று பகல் ஒரு மணிக்கு ஆரம்பமானது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் இந்த பிரேரணையை சமர்ப்பித்திருந்ததுடன், மங்கள சமரவீர ஆமோதித்து வழிமொழிந்தார். எனினும் நேற்றைய பாராளுமன்ற அமர்வினையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் புறக்கணித்திருந்தனர். (ம)

## நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி

### அமரர் கோவிந்தராஜா ஸ்ரீஸ்கந்தராஜா



எமது வித்தியாலயத்தின் உப அதிபர்
**திருமதி அறிவழகி ஸ்ரீஸ்கந்தராஜா**
அவர்களின் பாசமிகு கணவர்

**திரு.கோவிந்தராஜா ஸ்ரீஸ்கந்தராஜா**

அவர்களின் பிரிவுத்துயரில்
நாமும் பங்கேற்பதோடு
அவரின் ஆத்மா நல்லைக்கந்தன்
தாள் சேர பிரார்த்தனை
செய்கின்றோம்.

(C-4682)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா பணியாளர்கள்.
யாழ்.நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

## தமிழ் மக்களை...

இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களை ஓரங்கட்டுகின்ற இலங்கை அரசினால் முன்னெடுக்கப் படுகின்ற செயற்பாடுகளுக்கு எதிராக எமது மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு எமது அரச அதிகாரிகள் எவ்வாறு சேவையாற்ற வேண்டும் என்பதனைப் படம் போட்டுக் காட்டுகின்ற ஒரு செயற்பாடாகவே நான் இந்தக் கண்காட்சியைப் பார்க்கின்றேன்.

அரசாங்க அதிபர்களும், மாவட்ட செயலாளர்களும், கிராம சேவையாளர்களும் சட்டத்தால் பிரித்தெடுக்கப்பட்டிருந்தாலும் சதையால் அவர்கள் எம்மவர்கள் என்பதை நாங்கள் மறந்து விடலாகாது. மாகாணமும் மத்தியும் அவர்கள் ஊடாக எம்மிடையே மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

பொது மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் ஏன் சில அலுவலர்களும்தான் தம்மை எவ்வாறு வளப்படுத்திக்கொள்ள முடியும் என்றே சதா சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே இன்றைய யதார்த்த நிலை.

இந்தச் சூழ்நிலையில்இவ்வாறான செயற்பாடுகள் மிகுந்த வரவேற்பை மக்களிடம் இருந்து பெறுவன என்று எதிர்பார்க்கலாம். (ம-3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(7891)



## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன் டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 சான்றிதழுக்கு அமைய இலகுவான வழியில் கற்பிக்கப்படுகின்றது.

**தொடர்புகளுக்கு : 077 970 7322**

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(7884)



## நெதர்லாந்து டச் வகுப்புக்கள்

நெதர்லாந்து டச் மொழிகள் நெதர்லாந்து தூதரகம் கேட்கும் சான்றிதழுக்கு அமைய இலகுவான வழியில் கற்பிக்கப்படுகிறது.

**தொடர்புகளுக்கு : 021 720 1910**

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(7884)



## பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

(B.A.புதிய பாடத்திட்டம்)

- புதிய ஆண்டிற்கான பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
- பதிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றது.
- A/L 2017ம் ஆண்டிற்கு முன்னர் பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.
- A/Lல் மூன்று பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
- இப்பட்ட நெறியின் கால எல்லை மூன்று ஆண்டுகளாகும்.
- வருடம் ஒரு பரீட்சை நடைபெறும்.

**விபரங்களுக்கு : S.அருள்நங்கை - நிர்வாகி**

021 222 8148
077 846 9721

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(C-4681)



## புதுக் கடை திறப்பு விழா



இறக்குமதியாளர்

**NEW WORLD INTERNATIONAL BUSINESS (PVT) LTD.**

e-fluent புதிய வருகை

நிகழும் விளம்பி வருடத்தில் 14.12.2018 நாளை 9.30 - 10.40
இற்கு இடைப்பட்ட நேரத்தில் சதய நட்சத்திரமும் ஸப்தமி திதியும்
சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட
இருக்கும் SUNJEY'S HOLDINGS நிறுவனத்தினரின்
(இல.98, அரசடி வீதி யாழ்ப்பாணம், யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)

நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மதிப்புக்குரிய சட்டத்தரணியும் யாழ் மாவட்ட இறைவரி ஆணையாளருமாகிய **பந்துல ஹப்புதந்திரிகே** அவர்களும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமாகிய உயர்திரு. **இ.இளங்கோவன்** அவர்களும் கலந்து கொள்வார்கள். இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்

இப்படிக்கு : உரிமையாளர் அருள் ஜெயந்திரன்
**SUNJEY'S HOLDINGS, இல.98, அரசடி வீதி யாழ்ப்பாணம்.**
077 386 4077, 077 747 4111

நம்பமுடியாத விலையில்
மாபெரும் விலைக்கழிவு

உங்கள் பணப் பையில்
பணத்தை மேலதிகமாக
சேமிக்க முடியும்

75,000 ரூபா மட்டுமே



100% இயந்திர மோட்டார்
பெட்ரோல் தேவையில்லை
சூழல் மாசடையாது
எண்ணெய் மாற்றத்தேவையில்லை
புகை பரிசோதனை தேவையில்லை.

(C-4683)

DESCRIPTION OF BIKE

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |


No.72, Messenger Street Colombo 12.
Tel : 0112 433 153 Fax : 0112 433 129
E-mail : info@nwilk.com

#0.30/- சதம் 1 Km இயங்கும் செலவு

## சீனாவின் கடன்பொறிக்குள் சிக்கித் தவிக்கும் சிறிய நாடுகள்

# அம்பாந்தோட்டை துறைமுகம் மீதான இறைமையை இலங்கை இழந்தது ஏன்?

## அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி



(வோஷிங்டன்)

சீனாவிடமிருந்து பெற்ற கடன் காரணமாக இலங்கை அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மீதான தனது இறைமையை கைவிடவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டது என அமெரிக்க குடியரசுக் கட்சியின் சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் டனா ரொஹ்ரபச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கடன்பொறியை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா தேவையற்ற உட்கட்டமைப்பு திட்டங்களை மேற்கொண்டு சிறிய நாடுகளை மோசடி செய்கின்றது என அவர் தெரிவித்துள்ளார். சீனா ஏழைநாடுகளால் திருப்பி செலுத்த முடியாத அளவிற்கு கடன்களை கொடுக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

நாடுகளால் கடன்களை திருப்பி செலுத்தமுடியாத சந்தர்ப்பத்தில் சீனா அந்த நாட்டுச் சொத்துக்களை கைப்பற்றுகின்றது என தெரிவித்துள்ள டனா ரொஹ்றபச்சர் சீனாவின் முக்கிய இலக்காக ஆழமான துறைமுகங்களே காணப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

இந்தக் கடன்பொறியை முடிவிற்கு கொண்டுவரவேண்டும், நாங்கள் இவ்வாறான போக்கை ஆசியா ,ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளில் காண்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது அரசமைப்பு நெருக்கடியில் சிக்கியுள்ளமைக்கு சீன கம்யூனிஸ்ட்களின் தாங்கமுடியாத கடனிற்குள் இலங்கை மூழ்கியுள்ளமையும் ஒரு காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

தனது ஆழமான துறைமுகத்தின் மீதான இறைமையை இலங்கை பறிகொடுக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

## அரசியல் குழப்ப நிலையில்

# தீர்ந்துபோன 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம்

(கொழும்ப)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைத் தொடர்ந்து, 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரதிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட அரசியலமைப்புக் குழப்பங்களை அடுத்து, 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக விவாதம் எழுந்துள்ளது.

இந்த நிலையிலேயே அரசாங்க வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரதிகளுக்கு முன்னெப்போதும் இல்லாதளவுக்கு திடீர் கேள்வி எழுந்தது.

காலியில் உள்ள அரசாங்க வெளியீட்டுத் திணைக்களத்தின் கிளையில் உள்ள 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அனைத்து பிரதிகளும் விற்றுத் தீர்ந்துள்ளன.

சட்டத்தரணிகள், மாணவர்கள், பிக்குகள், அரசியல்வாதிகள், வல்லுநர்கள் பலரும் இவற்றை வாங்கிச் சென்றதாக, விற்பனைப் பணியாளர் தெரிவித்தார். கிராமப் புறங்களில் இருந்து கூட பலரும் வந்து வாங்கிச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார்.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரதிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து, அவற்றை மீண்டும் அச்சிடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சிங்கள மாணவர்களிடையே யாழில் திடீரென மோதல்

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சிங்கள மாணவர்களிடையே இடம்பெற்ற மோதலில், தாக்குதலுக்கு இலக்கான மாணவர்கள் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் நான்காம் வருட மாணவர்களே, அதே பீடத்தைச்சேர்ந்த இரண்டாம் வருட மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இரண்டாம் வருட மாணவர்கள் தமக்கு மரியாதை தருவதில்லை என்ற காரணத்தை முன்வைத்தே இரண்டாம் வருட மாணவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு சென்று தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த மூன்று மாணவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக இரண்டாம் வருட மாணவர்களுடன் தங்கியிருந்த சக மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். அந்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-101)

# “கல்வி அமைச்சர் காரியவசம்” சீருடையில் சிக்கிய மைத்திரி

(கொழும்பு)



நல்லாட்சி அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் படத்துடன் அச்சிடப்பட்டிருந்த, மாணவர்களுக்கான சீருடைத் துணி பவுச்சர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

கூட்டு அரசாங்கத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் அகில விராஜ் காரியவசம் கல்வி அமைச்சராகப் பதவி வகித்திருந்தார்.

அப்போதைய கல்வி அமைச்சரின் படத்துடன், மாணவர்களுக்கான சீருடைத் துணி பவுச்சர் அச்சிடப்பட்டு தயார் நிலையில் இருந்த போது, கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி கூட்டு அரசாங்கத்தை ஜனாதிபதி கவிழ்த்தார்.

இதைஅடுத்து, ஜனாதியால் நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், கடந்த நவம்பர் 2ஆம் திகதி இந்த சீருடைத் துணி விநியோகத்துக்கான பவுச்சர்களை வழங்குவதை தடை செய்தது.

மாணவர்களுக்கு பவுச்சர்களுக்குப் பதிலாக, சீருடைத் துணி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

எனினும் நீதிமன்ற உத்தரவுகளால், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான சீருடைத் துணிக்கு கேள்விப் பத்திரம் கோரி, அதனை விநியோகிப்பதற்கு போதிய கால அவகாசம் கிடைக்காது என்பதால், ஏற்கனவே அச்சிடப்பட்டிருந்த, முன்னாள் கல்வி அமைச்சரின் படத்துடன் கூடிய பவுச்சர்களை வழங்க ஜனாதிபதி மைத்திரி உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி வரையக் கல்விப் பணிகளில் இந்தபவுச்சர்களை பெற்று, முடிந்தால் பாடசாலை விடுமுறைக் காலத்தில் விநியோக நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத்தல்வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## நாட்டின் சகல நீதிமன்றங்களுக்கும் வெள்ளிக்கிழமை முதல் விடுமுறை

(கொழும்பு)

வழமை போன்று இம்முறையும் நாட்டின் சகல நீதிமன்றங்களுக்கும் புத்தாண்டு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ஜனவரி 06 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படுகிறது.

2019 புத்தாண்டின் பின்னர் ஜனவரி 07ஆம் திகதி நாட்டின் சகல நீதிமன்றங்களும் மீண்டும் இயங்கத் தொடங்கும்.

நீதிமன்றங்களுக்கு வருடாவருடம் ஆண்டின் இறுதியில் இவ்வாறு விடுமுறை வழங்கப்படுவது வழமையாகும். (இ)

# இ.போ.ச.வட பிராந்திய சாலைக்கு எதிராக யாழில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய சாலை நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தும் பிராந்திய முகாமையாளரை மாற்றுமாறு வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய இணைந்த தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் இப்போராட்டம் நடைபெற்றது.

இ.போ.ச. வட பிராந்திய சாலையின் நிர்வாகத்தில் பாரிய முறைகேடுகள் நடைபெறுகின்ற அதேவேளையில் தொடர்ந்தும் நிர்வாகச் சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன. தங்களது பதவிகளுக்காகவும் மற்றும் சலுகைகளுக்காகவும் தொழிலாளர்களைப் பழிவாங்கும் செயற்பாடுகளை அதிகாரிகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிர்வாக முறைகேடுகள் மற்றும் சீர்கேடுகள் மற்றும் பழிவாங்கல்கள் தொடர்பில் குரல் கொடுக்கின்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மீதும் பொய்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் அதிகாரிகள் மேற்கொள்கின்றனர்.

இதனால் பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அதிகாரிகளின் திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்று நாங்கள் கோருகின்றோம்.

அத்தோடு வட பிராந்திய நிர்வாகச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். தொழிலாளர்கள் மீதான பழிவாங்கல்கள் நிறுத்தப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ள மேற்படி சங்கத்தினர் இதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

ஆயினும் இதற்குரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படாதவிடத்து தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மேற்படி சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ)



சதம் அடித்த சாய் ஹோப்

## மே.தீவுகள் வெற்றி

ஹோப் சதம் கடந்து கைகொடுக்க இரண்டாவது ஒருநாள் போட்டியில் மே.தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


பங்களாதேஷ் சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் பங்களாதேஷ் அணி வென்றிருந்த நிலையில் இரு அணிகள் மோதிய 2ஆவது போட்டி டாக்காவில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களை எடுத்தது. தமிம் இக்பால் (50), முஷ்பிகுர் (62), சகிப் அல் ஹசன் (65) அரைச்சதம் அடித்து உதவினர். தொடர்ந்து களமிறங்கிய மே.தீவுகள் அணிக்கு ஷேய் ஹோப் சதம் அடித்து கைகொடுக்க, 49.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்கள் எடுத்து, வெற்றி பெற்றது. ஷேய் ஹோப் (146), கீமோ போல் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது.


# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் பரராஜசிங்கம்

பிறப்பு - 12.08.1942

இறப்பு - 12.12.2018

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் - பரராஜசிங்கம் அவர்கள் நேற்று (12.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (7895)

54/8, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன், லோயன் (பெயின்ரர்)



# மரண அறிவித்தல்



## கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தராஜா ஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா 09.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தராஜா ஐயர் (சங்கீத ஆசிரியர்) - பர்வதாம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம் - வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் அறிவழகியின் (உப அதிபர் - மங்கையற்கரசி வித்தியாலயம்) பாசமிகு கணவரும் ஸ்ரீசங்கமீரா (விஞ்ஞானபீடம் - யா/பல்கலைக்கழகம்), ஸ்ரீசங்கீதன் (யா/இந்துக் கல்லூரி), ஸ்ரீசங்கநேசன் (யா/மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி பரமேஸ்வரி (லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), உதயகுமாரன் (கனடா), வள்ளிகாந்தன், திருமதி உதயகுமாரி (லண்டன்), திருமதி கேதீஸ்வரி ஆகியோரின் சகோதரரும் கந்தப்பிள்ளை (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம், ஞானபண்டிதன், அம்பிகைபாகன், ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), திருமதி அருந்தவநாயகி (கனடா), திருமதி காமினி (கனடா), ஸ்ரீதரன் (லண்டன்), திருமதி வதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை கோயில் வீதி, நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7883)

இல.203, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

021 222 3680, 077 979 7410, 076 305 3332, 076 668 7642



# மரண அறிவித்தல்

திருமதி

## லோகேஸ்வரி இராசேந்திரம்



யாழ்ப்பாணம் சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி இராசேந்திரம் அவர்கள் கடந்த 08.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் துரைராசசிங்கம் - செல்வபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் நீலவேணி (இலங்கை), கோகுலன் (அவுஸ்திரேலியா), சயந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜேந்திரன் (இலங்கை), தரங்கினி (இலங்கை), சிவலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சியுஜனின் (லண்டன்) அன்பு பேர்த்தியாரும் சற்குணஈஸ்வரி, இளையதம்பிநாதன், வயிரவநாதன், செல்லப்பாநாதன், நாயகப்பிள்ளை, இராசநேசன் (பிரான்ஸ்), மாசிலாமணி, பக்தகௌரி, வைத்தியநாதன் சிமான் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தம்பாப்பிள்ளை (அமரர்), இராசலட்சுமி, விஜயலட்சுமி, வரதலட்சுமி, குலேந்திரராசா, தனலட்சுமி, சிலோசனாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.12.2018) வியாழக்கிழமை 10 மணியளவில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (7889)

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்
021 225 0574

# மரக்கறி சந்தையில் மான் இறைச்சி விற்றவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி மரக்கறிச் சந்தையில் கடந்த திங்கட் கிழமை மரக்கறி வியாபாரி ஒருவர் மான் இறைச்சி விற்ற போது நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் விற்பனைக்கு வைத்திருந்த இறைச்சியைப் பறிமுதல் செய்துள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு குறித்த நபருக்கு மூவாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-30)

# பரீட்சைக்காக தேசிய அடையாள அட்டையின் புகைப்படத்தை மாற்றிய மாணவன் கைது!

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையின் புகைப்படத்தை மிகவும் சூட்சுமமான முறையில் புதிய புகைப்படமொன்றினை மாற்றி பரீட்சை எழுதிய மாணவனை தனமல்விலை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

தனமல்விலைப்பகுதியின் ரத்மலாகம கனிஷ்ட வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவனே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி வித்தியாலய மண்டபத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் பரீட்சை நிலைய பொறுப்பாளர் பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டைகளைப் பரிசீலனை செய்து வரும் போது குறிப்பிட்ட மாணவனின் தேசிய அடையாள அட்டையில் சந்தேகம் நிலவியதையடுத்து அவர் தனமல்விலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கினார்.

குறித்த தகவலின் பேரில் விரைந்த பொலிஸார் குறிப்பிட்ட மாணவனைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையில் தேசிய அடையாள அட்டையின் புகைப்படம் மாற்றப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட மாணவன் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)




கேலிச்சித்திரம்

# வவுனியாவில் இலவச மருத்துவ முகாம்



(பனிக்கன்குளம்)

வவுனியா வைரவபுளியங்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நேற்றுக்காலை முதல் மாலை வரை இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா தமிழ் விருட்சம் மற்றும் விண்மீன்கள் அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இம் மருத்துவ முகாமில் பிரான்ஸ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த 6 வைத்தியர் குழாம் நரம்பு , எலும்பு, தசைக்கான மசாஜ் வைத்தியத்தினை நோயாளர்களுக்கு மேற்கொண்டு ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

வவுனியா மாவட்டத்தில் இவ்வாறான வைத்திய சிகிச்சை நிலையங்கள் கணிசமானளவு காணப்படவில்லை. எனினும் இன்றைய இலவச மருத்துவ முகாமில் வயது வேறுபாடு இன்றி பெருமளவானோர் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார் விண்மீன் அமைப்பின் தலைவர் புவிகரன் ஆகியோர் கலந்து கொண்டு இலவச மருத்துவ முகாமினை ஆரம்பித்து வைத்திருந்தனர். (2-281)

# மரண அறிவித்தல்



## Dr.அம்பலவாணர் ரகுபதி

(MBBS (SL), MD (COL), MRCP (UK), MRCPE)

**(பொது வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)**

யாழ்.இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ரகுபதி (பொது வைத்திய நிபுணர்) 11.12.2018 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா அம்பலவாணர் மற்றும் சந்திரவதனி தம்பதியரின் அன்பு மகனும் வேலும்மயிலும் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்), மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வதனியின் (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் கோவர்த்தன் (மாணவன்,யா/இந்துக்கல்லூரி) திருவகன், ஜதுகுலன் (மாணவர்கள், யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. பிறேமா சிவசண்முகராசா (பணிப்பாளர், சித்த ஆயுள்வேத வைத்தியசாலை கைதடி), அ.ஜெகதீஸ் (உயிரியல் பாதுகாப்பு உத்தியோகத்தர்-சிட்னி, அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் துவாரகன் (மருத்துவபீட மாணவன் சிட்னி பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா), சாருஜா (மருத்துவ பீட மாணவி -வடதென்மேல் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் அபிராமி (A/L 2018 மாணவி, யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை),அனுபாமா (A/L 2020 மாணவி, ஆகியோரின் அன்பு மாமனும் Dr. சிவசண்முகராசா (சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), சுமதி (அவுஸ்திரேலியா) லோகேஸ்வரன் (தொழில் அதிபர்), லதாவாணி (ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி), சிவாஜினி (ஆசிரியர், யா/மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை), சிவலோஜினி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம்) ஆகியோரின் மைத்துனரும் ஜீவசியாமினி (முகாமைத்துவ உதவியாளர் மாநகர சபை யாழ்ப்பாணம்), இளங்கோ (அதிபர்-யா/சோமாஸ்கந்த கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்), கமலராஜன் (பிரதிக் கல்வி; பணிப்பாளர் மாகாண கல்வித்திணைக்களம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு பி.ப 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7886)

கோவில் வாசல், இணுவில் மேற்கு, இணுவில்
021 224 1507/ 077 115 5248
தகவல்: குடும்பத்தினர்

# துயர் பகிர்கின்றோம்



அமரர்.வைத்திய கலாநிதி.
## அம்பலவாணர் ரகுபதி

(வைத்திய நிபுணர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, இணுவில் அறிவாலய ஆயுட்கால உறுப்பினர்)

தமது அர்ப்பணிப்பான வைத்திய சேவையால் அனைவரதும் நீங்காத மனங்கவர்ந்த உத்தமர் மறைவால் வாடி நிற்கும் அவரது குடும்பம், உற்றார், உறவினர்கள், ஊர்மக்கள், நண்பர்கள் அனைவருடனும் எமது துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

இணுவில் அறிவாலயம் (7385)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர்.அ.ரகுபதி

(பொது வைத்திய நிபுணர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

எமது கல்லூரியின் புகழ்பூத்த கணித ஆசிரியை திருமதி வதனி ரகுபதி அவர்களின் கணவர் திரு.அ.ரகுபதி அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
நலன்புரிச் சங்கம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி. (7862)

# வல்வைப் பகுதியில் தூர்ந்து காணப்படும் குளங்களைப் புனரமைக்க நடவடிக்கை

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வல்வைப் பகுதியில் தூர்ந்து காணப்படும் குளங்களை புனரமைப்பதன் மூலம் விவசாயத்திற்கும், நன்னீருக்கும், கைகொடுப்பதோடு வெள்ளப் பாதிப்பிலிருந்தும் அப்பிரதேச மக்கள் மீட்சி அடைவதற்கு ஏதுவாக அமையும் என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தொண்டைமானாறு நன்னீர் திட்ட நீர்த் தேக்கம் காரணமாக உரிய அணைக் கட்டுக்கள் இல்லாமையினால் குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் தேங்குவதற்கு காரணமாகியுள்ளது எனவும் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். பாதிப்படைந்த மக்களின் நிலைமைகள் தொடர்பாக இணைப்பாளர்கள் தெரியப்படுத்தியுள்ளனர். பிரதேச கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன்.

அபிவிருத்திகள் மக்களின் வாழ்க்கைக்கான மேம்பாடாக இருக்கும் அதேவேளை பாதிப்புக்களை ஏற்படுத்தாதவாறு அமைய வேண்டும்.

எமது வளமான குடி நீர் உவர் நீராகி மாசுற்று வருகின்றது. விவசாய தேவைகளுக்கும் நிலத்தடி நீரை நம்பியிருக்கும் சூழ்நிலையில் ஆயிரம் குளங்கள் ஆயிரம் கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்திலும் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அவை விவசாயத்திற்கும், நன்னீர் செயற்றிட்டத்திற்கும். நன்னீர் மீன்பிடிக்கும் உறுதுணையாக காணப்படும்.

ஜே/281, ஜே/282, ஜே/285 மற்றும் ஜே/286 கிராம உத்தியோகத்தர் பிரிவின் அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு, நாவல் காடு மற்றும் தம்பாளை கதிரிப்பாய், வருணன் ஆகிய கிராம பகுதிகளில் நீர்த்தேக்கம் காரணமாக, பகுதி மக்கள் இடர்படும் பெரும்பாலான பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, பிரதேச மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.



இவ் விடயத்திற்குரிய அதிகாரிகளுடனும் நடவடிக்கைகளைத் துரிதமாக பெற்று வழங்குவதற்கு எமது சுதந்திரக்கட்சி காரியாலய இணைப்பாளர்கள் ஆராய்ந்திருந்தனர்.

மயானக் கழிவுகள் மற்றும் பிரதேச குப்பை கழிவுகள் வெள்ள நீரோடு கலப்பதன் காரணமாக சுகாதார பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

பிரதேச பாடசாலை மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவித்துள்ளார்.


வல்லை பகுதியில் விவசாய பகுதியில் காணப்படும் குளங்களைப் புனரமைப்பதன் மூலம் வெள்ள பாதிப்பை குறைவடைய செய்யலாம். இவற்றை நிரந்தரத் தீர்வாக பிரதேச மக்களுக்கு பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.


தாழ்நிலப் பகுதிகளை அண்டிய குடியிருப்பு பிரதேச மக்கள் மற்றும் விவசாயிகளும் இதனால் பாதிப்படைந்துள்ளனர். எமது பிரதேச காரியாலய இணைப்பாளர்களும் நேரில் விஜயம் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

இவை தொடர்பாக அனர்த்த முகாமைத்துவம் மற்றும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் போதியளவிலான அத்தியாவசிய தேவைகளை வழங்க நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளுமாறு தெரியப்படுத்தியுள்ளேன்.

தொடர்ந்தும் பிரதேச மக்களுக்காக எந்நேரமும் உதவிகளை வழங்க எமது இணைப்பாளர்கள் தயாராக உள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இரமாநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-89)

# வீதிப் புனரமைப்புப்பணி ஆரம்பம்





(யாழ்பாணம்)

நீண்டகாலமாக செப்பனிடப்படாது காணப்பட்ட அராலி கணவக்கை வீதி, மற்றும் பித்தனை மயான வீதிகளின் புனரமைப்பு தொடர்பான முன்னெடுப்புக்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான சிவகுரு பாலகிருஷ்ணன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மக்களுக்குப் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்திவந்த குறித்த வீதிகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த வீதிகளின் அளவுப் பிரமாண நடவடிக்கைகளை வலி.மேற்கு பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த பகுதிக்கு சென்ற சிவகுரு பாலகிருஷ்ணன் அவ்வீதியின் செப்பனிடல் தொடர்பான நடவடிக்கைகளை பார்வையிட்டதுடன் வீதிப் புனரமைப்பின்போது ஏற்படும் இடர்பாடுகள் தொடர்பிலும் ஆராய்ந்தறிந்துகொண்டனர்.

இதனிடையே வலிகாமம் வடக்கு கட்டுவன் மேற்கு பிரதேசத்தில் வாழும் வறிய குடும்பம் ஒன்றிற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களால் தற்காலிக வீடு ஒன்று புனரமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளையும் சிவகுரு பாலகிருஷ்ணன் தலைமையிலான முக்கியஸ்தர்கள் சென்று பார்வையிட்டதுடன் அக்குடும்பத்தின் அத்தியாவசிய பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு குறித்து சிகை ஒப்பனையாளர் ஒன்றியம் விளக்க அறிக்கை

(யாழ்ப்பாணம்)

06.12.2018 அன்று வலம்புரி பத்திரிகையில் "ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறக்கவும்'' என்ற கோரிக்கை சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினரால் விடுவிக்கப்பட்டதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இச் செய்தியில் எமது தொழிற்சங்கத்தின் மீது சில குற்றச்சாட்டு அல்லது தவறான தீர்மானங்கள் என்ற அடிப்படையில் செய்தி அமைந்துள்ளது.

எமது சங்கமானது தொழில் செய்யும் அங்கத்தவரின் நலன், தொழில் பாதுகாப்பு, வாடிக்கையாளர் நலன் எனும் கருப்பொருளை மையமாக வைத்து யாப்பு விதிமுறைகளை உருவாக்கி செயற்பட்டு வருகின்றது.

எனவே இந்த செய்தியின் விளக்கத்தையும் எந்த வேளையிலும் எமது சங்கமானது எமது கருப்பொருளில் இருந்து மாறாது என்றும் எமது சங்க செயற்பாட்டையும் எமது சமூக ஒற்றுமையையும் குழப்பும் தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமென தமிழ்த் தேசிய ஒற்றுமைக்காகவும் தமிழ் மக்களின் அபிவிருத்திக்காகவும் சேவையாற்றத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்தஅடிப்படையில்தான் ஞாயிற்றுக்கிழமைவிடுமுறை மற்றும் நேரக் கட்டுப்பாடு, புதிய தொழில் நிலையங்களுக்குரிய தூரக் கட்டுப்பாடுகள், புதியதொழில்நிலை யங்களுக்கு அனுமதி பெற வேண்டும் என்ற நடை முறையைக் கடைப்பிடிக்கின்றோம். எமது அங்கத்தவர்களின் தொழில் புரியும் மனைவி, பிள்ளைகள், பாடசாலை மாணவர்களுடன் எமது அங்கத்தவர்கள் சேர்ந்து சந்தோசமாக கழிக்கக் கூடிய தினம் ஞாயிற்றுக் கிழமையாகும்.

மற்றைய ஆறு தினங்களும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரையும் சனிக்கிழமை இரவு 11.30 மணிவரையும் விசேட தினங்களுக்கு முன்வரும் ஞாயிறு திறப்பதற்கும் ஏழு நாட்கள் நேரக் கட்டுப்பாட்டை தளர்த்தியும்விடுகின்றோம். இதனை விட அதிக நேரம் தொழில் புரிவதால் எமது அங்கத்தவர்களுக்கு ஏற் படும் உடல் பாதிப்புக்கும் தற்போதைய நாட்டுச் சூழல் இரவு நேரம் தாமதமாகிச் செல்லும் அங்கத்தவர்களுக்கு ஏற்படும் பாதிப் புக்கும் யார் பொறுப்பு? புதிய தொழில் நிலைய தூர கட்டுப் பாடானது எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களின் ஒற்றுமையையும் அவர்களின் தொழில் பாதிக்காத வகையில் நகரம், பிரதான வீதி, முக்கியசந்திகள், கிராமங்கள் என தூரம் வகுத்து எமது அங்கத்தவர் களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் வாடிக்கையாளருக்கு தேவை யான முறையிலும் நாம் மிகவும் கவனமான முறையில் அனுமதி வழங்குகின்றோம். புதிய தொழில் நிலையம் அனுமதி பெறாது திறப்பதாயின் எமது சமூக ஒற்றுமை பாதிப்படைவதுடன் அங்கத்தவர்கள் மிகவும் வருமான ரீதியில் பாதிப்படைவர் என்ற பல் வேறு காரணங்களை அடிப்படையாக வைத்து எமது சங்க நடவடிக்கை களை செயற்படுத்தி வருகின்றோம் என்ற தெளிவுடுத்தலை சமர்ப்பிக்க விரும்புகின்றோம். (இ)

## இராசி பலன்

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கலாம், பயணங்கள் ஏற்படலாம்.

**மேடம்:** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பாதியில் நின்ற பணியை விரைந்து செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** நேற்றைய பிணக்கொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் நிலை ஏற்படலாம், தேகநலனில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**மகரம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், வியாபார விரோதம் விலகும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், வளர்ச்சி கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், தொலைபேசி வழியில சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ்., சந் | இராசி பலன் | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு., புத., சூரி | சுக் | |

சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

**13.12.2018**

கார்த்திகை 27, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 11.52 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 6.29 மணிவரை
சுபநேரம் 7.50-9.20 மணிவரை
இராகுகாலம் 1.50-3.20 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்

வளவன்

# TEC (H) ZONE ரூபின்ஸ் மருத்துவமனை அருகாமை, நெல்லியடி

(கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகளுக்கு தனித்துவமான கல்வி நிறுவனம்)

2021 G.C.E (A/L) இற்கான புதிய வகுப்புகள் ஆரம்பம்

19.12.2018 புதன்கிழமை காலை 9.00 மணி

அனுமதிகள் 14.12.2018 இல் இருந்து

## எமது தனித்துவமான ஆசிரியர் குழாம்

விஞ்ஞானப் பிரிவு

**பௌதிகவியல்**

திரு.S. சோதிலிங்கம் B.Sc (Hons)
திரு. J. சந்திரப்பிரகாசம் (SP) M.Sc (Phy)
திரு. V. மணிவர்மன் M.Sc (Phy)

**இரசாயனவியல்**

திரு. S. தங்கராசா B.Sc
திரு. K. சிவத்திரன் B.Sc (Hons)
திரு. K. மயூரன் B.Sc (Reading)

**இணைந்த கணிதம்**

திரு. P. விமலநாதன் B.Sc (Hons)
திரு. V.தயாபரன் M.Sc. (Maths)
திரு. V. நிதர்சன் B.Sc. (Hons)

**உயிரியல்**

திரு.C. இளங்கோ M.Sc (Biology)
திரு.P. சுரேந்தர் M.Phil (Reading)
திரு.R. தபேஸ்வரன் M.Sc (Molecuar Biology)

தொழில்நுட்பப் பிரிவு

**தகவல் தொழில்நுட்பம்**

திரு.M. ரவிவர்மன் M.Sc (IT)
திரு. V.அகிலன் B.Sc

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்**

திரு.A. கோகுலராஜன் B.Sc (Agri)

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**

திரு.M. செல்வச்சந்திரன் B.Sc
திரு. N. ரஜீதரன் (Dip in EEE)
திரு.V. மதிவண்ணன் M.Sc (Phy)

**தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்**

திரு.P. சுரேந்தர் M.Phil (Reading)
திரு.M. ரவிவர்மன் (M.Sc (IT)
திரு. J. ஜெவிர்ஸன் B.Sc (Special)

**விவசாய விஞ்ஞானம்**

திரு. A. கோகுலராஜன் B.Sc (Agri)

மீட்டல் மற்றும் கலந்துரையாடலிற்கான ஆசிரியர் குழாம்

**பௌதிகவியல்**

திரு. V. பிரபாகரன் B.Sc (யா/ ஹாட்லிக் கல்லூரி)
திரு. V. மதிவண்ணன் M.Sc (Phy) (யாழ். ஹாட்லிக்கல்லூரி)
திரு. J. ஜெவிர்ஸன் B.Sc (Special) (யா/ஹாட்லிக் கல்லூரி)

## G.C.E. (A/L) 2017 பரீட்சையில் எமது நிறுவனத்தின் சாதனைகள்

**J/Hartly College-Maths Stream**

| Name | Results |
|---|---|
| S.Thuvarakan | 3A |
| R.Ragavan | 3A |
| K.Pirathees | 2AB |
| I.Krishnalojan | 2AB |
| S.Thiluxshan | 2AB |
| K.Thinesh | A2B |
| S.Thulasigan | A2B |
| P.Kanimaruthan | 2AB |
| K.Ragulan | 2AB |
| P.Kajan | A2B |
| S.Akalyan | A2B |
| S.Neerujan | A2B |
| J.Jeneevan | A2C |

- யா/ ஹாட்லிக் கல்லூரியில் எமது நிறுவன மாணவன் S. துவாரகன் 3A பெறுபேற்றை பெற்று தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பொறியியல் துறைக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இக் கல்லூரியில் பொறியியல் துறைக்கு தகுதியானவர்களில் 62.5% எமது மாணவர்கள்.
- இக் கல்லூரியின் கணித பிரிவில் சிறந்த பெறுபேறில் 70% மேல் எமது மாணவர்கள்

**J/N.C.C, J/V.H.G.C, J/V.C.L.C கணித பிரிவு**

| Name | School | Results |
|---|---|---|
| S.Priyaraj | J/Nelliady C.C. | 2A,B |
| S.Sivanujan | J/Nelliady C.C. | ABC |
| P.Sarujan | J/Nelliady C.C. | ABC |
| R. Ragul | J/Nelliady C.C. | 3C |
| M.Keerthana | J/Vada C.L.C. | A2B |
| S.Vithursiga | J/Vada H.G.C. | A2B |
| Y.Suviththa | J/Vada H.G.C. | 2AC |
| J.Abitharani | J/Vada H.G.C. | ABC |
| T.Vaanathi | J/Vada H.G.C. | BCS |
| S.Sribavatharani | J/Vada H.G.C. | BCS |

- நெல்லியடி மத்திய கல்லூரியில் பொறியியல் துறைக்கு தகுதியானவர்களில் 100% எமது மாணவர்கள்
- J/V.H.G.C. இல் கணித பிரிவில் சிறந்த பெறுபேறில் 70% மேல் எமது மாணவர்கள்

**J/Methodist Girls High School-Maths Stream**

| Name | Results |
|---|---|
| A.Sangeetha | A2B |
| P.Abinaya | A2C |
| T.Sankavi | A2C |
| G.Suganthini | A2C |
| R.Sathusha | 2BC |
| S.Nirujah | BCS |

- இக் கல்லூரியில் பொறியியல் துறைக்கு தகுதியானவர்களில் 50% எமது மாணவர்கள்
- இக் கல்லூரியின் கணித பிரிவில் சிறந்த பெறுபேறில் 65% மேல் எமது மாணவர்கள்

**உயிரியல் பிரிவு Bio Stream**

| Name | School | Results |
|---|---|---|
| S.Krishanthan | J/N.C.C. | 3A |
| S.Nirosa | J/N.C.C. | ABC |
| S.Kirusiga | J/N.C.C. | BCS |
| P.Rammiya | J/N.C.C. | BCS |
| R.Nilani | J/N.C.C. | CSS |

- நெல்லியடி மத்திய கல்லூரியில் இருந்து S. கிருசாந்தன் 3A (மாவட்ட நிலை 15) மருத்துவ துறைக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- சென்ற வருடம் எமது நிறுவனத்திலிருந்து இரண்டு மாணவர்கள் மருத்துவத்துறைக்கு தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- பாட ரீதியான தொடர் மாதாந்தப் பரீட்சைகள்
- யாழ். மாவட்டத்தில் கல்வித் துறையில் முப்பது வருடங்களாக முன்னணியிலுள்ள அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலுடன்
- கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கான மேலதிக விசேட வகுப்புக்கள்
- மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மற்றும் ஒழுக்கம் தொடர்பான பெற்றோர் சந்திப்புக்கள்.
- நவீன கற்றல் உபகரணங்களுடனான கற்பித்தல்.

**TEC (H) ZONE**
(ரூபின்ஸ் மருத்துவமனை அருகாமை, நெல்லியடி)
நிர்வாகம்- 077 696 5434



# NEW SCIENCE HALL

KANNATHIDDY — JAFFNA

## 2021 A/L

## கணித உயிரியல் பிரிவு

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு.S. சோதிலிங்கம்- திரு. N. கபிலன் | MR.S.SOTHILINGAM |
| திரு.G. பிரபா- திரு.K. செல்வன் | MR.M.KUGANESWARAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு.K. சிவத்திரன் திரு.N. மகேஸ்வரன் | MR.G.BENO |
| திரு.G.BENO திரு. T. சுசாந்தன் | MR.N.MAHESWARAN |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| எமது வழமையான ஆசிரியருடன் | OUR USUAL TEACHER |
| திரு.T. கெங்காதரன் திரு. K. இராகவன் | MR.S.P.NAGANATHAN |
| **COM. MATHS** | **COM. MATHS** |
| திரு.P. செந்தில்நாதன் - திரு. S. சிவகரன் | MR.P.SENTHILNATHAN MR.S.SIVAKARAN |

ஆரம்பம்- 14.12.2018 FRIDAY-7.00 AM

https://facebook.com/ new science hall jaffna 077 791 7611

(C-4677)

# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் பாரிய புத்தர் சிலை திறக்க ஏற்பாடு

## தமிழ்மொழி பெயர்ப்பலகை அழிப்பு; சிங்களமொழியில் எழுதி நிறுவப்பட்டுள்ளது



(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை பிரதேசத்தில் நீராவியடி ஏற்றத்தில் நெடுங்காலமாக பிள்ளையார் ஆலயம் இருந்தது. இந்த ஆலய வளாகத்தில் தற்போது பாரிய புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு திறப்பதற்கான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை பிரதேசத்தில் நீராவியடி ஏற்றத்தில் தங்கள் மூதாதையர் வாழ்ந்த காலம் முதல் இறுதி யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து செல்லும் வரை பல நெடுங்காலமாக பிள்ளையார் ஆலயம் தங்களால் வழிபடப்பட்டு வந்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்து பல்வேறு துன்பங்களின் பின்னர் மீள் குடியேறியபோது குறித்த ஆலய சூழலில் பாரிய இராணுவ முகாம் காணப்பட்டமையால் குறித்த பகுதிக்கு மக்கள் அச்சம் காரணமாக ஆலயத்துக்கு செல்லமுடியாது இருந்தனர்.

இந் நிலையில் 2013 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் மருதானையை சேர்ந்த கொலம்ப மேதாலங்க தேரர் குறித்த நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தை ஆலயத்துக்கு அருகில் இருந்த இராணுவத்தினரது உதவியோடு ஆக்கிரமித்து குறித்த ஆலய வளாகத்தில் சிறிய கூடாரம் ஒன்றை நிர்மாணித்து அங்கு குடிகொண்டார்.

அதன் பின்னர் குறித்த பகுதியை தொல்பொருள் பிரதேசமாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் குறித்த பகுதியை சரியான பெயர்கூட இல்லாது செட்டிமலை என்ற பெயருடன் வர்த்தமானியில் வெளியிட்டுவிட்டு குறித்த பகுதியே செட்டிமலை என வாதிட்டு அந்த இடத்தில் விகாரைகளை நிர்மாணித்து வந்துள்ளார்.

மக்களது எதிர்ப்புக்கள் எல்லாவற்றையும் தாண்டி இந்த இடத்தை அபிவிருத்தி செய்தவர் 2015 ஆட்சிமாற்றத்தின் பின்னர் பாரிய அளவில் எந்தவொரு கட்டுமானப் பணிக்கும் இடமளிக்காது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மக்கள் மேற்கொண்டுவந்த நிலையில் அண்மையில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக அறிவிக்கப்பட்டவுடன் குறித்த பகுதியில் பாரிய புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு தற்போது அதனுடைய அபிவிருத்தி வேலைகள்இடம்பெற்று அதனை திறப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைவிடவும் ஆலயத்தின் அடையாளங்களை அளிக்கும் முகமாக நீராவியடி பிள்ளையார் ஆலயம் பழைய செம்மலை என தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்த பெயர்ப் பலகையை அழித்து புதிதாக சிங்கள மொழியில் பெயர்ப் பலகையையும் நிறுவியுள்ளார்.

குறிப்பாக இந்த செயற்பாடு தமிழ் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பலைகளை ஏற்படுத்தினாலும் மக்களது கருத்துக்களை மதிப்பளிக்காது இனமுறுகலை ஏற்படுத்தும் வகையிலான இந்த செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் இந்த செயற்பாடுகள் தொடருமிடத்தில் இன முறுகலே ஏற்படும் எனவும் மக் கள் தெரிவிக்கின்றனர். (2-281)




# மனிதப்புதைகுழி விவகாரத்தை ஐ.நா.பொறுப்பேற்று ஆய்வு செய்ய வேண்டும்

## வடக்கு,கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களின் மக்கள் ஒன்றிணைந்து மன்னாரில் போராட்டம்









(மன்னார்)

மன்னார் "சதொச" வளாகத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளை ஐ.நா.சபை பொறுப்பேற்று அதற்கான உரிய ஆய்வுகளை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வட-கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி வட- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற குறித்த அமைதி போராட்டத்தின் போது மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை உட்பட எட்டு மாவட்டங்களில் இருந்து மக்கள் வருகை தந்திருந்தனர்.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்ட, கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள்,அரசியல் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னாரில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதை குழி தொடர்பாக ஐ.நா.சபை பொறுப்பேற்று அதற்கான உரிய ஆய்வுகளை செய்ய வேண்டும், குறித்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் யார்?, புதைத்தவர்கள் யார்?, என்பது தொடர்பாக வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர்.

எனவே ஐ.நா.சபை குறித்த மனித எலும்புக்கூடுகளை பொறுப்பேற்று ஆய்வு செய்து நீதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததோடு, பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும்நாட்டில்இடம்பெற்று வரும் அரசியல் பிரச்சினை காரணமாக தாம் நம்பிக்கை இழந்து விட்டதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததோடு, குறித்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக ஆய்வுகளையும், வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வரும் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்புக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் ஐ.நா.சபைக்கு எழுதப்பட்ட மகஜர் ஏற்பாட்டுக் குழுவினரால் வாசிக்கப்பட்டதோடு, ஐ.நா.சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (2-285)

## 75 வருடம் பழைமை வாய்ந்த ஆலமரம் முறிந்து விழுந்தது

(பனிக்கன்குளம்)


முல்லைத்தீவு சிலாவத்தைப் பிரதான வீதியில் 75 வருடம் பழைமைவாய்ந்த ஆலமரம்ஒன்று முறிந்து விழுந்துள்ளது. இதனால் முல்லைத்தீவு- திருகோணமலை பிரதான வீதியில் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டிருந்தது.

சிலாவத்தை பிரதான வீதியோரத்தில் காணப்படும் இந்த பெரிய ஆலமரம் நேற்று முன்தினம் இரவு வீதியை குறுக்கறுத்து முறிந்து விழுந்துள்ள நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்தனர்.

மேலும் அவ்விடம் சென்ற வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் முறிந்து விழுந்த ஆலமரத்தை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (2-281)

## வீட்டிற்குள் நுழைந்து ஒழிந்து கொண்ட முதலையை மடக்கிப் பிடித்த பொலிஸார்

(பனிக்கன்குளம்)



வவுனியா ராசேந்திரகுளம் பகுதியில் நேற்று அதிகாலை வேளை வீட்டிற்குள் முதலை ஒன்று புகுந்துள்ளது. இதையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து முதலையை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம்குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வீட்டு வளவு ஒன்றிற்குள் ராசேந்திர குளப்பகுதியிலிருந்த முதலை ஒன்று உணவு தேடிச் சென்று ஒழிந்து கொண்டுள்ளது. நாயின் சத்தம் கேட்டு வீட்டின்உரிமையாளர்வெளியே சென்று பார்வையிட்டபோது முதலை ஒழிந்து இருந்தது தெரியவந்துள்ளது.

இதையடுத்து நெளுக்குளம்பொலிஸாருக்கு தகவல்வழங்கப்பட்டு பொலிஸார் சென்று முதலையை மடக்கி பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். பின்னர்வனஜீவராசிகள்திணைக்களத்திற்கும் தகவல் வழங்கி நேற்றுக் காலை முதலையை அங்கிருந்து எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# சிங்கள மீனவர்களால் பருவகால மீன்பிடித் தொழிலை செய்ய முடியவில்லை

## நாயாற்று மீனவர்கள் கவலை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலைகளாலும் கடற்சீரின்மை காரணமாகவும் மீனவர்களது தொழில்கள் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக நாயாற்று பகுதியில் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ள மீனவ குடும்பங்கள் கடந்த இரண்டு மாதங்களாக கடற்றொழிலுக்கு செல்லவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அந்தப் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள அந்தப்பகுதி மீனவர்கள் தற்பொழுது கடற் போராட்டத்துடன் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

நாயாற்று பெருங்கடற் பகுதி கடற்கரையில் இருந்து 10 மீற்றர் தூரத்தில் சுமார் 20 அடி ஆழமாக அதிகரிக்கின்றது. இதன்படி 100 மீற்றர் தூரத்திற்கு 200 அடி கடல் ஆழம் கொண்ட கடற்பகுதி இது என குறிப்பிடப்படுகின்றது.

மிக ஆழாமான இந்தக் கடற்பகுதி தற்பொழுது சீரற்ற நிலையில் காணப்பட்டாலும் தமது வறுமையை நீக்க ஆபத்தான இந்த கடற்றொழிலை மேற்கொள்ள வேண்யுள்ளது என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்தப் பகுதியில் பருவகாலத் தொழிலுக்காக வருகைதரும் சிங்கள மீனவர்களால் பாதிக்கப்படும் இந்த மீனவர்கள் தற்போது பருவம் நிறைவடைந்து சிங்கள மீனவர்கள் சென்றுள்ள நிலையில் பருவகாலத் தொழில் உரியமுறையில் செய்யாததால் ஆபத்தான நிலையிலும் தற்போது தொழிலுக்கு சென்றுள்ளனர்.

குறிப்பாக இந்தப்பகுதியில் குறித்த மீனவர்களின் வாடிகள், உடைமைகள் கடந்த காலத்தில் எரியூட்டப்பட்ட நிலையில் இதுவரை அவர்களுக்கான இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் வாழ்வாதாரமின்றி துன்பப்படும் மீனவர்கள் கடற்சீற்றத்தையும் கருத்தில் கொள்ளாது தமது வாழ்வாதாரத்துக்காக தொழிலில் ஈடுபடுகின்றனர்.

தற்போது கடலடி காரணமாக அனைத்து மீனவர்களும் களப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளதால் அங்கும் மீன்பிடியில் ஈடுபட முடியாது. எனவே உயிரை வெறுத்தேனும் குடும்பத்தை வாழவைக்க தொழிலுக்குச் செல்ல வேண்டும் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

# நந்திக்கடலில் கூட்டுவலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவதற்கு முற்றாகத்தடை

## முல்லைத்தீவு மாவட்ட சமாசத் தலைவர் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் கூட்டுவலைகளைப்பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவது முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ஞா.அன்ரனி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுகடல் பகுதியான நந்திக்கடல் பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில் சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த சிறுகடல்பகுதியில் தொழில் செய்வதற்கான விதிமுறைகளைப் பின்பற்றி அதன்மூலம் தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் வெளியிடங்களில் இருந்து வரும் சில தொழிலாளர்களாலும் இப்பகுதியிலுள்ள குறிப்பிட்ட சில தொழிலாளர்களாலும் சட்டவிரோத கூட்டுவலை பயன்படுத்தப்பட்டு தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்தாண்டில் பெருமளவான கூட்டுவலைகள், தங்கூசி வலைகள் என்பவற்றைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட பெருமளவான வலைகளும் அழிக்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சமாசத் தலைவர், கடந்த காலங்களிலும் இவ்வாறான கூட்டு வலைகள் ப்யன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் சட்டவிரோதமாக இந்தத்தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

நந்திக்கடல் பகுதியில் இறுக்கமான நடைமுறைகள்இல்லாத காரணத்தினால் இந்தக்கூட்டு வலைகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுவலை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.



இந்தக்கூட்டு வலைகளைப் பயன்படுத்தப்படுவதனால் இந்த சிறுகடல் பகுதியில் இயற்கையாகவே உற்பத்தியாகும் இறால், மீன் என்பவற்றின் பெருக்கம் அற்றுப்போவதுடன், கடல்வாழ் ஏனைய உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.

எனவே இக்கடற்பகுதிக்கு இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி கூட்டு வலைகளைப் பயன்படுத்துவது முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# மழை வெள்ளத்தினால் நிலக்கடலை செய்கை முல்லைத்தீவில் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த மழை வெள்ளம் காரணமாக நிலக்கடலை செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர் .

இம் மாவட்டத்தில் இம்முறை அதிகளவான நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக நிலக்கடலை செய்கை பெரிதும் பாதிப்படைந்ததாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பிரதேசங்களில் அதிகளவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக வயல்களில் வெள்ளம் தேங் கியிருப்பதால், நிலக்கடலை அழிவடைந்துள்ளன என் றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்மாவட்டத்தில்இம்முறை 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# திருநகர் பொதுமயானத்திற்கு எரிகொட்டகை அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையினால் திருநகர் பொதுமயானத்தில் சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவில் எரிகொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட திரு நகர் பொது மயானத்தில் சுமார் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான பிரதேச சபையின் நிதியிலிருந்து எரி கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கரை ச்சிப் பிரதேச சபையின் தவிசாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் இரண்டு மிலலியன் ரூபா செலவில் சுற்றுமதில் அமைக்கும் வேலைகளும்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (2-315)

# விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மரவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பு 11.12.2018 அன்று ஒட்டுசுட்டான் விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மாகாண விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எஸ்.உலகநாதன் கலந்துகொண்டு நிகழ்வை தொடக்கி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நிலக்கடலை செய்கை தொடர்பிலும் நேற்றைய தினம் கற்றாழை உட்பட உணவு உற்பத்தி தொடர்பிலும் இன்று பழமரச்செய்கை பராமரிப்பு தொடர்பிலும் விவசாய போதனாசிரியரால் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# பன்னங்கண்டி வீதியிலுள்ள பாலத்திற்கு தற்காலிமாக இரும்புக் கம்பிகள் அமையுங்கள்

## பொதுமக்கள், மாணவர்கள் கோரிக்கை



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரடிப் போக்கு பன்னங்கண்டி வீதியில் அமைந்துள்ள பாலத்தின் இருபக்க மதகுகள் அற்றநிலையில் காணப்படுவதனால் போக்குவரத்துக்கு பொது மக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் என பலர் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப் டுகின்றது.

கிளிநொச்சி குளத்திலிருந்து வான்பாய்கின்ற நீரானது பன்னங்கண்டி வீதியில் அமைந்துள்ள பாலத்தினூடாகவே செல்கின்றது. ஆதலால் மிகவும் வேகமாக செல்லும் நீரில் சிறுபிள்ளைகள் விழுந்தால் நீரில் இழுத்து செல்லும் நிலை காணப்படுகின்றது

பன்னாங்கண்டி வீதி புனரமைக்கும் போது இப் பாலத்தையும் அமை த்திருக்க வேண்டும். ஆனால் நீர்ப்பாசன திணைக்களத்தினர் இப்பாலத்தை அமைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

குறித்த பாலத்துக்கு தற்காலிகமாவது இரும்பு கம்பிகளிலாவது அமைத்துத் தந்தால் உயிராபத்திலிருந்து பாதுகாக்க முடியும் என மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். (2-312)

# கேரள கஞ்சாவுடன் பேருந்தில் பயணித்த நபர் கைதானார்

(பனிக்கன்குளம்)

வவுனியா நொச்சிமோட்டை பாலத்தில் பொலிஸாரின் வழமையான சோதனை நடவடிக்கையின்போது 700 கிராம் கேரள கஞ்சாவுடன் 33 வயதுடைய வாரிய பொல பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்பு போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

தமது வழமையான சோதனை நடவடிக்கையின் போது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பொத்துவில் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்தில் பயணித்த வாரியபொல பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது உடைமையில் மறைத்து வைக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட 700 கிராம் கேளர கஞ்சாவை மீட்டுள்ளதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேய விக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் சிறப்பு போதை ஒழிப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)

# மண் அகழ்வில் ஈடுபட்ட 11 டிப்பர்கள் கைப்பற்று சாரதிகளும் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் பகுதியில் சட்டவிரோத கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்ட 11 டிப்பர்களை கைப்பற்றியுள்ளதாகவும் அதன் சாரதிகளையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் போலி அனுமதிப் பத்திரம் தயாரித்து அதனை வைத்து கிரவல் அகழ்வில் ஈடுபட்ட எட்டு டிப்பர்களையும் நேரம் கடந்து கிரவல் ஏற்றிச்சென்ற 3 டீப்பர்களையும் கிளிநொச்சி முல்லைத்தீவுமாவட்ட பெருங்குற்றப்பிரிவு மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட டிப்பர்களும் சாரதிகளும் மாங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான சட்ட நடவடிக்கையை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றார்கள்.(2-281)

# கள்ளப்பாடு தெற்கில் பாழடைந்த கிணறுகளை மூடுங்கள்-மக்கள்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கள்ளப்பாடு மற்றும் கடற்கரை பகுதிகளில் 10 இற்கு மேற்பட்ட பாழடைந்த கிணறுகள் மற்றும் மலக்குழிகள் காணப்படுகின்றன. இதனால் உயிராபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆம் திகதி சிறுவன் ஒருவன் பாழடைந்த கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

கடந்த 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலையின் போது பல கிணறுகள், மலக்குழிகள் அடித்து சேதமாக்கப்பட்டுள்ளன.

அவை இன்றும் பாழடைந்த நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளார்கள். தற்போது பெய்துள்ள மழையினால் ஆங்காங்கே காணப்படும் கிடங்குகள் மற்றும் கிணறுகள் சிறுவர்களுக்கு ஆப்த்தானதாக காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கூடிய கருத்தில் எடுத்து மக்கள் குடியிருப்புக்கு அருகில் இருக்கும் குறித்த பாழடைந்த கிடங்குகள் மற்றும் கிணறுகளை மூட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (2-281)

# 2019 ஆம் ஆண்டு பாதீடு தொடர்பான முதல்வரின் உரை



ஐந்து வருடங்களுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடனும் ஒத்துழைப்புடனும் இந்த பாதீடு முன்மொழியப்படுவதனையிட்டு பெருமையடைகின்றேன். இந்த பாதீடு மக்களின் உண்மையான தேவைகள் மற்றும் நலன்களை அடிப்படையாகக் கொண்ட வெற்றிகரமான ஒன்றாகவும், அடுத்த ஆண்டு எமது மாநகரம் தற்போதைய நிலையிலிருந்து கணிசமான முன்னேற்றத்துடன் முன்னோக்கி நகர்ந்த ஓர் ஆண்டாக மாறுவதற்கு முக்கிய பங்கை வகிக்கும் ஒன்றாகவும் மாற வேண்டும் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன். அதே வேளை இந்த பாதீட்டை தயாரிப்பதில் ஒத்துழைத்த அனைவருக்கும் ஆரம்பமாக நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதற்கட்டமாக யாழ். மாநகரம் ஏனைய மாநகரங்களுக்கு ஈடான ஒரு மாநகரமாகவும் எமது அனைவரினதும் ஒன்றித்த செயற்பாடுகளினூடாக மிகக் குறுகிய காலத்திற்குள் அந்நகரங்களுக்கு உதாரணமான ஒரு நகரமாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது எல்லோரினதும் அவா என்று 'கருதுகின்றேன். இவ்வருடம் நாம் தீர்மானிக்கும் விடயங்கள் இச்செயற்பாட்டை செய்து முடிப்பதற்கான நல்ல ஆரம்பத்தினை கொடுக்கும் என்ற எதிர்பார்ப்போடு இந்த பாதீடு முன்மொழியப்படுகின்றது.

எமது பணி நோக்கையும் பணிகளையும் இவ்விடத்தில் ஞாபகப்படுத்திக் கொண்டு இவ்வருடத்திற்கான நோக்கங்களை தங்களின் கவனத்திற்கு கொண்டு வரலாம் என்று நினைக்கின்றேன்.

**எமது மாநகரத்தின் பணி நோக்கம்**

பொதுமக்கள் சுகாதாரம், பொதுமக்கள் பயனுறு சேவைகள், பொது வீதிகள் என்பவற்றுடன் தொடர்புறும் அலுவல்கள் அனைத்தையும் கிரமப்படுத்தலும், கட்டுப்படுத்தலும், நிர்வகிப்பதும் என்பதுடன் பொதுமக்களின் சௌகரியம், வீதி நலன்கள், மாநகர வசதிகள் என்பவற்றை பாதுகாத்தலும் மேம்படுத்தலும்.

**எமது பணிகள்**

கீழ்வரும் சேவைகளை தாபித்தல், பராமரித்தல், வழங்கல் என்பன மாநகரத்தின் பிரதான பணிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

1. தெருக்கள், மதகுகள், தெருவிளக்குகள்.
2. திண்மக் கழிவு முகாமைத்துவம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுகாதார நலன்கள்.
3. நீர் விநியோகம், கழிவு நீரகற்றல்.
4. சந்தைகள்
5. பொழுதுபோக்கு, ஓய்வு வசதிகள், விளையாட்டு மைதானங்களும், அரங்குகளும்.
6. நூலகம், கல்வி மற்றும் கலாசார மேம்பாடு.
7. மயானங்கள் மற்றும் சேமக்காலைகள்.
8. தீயணைக்கும் படை.
9. குளங்கள், வாய்க்கால்கள், வடிகான்கள்.
10. மகப்பேற்று இல்லம், சிகிச்சை நிலையம் மற்றும் சிறுவர் மேம்பாடு.

**எமது செயற்பாடு**

மக்கள் எங்களை இச்சபைக்கு எந்த நோக்கத்திற்காக தேர்ந்தெடுத்தார்களோ அவற்றை நிறைவேற்றுவது எமது பொறுப்பாகும். கடந்த ஐந்து வருடங்களாக மக்கள் பிரதிநிதிகளின்றிய மாநகர சபையாக யாழ்.மாநகர சபை காணப்பட்டது. அத்துடன் பல விடயங்கள் நீண்டகாலமாக மீளாய்வுக்கோ மாற்றங்களுக்கோ உட்படாது இருந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. இது மட்டுமல்லாது அனைத்து செயற்பாடுகளிலும் எதிர்வரும் வருடங்களில் இணைந்து மாற்றங்களை கொண்டு வருவதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் சிறந்த மாநகரை எமது தவணை நிறைவுறும்போது திருப்தியுடன் கையளிக்கலாம். எனவே இம்மாற்றம் நோக்கிய பயணத்தில் அனைவரும் இணைந்து செயற்படுவோம் என்ற அழைப்பை விடுக்கின்றேன்.

மக்கள் சேவைக்கும் அபிவிருத்திக்கும் மக்களின் நலன்களுக்கும் முதலிடம் வழங்குவோம். அந்த உன்னத நோக்கத்தை அடைந்து கொள்ள இப்பாதீடு காரணமாக அமையும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். பாதீடு என்பது அடுத்த ஆண்டுக்கான எமது மாநகர சபை செயற்பாடுகளின் தொகுப்பாகும். மாநகர சபையின் உறுப்பினர்களின் புத்தாக்க ஆலோசனைகள் வரவேற்கப்படுவதோடு அவற்றையும் இணைத்து எமது 2019 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை ஒரு சிறந்த பாதீடாக அமைத்துக் கொள்வோம் என்றவேண்டுதலுடன் அனைவரினதும் அங்கீகாரத்துக்காக முன்மொழிகின்றேன்.

உங்கள் அனைவரினதும் உள்ளீடுகள் இதற்கு அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது. அத்தோடு இப்பாதீடு அனைவரினதும் அசீர்வாதத்துடன் நிறைவேற்றப்பட்டு அடுத்த ஆண்டை வெற்றிகரமாக ஆரம்பித்து அனைத்து திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வெற்றி கொண்டாட வேண்டும் எனவும் நான் எதிர்பார்க்கின்றேன்.

**2019 ஆம் ஆண்டுடின் பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றை நான் முன்மொழிகின்றேன்**

1. மாநகரத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்கான பொறிமுறை வகுக்கப்பட்டு மாநகரத்தின் வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை ஏற்படுத்தல்.
2. மாநகர ஊழியர்கள் அனைவரும் வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குவதற்கான வசதிகளை செய்து, மக்களுக்கு சிறந்த சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்தல்.
3. மாநகர நிலையியற் குழுக்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி மக்கள் சேவையினை உறுதிபடுத்தல்.
4. மாநகரத்துக்கான கட்டடத் தொகுதியின் நிர்மாண வேலைகளை ஆரம்பித்தல்.
5. பிரட்டு நிலையங்களை அபிவிருத்தி செய்து மாநகர திண்மக் கழிவு முகாமைத்துவத்தை ஒழுங்குபடுத்தல். தற்போது காணப்படும் 07 பிரட்டு நிலையங்கள் 09 ஆக அதிகரிக்கப்பட்டு மூன்று வட்டாரங்களுக்கு ஒரு பிரட்டு நிலையம் என்ற அடிப்படையில் சகல வசதிகளுடனும் விருத்தி செய்யப்பட்டு அதனூடாக அந்த வட்டாரங்களின் அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல்.
6. சந்தைகள் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டு மாநகர மக்களுக்கும் ஏனையோருக்கும் சிறந்தசேவையை உறுதிபடுத்தல்
7. நவீன சந்தைக் கடைத் தொகுதி கிரமமாக வாடகைகள் தீர்மானிக்கப்பட்டு கொடுக்கப்படல். அதனூடாக பெறப்படும் வருமானங்களை சரியாக ஒழுங்குபடுத்தல்.
8. அங்காடி கடைகளை ஒழுங்குபடுத்தல்.
9. மாநகர வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு 75 வீதிகளை புனரமைத்தல்.
10. மாநகர குளங்கள் மற்றும் வாய்க்கால்களை முன்னுரிமை அடிப்படையில் திருத்தியமைத்தல்.
11. மாநகரத்தின் பசுமையை உறுதிசெய்ய 25,000 மரக்கன்றுகளை திட்டமிட்டு நடுதல்.
12. SCDP திட்டத்தை துரிதப்படுத்தல்
13. Vertical Building வேலைகளை துரிதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தல்
14. Jaffna Cultural Center இனை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்களை உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
15. தற்போது காணப்படும் பொது மலசலகூடங்கள் திருத்தப்பட்டு மேலும் 04 பொது மலசலகூடங்கள் பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நிர்மாணித்தல்.
16. மாநகரின் தெரிவு செய்யப்பட்ட இடங்களை சுற்றுலா மையங்களாக பிரகடனப்படுத்தி உள்ளூர், வெளியூர் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் அபிவிருத்தி செய்தல்.
17. மாநகரத்துக்குரிய பொது விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல்.
18. மாகாண மற்றும் மத்திய அரசின் அமைச்சுகள் திணைக்களங்களுடன் சீரிய உறவைப் பேணி அவர்களுக்கூடாக திட்டங்களைப்பெற்று நடைமுறைப் படுத்தல்.
19. தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி மற்றும் அழகுபடுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்தல்.
20. மாநகரத்தின் அழகினை பேணும் நோக்கில் poster Board களை நிறுவி மதில்களிலும் சுவர்களிலும் விளம்பரங்கள் ஒட்டப்படுவதை சுற்றுச் சூழல் பொலிஸாரின் உதவியுடன் முற்றாக தடை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
21. யாழ்ப்பாண நகரின் சின்னமாக விளங்கும் யாழ். நூல்நிலையத்தினை அபிவிருத்தி செய்தல்.
22. மயானங்கள், சேமக்காலைகளை ஒழுங்குபடுத்தி விருத்தி செய்தல்.

**பாதீட்டின் 2019 ஆம் ஆண்டுக்கான வருமான மற்றும் செலவின் சுருக்கம்**

புதிய நடைமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் 2019 ஆம் ஆண்டுக்கான மொத்த வருமானமாக 1143.00 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும்.

இப் பாதீட்டின் மூலம் ஏழு பிரதான அம்சங்களுக்கூடாக வருமானங்களும் ஒன்பது பிரதான அம்சங்களுக்கூடாக செலவுகளும் அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்டிருக்கிறது.

அத்துடன் கடந்தாண்டு வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிட்டு பல மாற்றங்களும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. 2019 ஆம் ஆண்டுக்காக வருமானமாக

| இல | விபரங்கள் | தொகை (மில்லியன்) |
|---|---|---|
| 1 | வரிகள், வீதவரிகள், விற்பனைகள் | 99.50 |
| 2 | வாடகைகள் | 572.30 |
| 3 | உரிமைக் கட்டணங்கள் | 23.70 |
| 4 | சேவைக் கட்டணங்கள் | 30.49 |
| 5 | விறாந்துக் கட்டணம், தண்டங்கள் | 20.37 |
| 6 | அரசிறை மானியங்கள் | 585.00 |
| 7 | ஏனைய வருமானங்கள் | 164.63 |

எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் செலவுகளாக

| இல | விபரங்கள் | தொகை (மில்லியன்) |
|---|---|---|
| 1 | சம்பளங்களும் கூலிகளும் | 119.00 |
| 2 | பயணச் செலவுகள் | 14.17 |
| 3 | வழங்கு பொருட்களும் சேவைப் பொருட்கள் | 29.90 |
| 4 | மூலதனச் சொத்துக்களை பேணுதலும் பழுதுபார்த்தலும் | 253.50 |
| 5 | திண்மக் கழிவுகளை ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு, பயன்பாட்டுச் சேவை மற்றும் ஏனைய சேவைகள் | 53.28 |
| 6 | மானியங்கள், உதவுதொகைகள், உதவிப்பணங்கள் | 4.15 |
| 7 | ஓய்வூதியங்கள், இளைப்பாற்றுச் சம்பளம் | 84.00 |
| 8 | ஆக்கப் பொருட் செலவினம் மற்றும் கடன் கொடுப்பனவுகள் | 353.12 |

என்பன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் முழு விபரம் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டிருப்பதோடு பார்வைக்காக பொது இடங்களிலும் வைக்கப்பட்டிருந்தன.

**எதிர்பார்ப்பும் முடிவும்**

எமது வருமானத்தில் பெரும்பகுதி எமது மாநகரத்து மக்களிடமிருந்துதான் பெறப்படுகின்றது. அவை இம்மாநகரத்தின் அபிவிருத்திக்கே முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். யாழ்ப்பாணம் என்பது தமிழர்களின் அடையாளம். தமிழர்களின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். வடக்கு மாகாணத்தின் ஒரே மாநகரம். எமது மாநகரம் உலகில் காணப்படும் ஏனைய மாநகரங்களுடன் ஒப்பிடப்படும் அளவுக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எமது செயற்பாடுகள் பாதைகளை ஒளிரச் செய்வதிலும் வாடிகான்களை துப்புரவு செய்வதிலும் மட்டுப்படுத்தப்பட்டுவிடாது ஒரு மாதிரி மாநகரமாக மாற்றப்படுவதற்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபட வேண்டும். SCDP திட்டத்தினூடாக பல முன்னேற்றங்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கின்றேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு அத்திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மாநகர அபிவருத்திக்கான நீண்டகால திட்டம் ஒன்றும் வகுக்கப்பட வேண்டிய தேவையும் இருக்கிறது.

இவ்வாறான பாரிய பொறுப்புக்கள் எம்மிடம் தரப்பட்டிருக்கின்றன. எனவே இவற்றுக்கான ஆரம்பமாகவே இப்பாதீட்டை நான் இந்த உயரிய சபைக்கு முன்மொழிகின்றேன். இம்முன்மொழிவு உங்கள் அனைவரினதும் அங்கீகாரத்துடனும் ஆசீர்வாதத்துடனும் ஏற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்ப்புடன் விடைபெறுகின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**யாழ்.மாநகர முதல்வர்**

# எமது சமூகத்தை காட்டிக் கொடுத்து விட்டனர்

(ஹற்றன்)

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளத்தை வலியுறுத்தி தோட்டத் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று 9 ஆவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்டது

அந்தவகையில் நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா சாஞ்சிமலை மேற்பிரிவு, கீழ் பிரிவு ஆகிய தோட்டத் தொழிலாளர்கள் சாஞ்சிமலை பேருந்து நிலையத்திற்கு முன்பாக ரயர்களை எரித்தும் தேங்காய் உடைத்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டதோடு நாங்கள் கடந்த 09 நாட்களாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தோம். ஆனால் இன்று (நேற்று) காலை திடீரென இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் பணிக்கு தொழிலாளர்களைத் திரும்பும் மாறும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதியோடு கலந்துரையாட இருப்பதாக அறிக்கை விடுகிறார்.



கொந்தளிக்கும் மலையக மக்கள்

எனவே இவ்வளவு நாட்களாக ஜனாதிபதியை ஆறுமுகன் தொண்டமானுக்கு தெரியவில்லையா? இன்று ஓட்டு மொத்த தோட்ட தொழிலாளர்களையும் ஆறுமுகன் தொண்டமான் காட்டி கொடுத்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.


எது எவ்வாறாக இருப்பினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆறுமுகன் தொண்டமான் கூறியவாறு ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுக் கொடுத்தே ஆக வேண்டும் எனவும் அம்மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை 9 ஆவது நாளாகவும் பெரும்பாலான தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லாமல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இது இவ்வாறு இருக்க பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ்பிரிவு, மத்திய பிரிவு தோட்டத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கலைத்தரிசனம்





## கலாபூஷணம் சி.சிவநேசன் அவர்களுடனான சந்திப்பு

**யாழ்ப்பாணம் அரியாலை மேற்கு இல.36 கனகரட்ணம் வீதியில் வசிக்கும் கலாபூஷணம் சிவநாமம் சிவநேசன் சரித்திர, புராண, சமூக, இசை நாட கங்களில் நடித்ததோடு இலக்கியப் பணியையும் செவ் வனே ஆற்றி வருகிறார். மிகப் பிரபலம் பெற்ற சமூக சீர்த்திருத்த நாடகமான ''அடங்காப்பிடாரி'' என்ற நாட கத்தின் மூலம் நாடக உலகில் பெரிதும் அறியப் பெற்ற இவர் ஈழத்துத் தயாரிப்பான ''வெண்சங்கு'' என்ற திரைப்படத்திலும் நடித்த பெருமைக்குரியவராவார். அல்வாய் சாமணந்துறை ஆலடிப் பிள்ளையாருக்கான திருப்பள்ளியெழுச்சியை இயற்றியதுடன் அவ் ஆலய சிறப்புகள் அடங்கிய இறுவெட்டுகள் இரண்டை யும் எழுதி வெளியீடு செய்துள்ளார். 13.05.1946 அன்று சிவநாமம் நவமணி தம்பதியரின் மூத்த மகனாகப் பிறந்த இவர் யா/அரியாலை ஆனந்தா வித்தியாசாலை, யாப்பாணம் கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரும் ஆவார். இவர் தன்னைப்பற்றியும் தன் கலைப்பணி தொடர்பாகவும் வலம்புரியின் கலைத் தரிசனம் பகுதிக்காக தந்தவற்றை இங்கு தருகிறோம்**

**• தமிழ்நாடக உலகிலே உங்க ளுக்கென தனியான ஓர் இடத்தை தக்க வைத்துள்ளீர்கள். இந்த கலைத் துறைக்குள் நீங்கள் பிரவேசிக்க உங் களை ஈர்த்த, காரணிகள் காரணங் கள் தொடர்பாக கூறுங்கள்?**

அன்றைய நாட்களில் எல்லாம் எங்கள் ஊர்களிலே அநேக நாடக மன்றங்கள், சனசமூக நிலை யங்கள் இயங்கியங்கி வந்தன. இதன் காரணமாக கலை நிகழ்வுகளும் ஏராளமாக நடைபெறுவதுண்டு. இப்பொழு தெல்லாம் ஒவ்வொரு வீடுகளின் விறாந்தைகளில் எல்லாம் நாடகங்களைப் பார்க்கக் கூடிய வசதிகள் உள்ளன. அது தான் தொலைக்காட்சிகளை சொல்கின்றேன். ஆனால் அப்போதெல்லாம் நாங்கள் கலை நிகழ்வுகளை அதாவது நாடகங்களைப் பார்க்க வேண்டுமானால் அரங்குகளைத் தேடிச் செல்ல வேண்டும். எங்கள் ஊரிலே ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை ஏதோ ஒரு சனசமூக நிலையத்திலோ கோவிலிலோ இப்படியான கலை நிகழ் வுகள் நடந்தேறும். அப்போதெல்லாம் நான் மிகச்சிறு வயதில் இருந்தே அதாவது எனது எட்டு, ஒன்பது வயது களில் இருந்தே நாடகத்தைப் பார்க்க முன்வரிசையில் இருப்பேன். 4-5 மணித்தியாலங்கள் நடைபெறும் நாட கங்களை சிறந்த முறையிலே அரங்கேற்றுவார்கள்.

அவற்றை எல்லாம் பார்த்த போது என்னுள்ளும் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. இப்படி நானும் ஒரு நாடக நடிகனாக ஏன் வர முடியாது என்ற கேள்வியும் ஆர்வமும் என்னுள் எழுந்தது. அரியாலை சனசமூக நிலையத்திலேயே அதிக நாடகங்கள் நடைபெறுவதுண்டு. மந்திரிகுமாரி, நந்தனார், சாணக்கிய சபதம், கர்ணன் போன்ற நாடகங்களில் நடித்தவர்களான ஐ.எஸ். சண்முகநாதன், ஈ.கே.குமரையா, ஸ்ரீபத்மநாதன், இராமநாதன், சண்முகலிங்கம் போன் றோரின் நடிப்பு என்னைக் கவர்ந்தது. இதைத் தொடர்ந்து அரியாலை ஸ்ரீகலை மகள் நாடக சபாவினரின் நாடகங்களும் அந்த சபாவின் நடிகர்களும் மேடையே ற்றிய நாடகங்களும் என்னை வெகுவாக ஈர்த்தன. வீ.கே.பாலசிங்கம், வே.ஐயாத் துரை, வீ.கே. இரத்தினம், வி.கே.செல்லத் தம்பி, ஆரியகுளம் நடேசு, காங்கேசன் துறை சி.ரி.செல்வராசா ஆகி யோரது கலைச் செயற்பாடுகளும் என் னைக் கவர்ந்ததால் எனது பன்னிரண்டாவது வயதில் நானே ஒரு நாடகத்தை எழுதி என் வயதை ஒத்தவர்க ளுடன் நாடகத்தை அரங்கேற்றினேன். அந்த நாடகத்தின் பெயர் ''சதிகாரன் நாக ப்பா'' அதிலே எனக்கு வில்லன் பாத்திரம். என்னோடு ஏ.வீரசிங்கம், அ.ஜெயரட்ணம் போன்றோரும் நடித்திருந்தார்கள்.

எனது 14 ஆவது வயதிலே எங்கள் சனசமூக நிலையமாகிய அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் கட் டட நிதிக்காக ''மணிமகுடம்'' என்ற நாட கத்தை மேடையேற்ற தீர்மானித்து அதற் கான பாத்திரத்தேர்வு நடைபெற்றது. அதிலே எனக்குப் பெண் வேடம் கிடைத்தது. பெண் வேடத்திற்கு நான் பொருத்தமானவன் என்று அன்றைய கதாநாயக நடிகர் தேவிகந்த சாமி என்னைத் தெரிவு செய்தார். அந்த நாடகத்திலே கலைஞர்களான இ.இராசையா, அல்வாய் வே.பாலசிங்கம், நடிக கலாமணி வ. செல்வரத்தினம், யோகநாதன், பவுண் ராசா, இரா.சின்னராசா, வேங்கை சிவபாக் கியம், அல்வாய் வடக்கு கட்டப் பொம்மன் கந்தசாமி போன்ற பலரும் நடித்திருந்தார் கள்.

மூன்று மாதங்கள் அந்த நாடகம் ஒத்திகை பார்க்கப்பட்டு நிகழ்த்தப் பட்டது. மிகப் பெரிய வெற்றியையும் நிதி வசூலிப்பையும் தந்தது அந்த நாடகம். இந்த நாடகத்தின் கதை வசனத்தை கலைஞர் மு.கருணாநிதி எழுதி யிருந்தார். இந்த நாடக வெற்றியைத் தொட ர்ந்து ''கடமை வீரன்'' என்ற நாடகம் யாழ். மாநகரசபை மண்ட பத்திலே (பின்னர் றியோ தியேட்டர்) அரங்கேறியது. இதிலும் எனக் குப் பெண் வேடம். இரண்டு கதாநாயகிக ளில் நான் ஒருவர். இந் நாடகத்திலும் மணி மகுட நாடகக் கலை ஞர்களே நடித்தார்கள். இந்த நாடகங்க ளைத் தொடர்ந்து சுண்டிக் குளி யாழ்.நாடகக் கலாமன்றத்தின் பிரதம நடிகர் வி.சி. குஞ்சி தபாதம், நடிகர் வே.பால சிங்கத்தினூடாக எனக்கு அழைப்பொன்றை விடுத்திருந்தார். அதன்படி அவர்களின் நாடகமான ''குற்றமெங்கே?'' என்ற நாடகத் தில் எனக்கு நாயகி வேடம். வி.சி.பரமானந் தத்தின் நெறியா ள்கையில் உருவான அந்த நாடகத்தில் வி.சி.பரமானந்தம், வி.சி.குஞ்சித பாதம், மாணிக்கராசா, நடராசா போன்றோர் நடித்தனர்.

**• ஒருகாலத்தில் அதாவது 1964 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு-கிழக்கு பகுதிகளிலே மிகப் பெரிய பிரபலம் பெற்ற சமூக சீர்திருத்த நாடகமாக இருந்த யாழ்.நாடக கலாமன்றத்தின் ''அடங்காப்பிடாரி'' நாடகம் தொடர்பா க வும் அதில் நடித்து பெற்றுக் கொண்ட அனுபவங்கள் தொடர்பாகவும் கூறுங்கள்?**

யாழ்.நாடகக்கலாமன்ற இயக்குநர் வி.சி. பரமானந்தம் மிகுந்த சிந்தனையாற்றல் உள் ளவர். அவரது எண்ணக்கருவில் எழுந்த சமூக சீர்திருத்த நாடகங்கள் தான் அடங்காப் பிடாரி. இந்த நாடகத்தில் எனக்கு நவநாகரிக பெண் வேடம். இந்த நாடகத்தில் நாட்டு நாடப் புகளும் சமூக சீர்கேடுகளும் அவற்றின் தாக்கங்களும் நகைச்சுவையோடு படைக்கப் பட்டிருந்ததால் மக்கள் மனதில் நன்றாக பதியப்பட்டிருந்தது. இதனால் மாதத்தில் சுமார் இருபத்தைந்து மேடைகள் ஏறியது. அந்த வகையிலே சுமார் இரண்டாயிரம் மேடைக ளுக்கு மேலாக நிகழ்த்தப்பட்டது. கோவில் திருவிழாக்கள் மற்றும் கலை நிகழ்வுகளில் ''காணிவேல்'' என்று அழைக்கப்படும் களி யாட்ட விழாக்களில் அதிகமாக மேடையேறி யதால் பெருமளவு மக்கள் இந்த நாடகத்தைப் பார்த்திருந்தார்கள். யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளின் ஆலய விழாக் காலங்களில் எல் லாம் இந்த ''அடங்காப்பிடாரி'' நாடகம் பல தட வைகள் மேடையேறியிருந்தது. இந்த நாட கத்தின் மூலம்எனக்கு ''சிறப்பு நடிகன்'' என்ற பட்டமும் கிடைத்தது. பெரும்பாலும் கிரமாப் புறங்களில் இந்த நாடகத்துக்குப் பெரும் மவுசு கிடைத்தது. இந்த நாடகத்தில் இரு திறி வதனமாக வி.சி.பரமானந்தமும் கந்தாயுத குழவியாக நடராசாவும் சவர்க்காரம் மற்றும் வாசனைத் திரவியங்கள் விற்கும் பெண் ணாக நானும் மற்றும் வி.சி.குஞ்சிதபாதம், கனகையா போன்றோரும் நடித்திருந்தோம். பிரதான நடிகரான நடராசண்ணருக்கு சுகயீ னம் காரணமாக அவரால் சில நாட்கள் நடிக்க முடியாமல் போக அந்த நாட்களில் நானே கந்தாயுத குழவியாக நடித்தேன். எனது பெண் பாத்திரத்தை திருமகள் நாடக மன்ற நடிகர் குணமும் நடிக கலாமணி செல்வரத் தினமும் நடித்திருந்தார்கள்.

**• ஈழத்து திரைப்படமான ''வெண் சங்கு'' திரைப்படத்தில் ''அடங்காப் பிடாரி'' நாடகமும் இணைக்கப்பட்டிருந்தன. அந்த திரைப்பட அனுபவங்களை வாச கர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்?**

ஈழத்துத் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு மூன்று மாத, ஆறு மாத இடைவெளிகளில் திரைப்படங்கள் வெளிவந்து கொண்டிருந்த காலம். அந்தவேளையில் தான் தயாரிப்பா ளர் தம்பு தான் தயாரிக்கும் ''வெண்சங்கு'' திரைப்படத்தில் ''அடங்காப் பிடாரி'' நாடகத் தையும் இணைத்தால் நல்லது என்ற யோச னையை முன்வைத்தார். அதற் கிணங்க எங்கள் மன்றத்தினரும் அந்த நாடகத்தை நடிக்க கொழும்புக்கு போயிருந்தோம். சகல படப்பிடிப்புக் களையும் நிறுத்தி எங்களது நாடகத்தை படமாக்கும் வேலை களிலே சகலரும் ஈடுபட்டார்கள். 4 நாட்கள் படப்பிடி ப்பு நடைபெற்றது.வெல்லம்பிட்டியவில் உள்ள கலையக த்திலே இரவு- பகலாக படப்பிடிப்பு நடைபெற்றது. உள்ளகப் படப்பிடிப்பாகவே நடைபெற்றது. இருவர், மூவர் சேர்ந்து நடிக் கிற காட்சிகளில் தனித்தனியே எங்களை பதிவு செய்தார் கள். பின்னர் படத்தொகுப்பின் மூலமே பெரும்பாலான காட்சி களைச் செய்தார்கள். மேடையிலே இருவர், மூவர் நடிக்கும் போதுவரும்உணர்வுகள் தனித்தனியேபடமாக்கும்போதுவராது.

அப்படி அந்த உணர்வுகளைக் கொண்டு வருவதற்கு ஒவ்வொருவரும் நிறைய நிறைய முயற்சி எடுக்க வேண் டும். அந்த முயற்சியின் ஊடாக நாங்கள் அங்கே நிறை யவே கற்றுக் கொண்டோம். அதன்மூலம் ''அடங்காப்பிடாரி'' நாடகத்தை சிறப்பாகச் செய்து முடித்தோம் என்றே கூற வேண்டும். நாடகத்திலே முன் திரை அகற்றப்பட்டால் எந்தத் தவறும் ஏற்படாதவாறு நாடகக் காட்சியை தொடரவே வேண் டும். சினிமாவில் அப்படி அல்ல. அக்காட்சி எதிர்பா ர்த்த அளவு வரும் வரை தொடர்ந்து தொடர்ந்து நடிக்க வேண்டும்.

**• இதுவரையில் நீங்கள் பெற்ற விருதுகள், பட்டங்கள், சிறப்புகள் தொடர்பாக கூறுங்கள்?**

2013 ஆம் ஆண்டு அரச விருதான கலாபூஷணம் விருது, 2011 ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரதேச செய ல்கம் வழங்கிய கலைப்பரிதி விருது, 2014 ஆம் ஆண்டு அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையம் வழங்கிய கலைமக ளின் கலைச்சிகரம் விருது, பருத்தித்துறை பிரதேச சபையின் கலாசார அதிகார சபை வழங்கிய கலைக் கலசம் விருது, சர்வோத யம் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றம் வழங்கிய கலைமாமணி விருது என்பன எனக்கு கிடைத் துள்ளன.

**• நீங்கள் நடித்த நாடகங்கள் தொடர்பாக கூறுங்கள்?**

அடங்காப்பிடாரி, குற்றமெங்கே, சதிகாரன் நாகப்பா, பறந்தான்பத்தாயிரம் சமாதியில் சாம்ராஜ்ஜியம், ராஜாதேசிங்கு, பதவி மோகம், சகோதர விரோதி, பாமா விஜயம், பொலி டோல் ராசன், வசந்த வாழ்வு, அன் றொரு நாள், காத்தவராயன், நடிகமணி வி.வி. வைரமுத்துவின் ஏழு பிள்ளை நல்லதங் காள் போன்ற நாடகங்களைக் கூற முடியும்.

இதிலே ஏழுபிள்ளை நல்லதங்காள் என்ற நாடகத்தில் நடிப்பதற்கான சந்தர் ப்பம் கிடைத்ததே ஒரு எதிர்பாராத சந்தர்ப் பம். அந்நாடகத்தில் நடித்த நடிகர் ஒருவர் வரமுடியாத இக்கட்டான சூழலில் அந்த மூழி அலங்காரி பாத்திரத்தில் நடிக்க வேண் டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. மட்டுவிலிலே அந்த நாடகத்தை மேடையேற்றும் போது நல்லதங்காளையும் பிளைகளையும் கொடுமைப்படுத்தி அவர்களை அடித்து விரட்டும் சமயத்தில் மூழி அலங்காரியாக நடித்த எனக்கு இந்தக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மா ஒரு பனங்கொட் டையால் எறிந்தது என்னால் மறக்க முடியா ததாக அமைகிறது. இதை நான் எனது நடிப்புலகில் அல்லது கலையுலகில் பெற்ற அதியுயர் பரிசாகவே கொள்கின்றேன்.

**• உங்கள் இலக்கியப்பணி தொட ர்பாகக் கூறுங்கள்.**

ஜீவநதி, ஞானம், வலம்புரி, உதயன், வீரகேசரி, ஈழநாதம், தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் எனது கவிதைகள் ஏரா ளமாக பிரசுரமாகியுள்ளன. பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்திய இலக்கிய கலைப் போட்டிகளில் பல தடவைகள் பரிசுகளை வென்றுள்ளேன். மேலும் நல்லைக்குமரன் மலரிலே நல்லூரான் கீர்த்தனைகள் வெளி வந்துள்ளன.

அல்வாய் சாமணந்தறை பிள்ளையார் மேல் பக்திமாலை நூல் வெளி யிட்டுள் ளேன். 2006 ஆம் ஆண்டு இவ்வாலயத் துக்கான திருப்பள்ளி எழுச்சியை எழுதி இறுவெட்டாக வெளியீடு செய்துள்ளேன். அத்துடன் இவ் ஆலய வசந்த மண்டப கும்பாபிஷேக மற்றும் கோபுர குடமுழுக்கு வேளைகளில் இறுவெட்டுக்களை வெளியீடு செய்துள்ளேன்.

இந்த இறுவெட்டுக்களிலே தவராசா சந்திராங்கி, ம.சுதர்சன் (சூரி), சுவர்ண கீதன் பத்மஜன், திருமதி. சந்தரஜோதி, வதிரி மோகன் ஆகியோர் இசையமைப்பாளர் பத்மஜனின் இசையில் பாடியுள்ளார்கள். மேலும் கோவில் உற்சவகால கவிதைகள் பலவற்றையும் நாளிதழ்களிலே வெளியிட்டு ள்ளேன்.

**நேர்காணல்:**
**ஜெயம் ஜெகன்**

# பாரதம்

## மத்திய பிரதேச தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் 114 இடங்களில் வெற்றி

(இந்தூர்)

மத்திய பிரதேச சட்டமன்றத் தேர்தல் இறுதி முடிவினை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ளது. காங்கிரஸ் 114 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னோட்டமாக கருதப்பட்ட 5 மாநில சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன.

இதில், 230 இடங்களை கொண்ட பெரிய மாநிலமான மத்திய பிரதேச மாநிலத்தில் எதிர்க்கட்சியான காங்கிரஸ் தொடர்ந்து முன்னிலை பெற்று வந்தது. ஆளும் பாஜகவும் சிறிய எண்ணிக்கை வித்தியாசத்தில் பின் தொடர்ந்தது.

ஆட்சியமைக்க 116 இடங்கள் தேவை என்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு நிலவரப்படி காங்கிரஸ் 115 இடங்களில் வெற்றி பெற்றதாக தெரியவந்தது. ஆளும் பா.ஜனதாவுக்கு 108 இடங்கள் கிடைத்தன.

மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி 2 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பிற கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் 5 தொகுதிகளில் வெற்றி பெற்றன.


காங்கிரஸ் பெரும்பான்மையை நெருங்கியபோதும் ஆட்சி அமைப்பதில் இழுபறி ஏற்பட்டது.

இந்நிலையில், மத்திய பிரதேச மாநில தேர்தல் இறுதி முடிவுகளை தேர்தல் ஆணையம் நேற்றுக் காலை அறிவித்துள்ளது. அதில், காங்கிரஸ் கட்சி 114 இடங்களில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாஜக 109 இடங்களிலும், சமாஜ்வாடி கட்சி 1 இடத்திலும், பகுஜன் சமாஜ் கட்சி 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. சுயேட்சைகள் 4 தொகுதிகளில் வென்றுள்ளன.

காங்கிரஸ் கட்சிக்கு சமாஜ்வாடி கட்சியின் ஒரு உறுப்பினர் ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ளதால், ஆட்சியமைக்க இன்னும் ஒரு உறுப்பினரின் ஆதரவு இருந்தால் ஆட்சி அமைக்க முடியும்.

எனவே பிற கட்சிகள் மற்றும் சுயேட்சைகளின் ஆதரவுடன் மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் பணியை தொடங்கி உள்ளது. (4)

## 5 மாநில தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு மோடி வாழ்த்து



(டில்லி)

5 மாநில தேர்தல் முடிவுகள் குறித்து, மக்களின் தீர்ப்புக்கு தலை வணங்குவதாக பிரதமர் மோடி தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

5 மாநில தேர்தல் முடிவுகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

அதில், "தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ், தெலுங்கானா ராஷ்டிர சமிதி, மிசோ தேசிய முன்னணி ஆகிய கட்சிகளுக்கு வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் தீர்ப்பை பா.ஜனதா தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறது" என்று அவர் தெரிவித்துள்ளார். (4)

## தெலுங்கானாவின் முதல்வராக மீண்டும் சந்திரசேகரராவ்

(ஐதராபாத்)

தெலுங்கானா சட்டமன்றத் தேர்தலில் ஆட்சியை தக்க வைத்துள்ள சந்திரசேகரராவ், நாளை முதல்வராக பதவியேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆந்திராவை இரண்டாக பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட தெலுங்கானா மாநிலத்தில் முதன் முதலாக முதலமைச்சர் சந்திரசேகர ராவ் தலைமையில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி ஆட்சி அமைந்தது. அவர் தனது அரசின் பதவிக்காலம் முடிய 9 மாதங்கள் இருந்த நிலையில், சட்டசபையை கலைத்துவிட்டு தேர்தலை சந்திக்க தயார் ஆனார்.

இந்நிலையில், தெலுங்கானாவில் கடந்த 7 ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. நேற்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி அமோக வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்துக்கொண்டு உள்ளது. சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி



மற்றும் தெலுங்கானா ஜன சமிதியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட காங்கிரஸ் தோல்வியை சந்தித்தது.

இந்த மாநிலத்தில் மொத்தம் உள்ள 119 தொகுதிகளில் ஆளும் தெலுங்கானா ராஷ்டிர சமிதி 88 தொகுதிகளில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்கள் 21 தொகுதிகளில் வெற்றி பெற்றனர். பா.ஜனதாவுக்கு ஒரு இடம் கிடைத்தது. பிற கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் 9 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

இந்நிலையில், தெலுங்கானா மாநிலத்தின் இரண்டாவது முதல்வராக சந்திரசேகர ராவ் பதவி ஏற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி எம்எல்ஏக்கள் ஆலோசனைக் கூட்டம் நேற்றுக்காலை 11.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற கட்சி தலைவராக சந்திரசேகர ராவ் தேர்வு செய்யப்பட உள்ளார். இந்த கூட்டத்தின் போது, பதவியேற்பு விழா திகதியும் இறுதி செய்யப்பட உள்ளது.

காஜ்வெல் சட்டசபை தொகுதியில் போட்டியிட்ட முதலமைச்சர் சந்திரசேகர ராவ் காங்கிரஸ் வேட்பாளர் பிரதாப் ரெட்டியை 51 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். சந்திரசேகர ராவின் மகன் கே.டி.ராமா ராவ், மருமகன் ஹரிஷ் ராவ் ஆகியோரும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். (4)

## அமெரிக்க நாடாளு

## ஜனாதிபதி ட்ர

## கண்டனத் தீ

(வோஷிங்டன்)

**அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படலாம் என பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.**

அமெரிக்க நாட்டில் 2016 ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அந்த தேர்தலுக்கான பிரசாரம் உச்சகட்டத்தில் இருந்தபோது, குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் மீது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள், பாலியல் புகார்களை தெரிவித்தனர்.

ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் உள்ளிட்ட 2 பெண்கள், தங்களுடன் ட்ரம்ப் பாலியல் உறவு வைத்துக்கொண்டதை வெளியே சொல்லி விடப்போவதாக மிரட்டியதாக கூறப்பட்டது. ஒருவேளை, இந்த விவகாரம் வெளியே கசிந்து விட்டால், அது ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்புக்கு எதிராக திரும்பி விடும் என்பதால் அவர்களுக்கு ட்ரம்பின் சட்டத்தரணியாக இருந்த மைக்கேல் கோஹன் பணம் தந்து அவர்களின் வாயை அடைத்தார் என்று தகவல்கள் வெளியாகின.

இதையடுத்து அமெரிக்க தேர்தல் நிதி சட்டத்தை மைக்கேல் கோஹன் மீறியதாக நியூயோர்க் தெற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு, விசாரணைக்கு வந்தபோது, தன்மீது கூறப்பட்டு உள்ள குற்றச்சாட்டுகளை மைக்கேல் கோஹன் ஒப்புக்கொண்டார்.

அப்போது அவர், "ஜனாதிபதி தேர்தலின்போது, ட்ரம்ப் தங்களுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதை வெளியே பகிரங்கப்படுத்திவிடுவோம் என்று சொன்ன 2 பெண்களின் வாய்களை அடைப்பதற்காக, அவர்களுக்கு 2 இலட்சத்து 80 ஆயிரம் டொலர்(ஒரு டொலர் சுமார் ரூ.72) கொடுத்தேன். வேட்பாளரின் உத்தரவின் பேரில் நான் இதைச் செய்தேன்" என தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் இப்போது ட்ரம்ப் மீது அமெரிக்க அரசு சட்டத்தரணிகள் நியூயோர்க் நீதிமன்றத்தில் ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளனர். அந்த ஆவணத்தில், அவர்கள் முதல் முறையாக ட்ரம்ப் கூறித்தான், மைக்கேல் கோஹன் தேர்தல் நிதி சட்டத்தை மீறி உள்ளார் என நேரடியாக கூறி உள்ளனர். இது ட்ரம்புக்கு தலை

## பிரிட்டிஷ் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

பிரிட்டிஸ் பிரதமர் தெரேசா மேயிற்கு எதிராக கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர்.

இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இடம் பெறவுள்ளது. வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் தெரேசா மே பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்படுவார்.

கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் 48 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த கடிதத்தை சமர்ப்பித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் விடயத்தை தெரேசா



மே கையாண்டுவரும் விதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே அவரது கட்சியினர் நம்பிக்கையில்லா தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது தெரேசா மே பிரிட்டனின் நலன்களை விட்டுக் கொடுத்துள்ளார் என கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தெரேசா மேயின் திட்டத்தை முன்னெடுத்தால் அரசாங்கம் கவிழும் நிலை உருவாகும் என கன்சர்வேர்ட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை என்னிடமுள்ள அனைத்தையும் பயன்படுத்தி நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொள்ளப் போவதாக தெரேசா மே தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமர் ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டிய நிலை உருவானால் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது தாமதமாகலாம் என அவர் தெரிவித்துள்ளார். (4)

# டாளுமன்றத்தில் ட்ரம்ப் மீது தீர்மானம்!



வலியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த விவகாரத்தில் ட்ரம்ப் மீது அமெரிக்க நாடாளுமன்றத்தில் 'இம்பீச்மெண்ட்' (கண்டன தீர்மானம்) கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் அமெரிக்காவில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி அமோக வெற்றி பெற்று, பிரதிநிதிகள் சபையை கைப்பற்றி உள்ளது. எனவே அந்த சபையில் தன் மீது 'இம்பீச்மெண்ட்' கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக ட்ரம்ப் கருதுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பாக வோஷிங்டன் வெள்ளை மாளிகை 'வெஸ்ட் விங்' (ஜனாதிபதி அலுவலகம்) வட்டாரங்கள் கருத்து தெரிவிக்கையில், "ட்ரம்ப் சொல்லித்தான் ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ் உள்ளிட்ட 2 பெண்களுக்கு நிதி தந்து சட்டத்தை மீறியதாக மைக்கேல் கோஹன் கூறிய விவகாரத்தில் மட்டுமே ட்ரம்ப் மீது 'இம்பீச்மெண்ட்' கொண்டு வர வாய்ப்புள்ளது" என கூறின.

இதில், ஜனாதிபதி பதவியில் இருந்து ட்ரம்ப் வெளியேறிய பின்னர், அவரை சிறைக்கு அனுப்ப வாய்ப்பு உள்ளதாக ஜனநாயக கட்சியினர் கருதுகின்றனர்.

இதுபற்றி அமெரிக்க நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையின் நீதித்துறை குழுவின் தலைவர் பதவியை ஏற்க உள்ள ஜெர்ரி நாட்லர் கருத்து தெரிவிக்கையில், "ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் மீது இம்பீச்மெண்ட் கொண்டு வர முடியும்" என தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று ஜனநாயக கட்சி செனட் சபை எம்.பி. கிறிஸ் கூன்ஸ், "ட்ரம்ப் பதவி முடிந்து வெளியே சென்ற பின்னர் அவர் மீது இம்பீச்மெண்ட் கொண்டு வர முடியும்" என கருத்து தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் தன்மீது பிரதிநிதிகள் சபையில் 'இம்பீச்மெண்ட்' கொண்டு வரப்பட்டாலும், செனட் சபையில் அதற்கு வாய்ப்பு இல்லை என்று ட்ரம்ப் நம்புவதாக தகவல்கள் தெரிவிதக்கின்றன. (இ-4)

# சீனத் தொலைத்தொடர்பு நிறுவனத் தலைவி 10 பில்லியன் ரூபா பிணையில் விடுதலை



(பீஜிங்)

சீனத் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி மெங்வான்ஜவ் 10 பில்லியன் கனேடிய டொலர் ரொக்கப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவினால் ஈரான் மீது விதிக்கப்பட்ட தடைகளை மீறி, ஈரானுக்கு இலத்திரனியல் உபகரணங்களை அனுப்ப முயற் சித்த குற்றச்சாட்டின் கீழே சீனத் தொலைத்தொடர்பு நிறுவனமான ஹூவாவெய் நிறுவன அதிபரின் மகளும் அந்நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியுமான மெங் வான்ஜவ் கடந்த முதலாம் திகதி கனடாவில் வான்கூவர் நகரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந் நிலையில் வான்கூவர் நீதிமன்றில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்று வந்த விசாரணைகளின் பின்னர் இவர் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் 24 மணித்தியாலயங்கள் முழுவதும் கண்காணிக்கப்படவுள்ளதுடன் மின்னணு கணுக்கால் பட்டியை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (4)

# கிறிஸ்தவ தேவாலயத்திற்குள் துப்பாக்கிச்சூடு! நால்வர் உயிரிழப்பு

(பிரேசிலியா)

பிரேசிலின் கம்பினாஸ் நகரில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மாதத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்றுக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தேவாலயத்தினுள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



குறித்த தாக்குதலில் பொலிஸாரின் தலையீட்டை தொடர்ந்து, துப்பாக்கிதாரி தன்னை தானே சுட்டு தற்கொலை செய்துக் கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிதாரி, 49 வயதுடைய தகவல் தொழில்நுட்ப தொழில்முறையாளரான யூலர் பெர்னாண்டோ காண்டோல்ஃபோ என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராலயத்திற்குள் வந்து வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவாறு சந்தேகநபர் திடீரென வழிபாட்டாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் நால்வர் உயிரிழந்த நிலையில், நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4)

# பிரான்ஸில் துப்பாக்கிச்சமர் 4 பேர் பலி; 12 பேர் படுகாயம்

(பாரிஸ்)

பிரான்ஸின் ஸ்ட்ரஸ்போர்க் நகரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் நால்வர் உயிரிழந்துள்ளதோடு, 12 பேர் காயமடைந்துள்ளனர்.

ஸ்ட்ரஸ்போர்க் நகரின் கிறிஸ்மஸ் சந்தைக்கருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும், ஏனைய ஆறு பேர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல் நடத்தியவர் என சந்தேகிக்கப்படும் 29 வயதானவர் ஏற்கனவே பல குற்றச்சாட்டுக்களின் பேரில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், பிரான்ஸ் பயங்கரவாத எதிர்ப்புத் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகநபருக்கும் பாதுகாப்பு தரப்பினருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்ற போதும், சந்தேகநபர் காயங்களுடன் தப்பியோடியுள்ளார். அவரை கைதுசெய்யும் நடவடிக்கையில் சுமார் 350 பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் தானியக்க துப்பாக்கி மற்றும் கத்தி என்பன காணப்பட்டுள்ளன. பாதுகாப்புத் தரப்பினர் நடத்திய தேடுதலில் கிரனைட்டுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் சந்தை மூடப்பட்டு பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேசத்தின் அருகில் காணப்படும் ஐரோப்பிய நாடாளுமன்றம் மூடப்பட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக நாடாளுமன்ற தலைவர் அன்டோனியோ தஜானி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் அமைதியாக செயற்படுவது அவசியமென தெரிவித்துள்ளார். (4)

# அணு ஆயுதங்களைச் சுமக்கும் விமானங்களை வெனிசுவேலாவில் தரையிறக்கிய ரஷ்யப் படையினர்

(மொஸ்கோ)

அணு ஆயுதங்களை சுமக்கும் திறன் கொண்ட இரண்டு விமானங்களை, வெனிசுவேலா நாட்டில் ரஷ்யா நிறுத்தியுள்ளது.



ரஷ்யாவின் Tu-160 எனப்படும் இந்த விமானங்கள், அணு ஆயுதங் களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் திறன்மிக்கவை.

இவை தற்போது 10 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பறந்து வெனிசுலாவில் தரை இறங்கியுள்ளன. குறித்த விமானங்களுடன் சரக்கு விமானம் ஒன்றும், பயணிகள் விமானம் ஒன்றும் உடன் சென்றுள்ளன.

எதற்காக இந்த விமானங்கள் வெனிசுலாவுக்குகொண்டு வரப்பட்டன என்ற விபரங்கள் வெளியாகவில்லை. விமானங்களில் ஆயுதங்கள் உள்ளனவா? இன்னும் எத்தனை நாட்களுக்கு விமானங்கள் வெனிசுலாவில் இருக்கும் என்ற தகவல்க ளும் வெளியிடப்படவில்லை.

மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ "இரண்டு ஊழல் நிறைந்த அரசாங்கங்கள் பொது நிதியை வீணாக்குகின்றன" என கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரது வார்த்தைகள் "முற்றிலும் பொருத்தமற்றது" என கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களை இலங்கைக்குள் கொண்டு வர முயற்சித்த நபர் ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் டுபாயிலிருந்து நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது அவரின் நடத்தையில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள், குறித்த நபரின் பயணப்பொதியை சோதனையிட்டபோது ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுக்களை மீட்டுள்ளனர்.

14 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

100 பொதிகளில் 20 ஆயிரம் சிகரெட்டுக்கள் அடங்கிய "பிஸ்னஸ் ரோயல்" சிகரெட் பக்கெற்றுக்கள் மற்றும் 22 பொதிகளில் 4 ஆயிரத்து 400 அடங்கிய "கோல்ட் லீப்" சிகரெட் பக்கெற்றுக்களையும் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்தேக நபரை நாளை 14 ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக போதைப் பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர்தெரிவித்துள்ளனர்.(இ-7)

# வெலிக்கடைச் சிறையிலிருந்து தப்பிய போதைப்பொருள் கடத்தல்காரன் கைது

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற பிரபல போதைப் பொருள் கடத்தல்காரனான சுனில் சாந்த மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளான்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுனில் சாந்த என்ற பிரபல போதைப் பொருள் கடத்தல்காரன் தப்பிச் சென்றிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பொலிஸ் திட்டமிட்ட குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளால் குறித்த நபர் நேற்றுமுன்தினம் மீமுரே பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான சுனில் சாந்த சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற நிலையில், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# படுகொலை செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியின் குடும்பத்தினர் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பில் கொலை செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி இந்திக்க பிரசன்னவின் குடும்பத்தினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர்.

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் வீதியில் கடமையில் ஈடுபட்ட போது கொலை செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியின் குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது ஜனாதிபதி தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் நான்கரை வயது மகனின் கல்வி நடவடிக்கை, குடும்பத்தினருக்கு அவசியமான தேவைகளுக்கு உதவிகளையும் வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மனைவிக்கு காலி, நாகொட பிரதேச செயலகத்தில் வேலைத்திட்டம் ஒன்றில் அபிவிருத்தி அதிகாரி பதவியையும் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.(இ)

# ஹெரோயினுடன் குடும்பஸ்தர் கைது

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹெரோயினுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை பிராந்திய மோசடி குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பொலிஸ் குழுவினர் சந்தேக நபரை அக்கரைப்பற்று பதூர் நகர்ப்பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளனர். ஆறுபேர் கொண்ட இப்பொலிஸ் குழுவினரே இவரை கைது செய்து அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அந்நபர் 22 வயதுடைய திருமணமான இளம்குடும்பஸ்தராவார். அந்நபரிடமிருந்து ஒரு தொகை ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனமாற்றம்

ஒரு திருடன் ராஜாவின் அரண்மனையில் திருடுவதற்காகப் போகிறான். நடு இரவு நேரம். இவன் மெதுவாக உள்ளே நுழைகிறான். அந்தப்புரத்தில் யாரோ பேசிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்கிறது.

அது யார் என்று கவனிக்கிறான். ராஜா தான் ராணியிடம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்று மெதுவாகக் காது கொடுத்துக் கேட்கிறான்.

"நம்ம பொண்ணுக்கு கல்யாணம் செய்ய வேண்டாமா" என்று அந்த ராணி கேட்கிறார். அதற்கு ராஜா, "அவசியம் செய்ய வேண்டியது தான். மாப்பிள்ளை யார் என்று நான் முடிவு செய்து விட்டேன்!" என்றார்.

"யார் மாப்பிள்ளை?" என்று கேட்டார். "நம்ம ஊர் ஆற்றங்கரையில் சாதுக்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள் அல்லவா, அதில் ஒருத்தருக்குத் தான் நம் மகளைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறேன்" என்றார் ராஜா. அரசன் சொல்லிக்கொண்டிருந்த இந்த விடயம் அங்கே ஒளிந்து கொண்டிருந்த திருடன் காதில் விழுந்தது.

அவ்வளவு தான். அவன் அங்கேயே முடிவு செய்து விட்டான். "ஆகா! பேஷ்! அருமையான ஒரு ஐடியா! அதிர்ஷ்டம் தானா வருகிறது. அதை விட்டு விடலாமா?" என்று யோசித்தேன்! "நாளைக்கே நாம் ஒரு சாது வேடம் போட்டுக் கொண்டு ஆற்றங்கரையில் போய் இருந்துவிட வேண்டியது தான்!" என்று முடிவு செய்து விட்டான்.

"ஒருவேளை நமக்கே யோகம் அடித்தால் இளவரசியே மனைவியாக வந்தாலும் வரலாம்" என்பது அவன் நினைப்பு. அவ்வளவுதான் திருடன் மெதுவாக அரண்மனையை விட்டு வெளியே வந்தான். மறுநாள் காலையில், ஒரு காவி வேட்டியை எடுத்துக் கட்டினான். ஆற்றங்கரைக்குப் போனான். சந்நியாசி கோலத்தில் சாதுக்களில் ஒருத்தனாகப் போய் உட்கார்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் அரண்மனையிலேயிருந்து சில அதிகாரிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்கள்! ஒவ்வொரு சந்நியாசியிடமும் போனார்கள். மன்னனுடைய மகளை கல்யாணம் செய்து கொள்ளவும் என்று ரொம்ப பணிவாகக் கேட்டார்கள். ஆனால் இதுக்கு யாரும் சம்மதிக்கவில்லை!

அரண்மனை அதிகாரிகள் ரொம்பம் கெஞ்சிக் கேட்டு பார்த்திட்டார்கள். சாதுக்களிலே யாருமே இந்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை!

நம்ம ஆளு இதைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருக்கான்... இன்னும் அவர்கள் தன்னிடம் வரலையே என்று ஏக்கம் அவனுக்கு!

கடைசியா அந்த அதிகாரிகள் இவனிடம் வந்தார்கள்! "இளவரசியை திருமணம் செய்து கொள்ளவும்!" என்று ரொம்ப பயபக்தியோடு கேட்டுக் கொண்டார்கள். இவன் பதிலே பேசவில்லை !கம்முன்னு உட்கார்ந்திருந்தான்.

அதிகாரிகள் அரண்மனைக்குத் திரும்பிப் போனார்கள்....ராஜாவை பார்த்தார்கள்...அவர் என்ன ஆகிவிட்டது என்று கேட்டார்.

"ஒரு வாலிப சந்நியாசி அங்கே உட்கார்ந்திருக்கிறார். ஒருவேளை அவர் இதுக்கு சம்மதிப்பாரென்று தோன்றுகிறது. மற்றவர்கள் எல்லாருமே மறுத்திட்டார்கள்!"என்று சொன்னார்கள்.

அதுக்கப்புறம் ராஜாவே அந்த ஆற்றங்கரைக்குப் போனார். அந்த கட சந்நியாசியிடம் போய் நின்றார். தயவு செய்து தாங்கள் என் மகளை ஏற்று அங்கீகரிக்கவும். திருமணம் செய்து கொள்ளவும்! என்று மனப்பூர்வமாகவும் பணிவாகவும் அந்த சந்நியாசியிடம் வேண்டிக்கொண்டு பிரார்த்தனை செய்தார்.

சந்நியாசி வேஷத்திலே இருந்த திருடன் மெதுவாக ஒரு கண்ணை மட்டும் திறந்து பார்த்தான். அவ்வளவு பெரிய ராஜாவே அவனுக்கு முன்னாடி கையை கட்டிக்கொண்டு அடக்கமாக நின்று கொண்டிருக்கிறதை கவனித்தான். கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்தான்.

"நாம நிஜமாவே சந்நியாசி இல்லை!

சாது மாதிரி "டிரஸ்" பண்ணியிருக்கோம்... அவ்வளவுதான். சாதுவினுடைய உடையை மட்டும் போட்டுக்கொண்டிருக்கிறோம் –இதுக்கே....ஒரு ராஜா என்னை தேடிக்கிட்டு வந்திருக்கிறார். பணிவா நின்று கொண்டு பேசுறார் என்றால் நாம் நிஜமாகவே சாது ஆயிட்டா இதை விட பெரிசா ஏதேதோ நமக்காகக் காத்துக்கொண்டிருக்கும் போல இருக்கே! திருடனுக்கு சிந்தனை தெளிவாச்சு.அவன் மனப்போக்கு மாறியது! போலி வேஷத்தை கலைத்தான். கடுமையாக முயற்சி செய்தான். நிஜமாகவே "சாது ஆகிவிட்டான். பிற்காலத்திலே அவனே ஒரு பெரிய மகான் ஆகிவிட்டான்.

போலி வேஷம் கூட சில சமயம் எதிர்பாராத நன்மையை கொடுக்கும் என்பதை விளக்குகிறதுக்காக ஸ்ரீராம கிருஷ்ணர் இந்தக் கதையைச் சொன்னார்.

இதுக்காக நீங்களும் உடனே காவி வேட்டியை கட்டிக்கொண்டு ஆற்றங்கரையிலேயே போய் கொஞ்சம் நேரம் உட்காரலாமாவென்று யோசிக்காதீங்க சேர்! அதனுடைய பலன் எப்படி இருக்கும் என்பதை நான் முன் கூட்டியே சொல்லிப்போட்டன். என்ன ஆகும் தெரியுமா? ராஜாவும் உங்களை தேடிவரப் போறதில்லை! அதுக்கப்புறம் நீங்கள் திரும்பி வந்து உங்க வீட்டிலேயும் அடி வைக்க முடியாது!

இரண்டும் கெட்டானா போயிடும்! அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையென்று சொல்லுவார்களே! அது மாதிரி இளவரசியை நம்பி மனைவியை கைவிட்ட கதையா ஆகிவிடும்! ஜாக்கிரதை!

# இன உறவுகளைச் சிதைத்த சிங்களம் மட்டும் சட்டமும் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலமும்

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

அத்துடன்தமிழர்கள்பெரும்பான்மையாக வாழும் வடக்கு- கிழக்கு பகுதிகளில் சிங்களவர்கள் சிலர் தமிழர்களால் தாக்கப்பட்டனர்.

பண்டா - செல்வா ஒப்பந்தமும் அதன் கிழிப்பும் இரண்டு தரப்பிலும் கொதிப்பை உருவாக்கிவிட்டது. இதன் தொடராக சிங்களவர் தமிழ் எழுத்தையும், தமிழர் சிங்கள எழுத்தையும் அழிக்கும் வேலை உச்சம் பெற்றது. இந்த நிலையில் 1958ஆம் ஆண்டு மே மாதம் (23-25) தமிழரசு கட்சி வருடாந்த மாநாட்டை வவுனியாவில் நடத்தியது. மாநாட்டில் பிரதமருடனான உடன்பாட்டை (பண்டா - செல்வா ஒப்பந்தம்) நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சத்தியாக்கிரகம் இருக்கப்போகிறோம் என முடிவு செய்து அறிவித்தனர். தமிழரசு கட்சி வருடாந்த மாநாட்டில் பங்குபற்ற மக்கள் மட்டக்களப்பிலிருந்து வவுனியாவிற்கு ரயில் மூலம் சென்ற போது அந்த ரயில் பொலநறுவையில் தடுத்து நிறுத்தப்பட்டு மக்கள் தாக்கப்பட்டனர். மாநாட்டுக்கு சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த தமிழர்கள் மீதும் பொலநறுவையில் தாக்குதல் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து மே 25 ஆம் திகதி பொலநறுவை மாவட்டத்தில், திட்டமிட்ட படுகொலைகள் அரங்கேறின. தமிழ்த் தொழிலாளர்களின் குடியிருப்பினுள் புகுந்த சிங்களக் காடையர்கள் தமிழர்களை வாள்களால் வெட்டிக் கொன்றதாகவும் விவசாய அலுவலர்களாக கடமையாற்றிய தமிழ் அதிகாரிகளின் பங்களாக்களும் எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. சில பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளானார்கள். இதைத் தொடர்ந்து சிங்கள மீனவர்கள் மட்டக்களப்பில் தாக்கப்பட்டனர்.

இதைவிட சிங்கள பெருந்தோட்ட முதலாளி செனவிரத்ன ஏறாவூரில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி, நாடு முழுவதும் கொந்தளிப்பை உருவாக்கியது. முதலாளியின் தனிப்பட்ட விரோதிகளே அவரைச் சுட்டுக் கொன்றிருந்த போதிலும், அன்றைய குழப்பகரமான சூழ்நிலையில், தமிழர்களின் செயலாக கருதப்பட்டது. அடுத்த நாள் வானொலியில் உரையாற்றிய பிரதமர் பண்டாரநாயக்கா "செனவிரத்ன கொலையை தமிழர்களே செய்ததாக பழி சுமத்தினார். பிரதமரின் தொலைநோக்கற்ற உரையானது, "தமிழர்களே முதலில் சிங்களவர்களை தாக்கினார்கள்" என்ற தவறான நிலைப்பாட்டை உருவாக்க வழிவகுத்துவிட்டது. கொழும்பு நகரில் தமிழர்களின் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கண்ணில் பட்ட தமிழர்கள் தாக்கப்பட்டனர். சில பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளானார்கள். பல இடங்களில் "இது செனவிரத்ன கொலைக்கு பழி வாங்கல்" என்று நியாயம் கற்பிக்கப்பட்டது. தமிழர் மீதான தாக்குதல்கள் கொழும்பில் இருந்து ஆரம்பித்து, கரையோரமாக காலி வரை பரவியது. கொழும்புக்கு அருகில் உள்ள (பாணந்துறை) இந்துக் கோயில் ஒன்றினுள் வைத்து, பூசாரி கொலை செய்யப்பட்ட செய்தியானது, தமிழ்ப் பகுதிகளில் காட்டுத் தீயாக பரவியது. யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் செய்தியைக் கேள்விப்பட்ட தமிழர்கள் சிங்கள விரோத வன்முறையில் இறங்கினார்கள்.


1958 கலவரம்

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிங்களக் குடும்பங்களின் கொழும்பு வருகை, கொழும்பு நகர கலவரத்தை மேலும் தூண்டி விடுவதற்கு காரணமாக அமைந்தது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்களக் குடும்பங்கள், தமிழர்களால் தாக்கப்பட்டதால், அல்லது தாக்குதல் அச்சம் காரணமாக தெற்கிற்கு இடம்பெயர்ந்தனர். விமானம் மூலமாகவும் ரயில் மூலமாகவும் கொழும்பு வந்திறங்கிய அகதிகள் தமக்கு நேர்ந்த அவலத்தை சற்று மிகைப்படுத்தியே கூறியிருந்தனர். இதனையும் காரணம்காட்டி தமிழர்கள் மீதான தாக்குதல்களுக்கு நியாயம் தேடிக் கொண்டனர். "கொழும்பில் தமிழர்கள் வாழ்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவன் வாழமுடியாது" என்ற விடயம் இன்றும் கூட சாதாரண சிங்கள மக்களை தமிழர்களுக்கு எதிராக திருப்பி விட பயன்படுத்தப்படுகின்றது.

1958 ஜூன் 2-6 வரையில் கிட்டத்தட்ட 10000 தமிழ் அகதிகள் பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் கப்பல்கள் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர். அதுபோல 1958 ஜூன் 3 ஆம்திகதி கிட்டத்தட்ட 2000 சிங்கள அகதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு ஜப்பானிய கப்பல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்.

1958 மே 28 இல் அவசரகாலச் சட்டம் அறிவிக்கப்பட்டதோடு வடக்கு மற்றும் கிழக்கில் மக்களிடமிருந்த துப்பாக்கிகளை கையளிக்குமாறு வேண்டப்பட்டனர். தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜாதிக விமுக்தி பெரமுன ஆகியவை தடைசெய்யப்பட்டன. மே 29இல் யாழ்ப்பாணத்தில் கேணல் எவ்.சி.டி.சேரம் தலைமையில் நிரந்தரமான படை முகாம் தாபிக்கப்பட்டது. மே 30இல் நயினாதீவிலுள்ள புத்தர் கோவில் தாக்கப்பட்டது. ஜூன் 4-9 இல் தந்தை செல்வா உட்பட தமிழ் அரசுக்கட்சி பாரா ளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள இனவாதியான கே.எம். பிராஜரட்னவும் மேலும் பலரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

1958 ஜூலை 17 இல் நியாயமான தமிழ்மொழி பாவனைச் சட்டம்- 1958/28 (இச்சட்டம் பற்றி ஆரம்பத்தில் கூறப்பட்டுள்ளது) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வீட்டுக்காவலில் இருந்ததால் பொலிஸ் பாதுகாப்புடன் பங்குபற்றுவதற்கு மறுத்துவிட்டார்கள். இச் சட்டம் ஓகஸ்ட் 5இல் இரண்டாம் வாசிப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். இச் சட்டம் 46 ஆதரவு வாக்குகளைப்பெற்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இச் சட்டம் செனற்சபையில் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி நிறைவேறியது. செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி வீட்டுக்காவலில் இருந்த யாவரும் விடுதலை செய்யப்பட்டனர். 1958 மே 28 இல் அறிவிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் பாராளுமன்றத்தில் பல முறைகள் நீடிக்கப்பட்டு 1959 மார்ச் 13 இல் நீக்கப்பட்டது.


பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க கொலை செய்யப்படல்

## மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்த கட்சிகளுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள்

1958ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய முன்னணிக்குள் இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. இம் முரண்பாடுகள் காரணமாக இடதுசாரி கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான பிலிப் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் 1958-05-18இல் அரசாங்கத்தை விட்டு வெளியேறினர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அரசாங்கத்திற்கு வழங்கிய ஆதரவை 1958-06-01 இல் விலக்கிக் கொண்டது. 1958-06-09இல் ஒரு கட்சி அமைச்சரவை பதவிப் பிர மாணம் செய்தது.

## பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க கொலை செய்யப்படல்

1959ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதியன்று பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க காவி உடை அணிந்த ஒரு மனிதனால் அன்னாரது தனிப்பட்ட இல்லமான பான்ஸ் பிளேஸ் இல்லத்தில், காவி உடை மனிதன் தனது காவி உடையில் மறைத்து வைத்திருந்த சுழல் கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டார். பிரதமர் பண்டார நாயக்கவை சோமராம தேரர் என்ற பௌத்த பிக்குவே சுழல் துப்பாக்கியினால் சுட்டார். உடனடியாக பிரதமர் அவரின் இல்லத்திற்கு அருகில் உள்ள கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். முதல் நாள் முற்பகல் 10 மணியளவில் பிரதமர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட போதிலும் அவர் மறுநாள் காலை வரை உயிரோடு இருந்து மறுநாள் காலை 8 மணியளவிலேயே அவரது உயிர் பிரிந்தது.

1958 இல் தனது ஆட்சியில் மரண தண்டனையை சட்டரீதியாக பண்டார நாயக்க இடை நிறுத்தியிருந்தார். ஆனால் அவர்கொலையுண்ட பின், அவரது கொலையாளிகளுக்கு மரண தண்டனை வழங்குவதற்காக, அவசர அவசரமாக நாடாளுமன்றத்தினால் மீண்டும் மரண தண்டனை முற்காலத்துக்கும் வலுவுள்ள வகையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் துப்பாக்கியால் சுட்ட தல்துவ சோமராம தேரருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தல்துவே சோமராம தேரர் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்த போதே, வழக்குக்கு பிக்குவினுடையில் வருவதை நிறுத்தியிருந்தார்.

(தொடரும்)

# நாட்டின் அரசியல் நெருக்கடிக்கு பொதுத் தேர்தலே சிறந்த தீர்வு

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பொதுத் தேர்தலை நடத்துவதே சிறந்த தீர்வாகும். தேசிய அரசாங்கத்திலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியதையடுத்து ஐக்கிய தேசிய கட்சி பெரும்பான்மையை இழந்தது. இதன் நிமித்தமாகவே கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி பிரதமராக நியமித்தார்.

எனவே பாராளுமன்றில் பெரும்பான்மை பலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே உள்ளது என முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் தலையீடு இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என சம்பந்தன் பல தடவைகள் கூறி வந்துள்ளார். இதுபற்றியும் சகலரும் சிந்திக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மூன்றரை வருடங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணிலுடன் இணைந்து செயற்பட்ட வேளை நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிகண்டது மட்டுமன்றி நாட்டின் வளங்கள் வெளிநாட்டவர்களுக்கு விற்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே அவர் செயற்படுகின்றார். இதனால் மீண்டும் எமது நாடு வெளிநாடுகளுக்கு அடிபணியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு எமது நாட்டு உள்விவகாரங்களில் தலையிடும் உரிமை கிடையாது. ஆனால் எமது நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் உரிமை மக்களுக்கு உள்ளது. ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முன்வந்தபோது அதற்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி நீதிமன்றம் சென்றமை வேடிக்கையானது. சர்வாதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஐக்கிய தேசிய கட்சியினரே கொண்டு வந்தார்கள். நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அரசியலமைப்பில் மாற்றங்களை மேற்கொண்டால் அது ஜனநாயகத்தை மீறும் செயல் என ஐக்கிய தேசிய கட்சியினர் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாதவொன்று.

பாராளுமன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அதிக பெரும்பான்மை உள்ளது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க தனக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு உள்ளதால் தனக்கே பெரும்பான்மை என்கிறார்.

ஆனால் கூட்டமைப்பினரோ ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வில்லை. இந்நிலையில் எஞ்சியிருக்கும் 6 மாத கால ஆட்சியில் தீர்வு கிடைக்குமென தமிழ்தேசிய கூட்டமைப்பும், ஐக்கிய தேசிய கட்சியும் மீண்டும் மக்களை ஏமாற்றுகின்றன.

ஆனவே மகிந்த ராஜபக்ஷவின் தலையீடு இன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என சம்பந்தன் பல தடவைகள் கூறி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே மகிந்த தலைமையிலான ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்பது உறுதி. அதற்கு எமது கட்சி பூரண ஆதரவை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் தொழிலுமைத்துவமும் சிறிய முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான (Certificate in Entrepreneurship and Small Business Management) 2018/2019 ஆம் கல்வியாண்டிற் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் கணிதம் மற்றும் தமிழ் மொழி இரு திறமைச் சித்திகள் உட்பட (2C)ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 02.01.2019 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திற்கு வருகை தருவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சாந்திசேனாவுக்கு இளைஞர்கள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வோதயத்தின் சாந்திசேனா அமைப்பிற்காகயாழ். மாவட்ட இளைஞர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

18-35வயதிற்குட்பட்ட வர்கள்தமதுசுயவிபரக்கோவையுடன் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம், கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ளயாழ். மாவட்ட சர்வோதய நிலையத்திற்கு நேரில் சமூகமளிக்குமாறு இணைப்பாளர் ஸ்ரீயுகேந்திரா தெரிவித்துள்ளார்.

சர்வோதய சமூக நிறுவனத்தில் ஐக்கிய மதங்களின் ஒன்றியம் (URI) தேசிய தேசோதய சபை சமாதான நீதவான் அமைப்புடன் சாந்திசேனா அமைப்பும் நீண்டகாலமாக சமூக சேவையாற்றி வருகின்றது.

இதனை யாழ்.மாவட்ட மக்களுக்கும் விரிவுபடுத்தும் வகையில் 2019இல் இருந்து யாழ்.மாவட்ட இளைஞர்களையும் உள்வாங்குவதாக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

## பொது அரங்கு மக்கள் பாவனைக்கு



(சாவகச்சேரி)

கிராமிய துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கைதடி சிவபுரத்தில் அமைப்பெற்ற பொது அரங்கம் நேற்றுப் புதன்கிழமை காலை மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன் கலந்து கொண்டார். (இ-30)

## கலைவிழாவும் பரிசளிப்பும்

(சாவகச்சேரி )

சாவகச்சேரி புவேந்தன் பாலர் கல்வி பாரம்பரிய நிலையை 24 ஆவது ஆண்டு கலை விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி டச்சுவீதி ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சிரேஷ்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் பத்மபிரியா தரணிதரன், தென்மராட்சி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் எஸ்.முரளிகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-29)

## நூலகங்களுக்கு அங்கத்தவர்கள் இணைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர இளைஞர் கழகம் சாவகச்சேரி நகரசபையோடு இணைந்து நூலகங்களுக்கான அங்கத்தவர்களை இணைக்கவுள்ளது.

இளைஞர் கழகத்தின் வேலைத்திட்டங்களில் ஒன்றாக வாசிப்பு பழக்கத்தினை ஊக்குவிக்கும் நோக்கில் நகரசபையின் நூலகங்களோடு இணைந்து நூலகங்களுக்கான அங்கத்தவர்களை இணைக்கும் பணியினை ஆரம்பிக்கின்றது.

நாளை 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை அங்கத்தவர்களை இணைக்கும் பணி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளதாக நகர இளைஞர் கழகத்தின் தலைவர் மு.தனுராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் நூலக அங்கத்தவர்களாக இணைய ஆர்வமுள்ள மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்துடனோ அல்லது நகரசபையின் பிரதான நூலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-89)

# முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்

## நகரசபை உறுப்பினர் வலியுறுத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையினர் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும்போது முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என சாவகச்சேரி நகர சபையின் சிரேஷ்ட உறுப்பினர் கந்தையா வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நகரசபையினர் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கும் போது ஒருபோதும் வட்டாரத்திற்கு என்றோ அல்லது உறுப்பினர்களுக்கு என்றோ ஒதுக்கக் கூடாது.

நகரசபை எல்லைக்குள் எந்த வேலைத் திட்டம் மேற்கொள்ள வேண்டியது அவசியமோ அந்த திட்டத்திற்கே நிதி ஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்படல் வேண்டும். அத்துடன் எமது சபையின் சக உறுப்பினர்களே எமது வட்டார அபிவிருத்திக்கு தடை போடுகிறார்கள்.

அண்மையில் கம்பெரலிய திட்டத்தில் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இரண்டு சனசமூக நிலையங்களுக்கு மலசலகூடம் அமைக்க வேண்டும் என எனது முன்மொழிவுகளை முன்வைத்தேன்.

அதனை எமது வட்டார சக உறுப்பினர் ஒருவரே சகல பொது அமைப்புகள், தவிசாளர் மற்றும் கிராம உத்தியோகத்தர் முன்னிலையில் நிராகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

எமக்கு கட்சி பேதம் தேவையில்லை. நகர அபிவிருத்தி ஒன்றே முக்கியம். அதேபோல் சபையில் 18 உறுப்பினர்களுக்கும் ஜனநாயக உரிமை உள்ளது. கருத்து சுதந்திரம் உள்ளது. ஒருவருடைய கருத்தினை கேட்ட பின்னர் அதற்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு தெரிவிக்க முடியும். சபையில் மரியாதையான சொற்பிரயோகங்களைப் பிரயோகிக்க வேண்டும். கடின வார்த்தை பிரயோகங்களைப் பயன்படுத்துவதனைத் தவிர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## திருவருட்பா, திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

உலகத்திலே அமைதியும் சாந்தியும் சமாதானமும் ஏற்படும் பொருட்டு, மீசாலை வடக்கு வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞானக் கோட்டத்தில் திருவருட்பா ஓதுதலும் திருவாசகம் முற்றும் ஓதுதலும் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 14.01.2019 வரை தினமும் அதிகாலை 4.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (இ-5)

## 'அறநெறிக்கலை அரங்கம்'

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகமும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் 10 ஆம் நாள் நிகழ்வான "அறநெறிக் கலை அரங்கம்" நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் அ.கனிஷ்ரோ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி வே.சுப்பிரமணியம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் நாடகச் சக்கரவர்த்தி ப.பாராசிங்கம், மூத்த ஊடகக் கலைஞர் எஸ்.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 350 | 500 |
| தக்காளி | 300 | 320 | — | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 35 | 40 |
| கோவா | 120 | 120 | 150 | 120 |
| கரட் | 200 | 200 | 250 | 250 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 85 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 140 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 220 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 120 | 240 |
| பீற்றூட் | 200 | 160 | — | 200 |
| கறிமிளகாய் | 350 | 280 | 200 | 320 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 160 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | — | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 40 | 60 |
| தேசிக்காய் | 500 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 160 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | 120 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 130 | 80 |

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

119



# டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

வியாபாரத்தின் மூலம் டச்சுக்காரர் 1681 ஆம் ஆண்டிலும் 1682 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலிருந்து எவ்வளவு வருமானத்தைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதனை 1683 ஆம் ஆண்டு டச்சுக்கார அறிக்கையின் கீழ்வரும் அட்டவணை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

அத்தோடு பல்வேறுபட்ட வரிகள் மூலமாகவும் எவ்வளவு வருமானத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனையும் அதே ஆண்டு அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

மேலும் 1686 ஆம் ஆண்டு டச்சு அறிக்கையொன்றிலிருந்து அவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கற்பிட்டிப் பிரதேசங்களில் எவ்வளவு வருமானம் பெற்றிருக்கின்றார்கள் என்றும் எவ்வளவு செலவு செய்திருக்கின்றார்கள் என்றும் அறிய முடிகிறது.

திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் ஏற்பட்ட செலவு விபரங்களை அறிய முடியவில்லை.

மேற்படி வருமானங்களும் செலவுகளும் டச்சுக்காரரின் ஆட்சி தொடங்கி சுமார் 20 வருட காலத்தின் பின்னர் காணப்படுகின்ற புள்ளி விபரங்களாகும்.

வர்த்தக அதிகரிப்புகளும் உற்பத்திகளின் பெருக்கமும் சனத்தொகை அதிகரிப்பு என்பவற்றின் காரணமாகப் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்திலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் மேற்படி வருமானங்களும் இலாபங்களும் நிச்சயமாக அதிகளவு அதிகரித்திருக்கும்.

“டச்சுக்காரரின் சிக்கனத்தால் நிர்வாகச் செலவீனங்கள் அவ்வளவாக அதிகரித்திருக்கமாட்டாது. ஏனெனில் கண்டி மன்னன் இராசசிங்கனின் மரணத்திற்குப் பின்னர் டச்சுக்காரருக்குத் தென்னிலங்கையில் எதிர்ப்புக்கள் இருந்திருக்கவில்லை. மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கற்பிட்டிப்பிரதேசங்களிலும் டச்சுக்காரருக்கு எதிர்ப்புகள் இருக்கவில்லை”

| வியாபாரத்திலிருந்து பெற்ற இலாபம் 1681-1682 | | |
|---|---|---|
| பிரதேசம் | 1681 புளோறின்களில் | 1681 புளோறின்களில் |
| யாழ்ப்பாணம் | 35423.17 | 40074.09 |
| மன்னார் | 4666.12 | 5572.03 |
| கற்பிட்டி | 26766.14 | 26684.07 |
| மட்டக்களப்பு | 15063.14 | 12102.14 |
| திருகோணமலை | 11198.08 | 12973.12 |

| வரிகள், திறைகள் என்பனவற்றில் பெற்ற வருமானம் 1681-1682 | | |
|---|---|---|
| பிரதேசம் | 1681 புளோறின்களில் | 1681 புளோறின்களில் |
| யாழ்ப்பாணம் | 148251.09 | 152936.09 |
| மன்னார் | 8775.10 | 8279.17 |
| மட்டக்களப்பு | 2084.44 | 3209.08 |
| திருகோணமலை | 1591.09 | 1871.16 |

| செலவுகளும் வருமானங்களும் | | | | |
|---|---|---|---|---|
| பிரதேசம் | செலவுகள் புளோறின்களில் | | வருமானம் புளோறின்களில் | |
| | 1685 | 1686 | 1685 | 1686 |
| யாழ்ப்பாணம் | 143673.9 | 158568.16 | 253163.01 | 223257.17 |
| மட்டக்களப்பு | 91544.10 | 83169.05 | 4725.07 | 7133.10 |
| கற்பிட்டி | 7974.19 | 18755.06 | 24819.10 | 3583.41 |

டச்சுக்காரரின் சிக்கனத்தால் நிர்வாகச் செலவீனங்கள் அவ்வளவாக அதிகரித்திருக்கமாட்டாது. ஏனெனில் கண்டி மன்னன் இராசசிங்கனின் மரணத்திற்குப் பின்னர் டச்சுக்காரருக்குத் தென்னிலங்கையில் எதிர்ப்புக்கள் இருந்திருக்கவில்லை. மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், கற்பிட்டிப் பிரதேசங்களிலும் டச்சுக்காரருக்கு எதிர்ப்புகள் இருக்கவில்லை.

யாழ்ப்பாணப் பிரதேசமும் வன்னிப் பிரதேசமும் பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே டச்சுக்காரரின் மேலாண்மையை ஏற்றிருந்ததனால் அங்கும் அவர்களது ஆட்சி அமைதியாக நடைபெற்றிருந்தது.

இவ்வாறான நிலைமைகள் டச்சுக்காரரின் இராணுவச் செலவை நிச்சயமாகக் குறைத்திருக்கும். அத்தோடு தமிழ்ப் பிரதேசங்களில் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளில் கல்விகற்ற இளந் தலைமுறையினர் டச்சு நிர்வாகப் பதவிகளில் அமர்த்தப்பட்டிருப்பார்கள். இதனால் குறைந்த சம்பளத்தில் உள்ளூரில் படித்த இளைஞர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பார்கள். இதனாலும் டச்சுக்காரர் பெருமளவு பணத்தைச் சம்பாதித்திருப்பார்கள்.

அவர்கள் வர்த்தகத்தினாலும் வரிகளினாலும் பெற்ற அதிக வருமானத்திலிருந்து குறைந்த தொகையையே செலவு செய்திருப்பார்கள்.

மேலும் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கற்பிட்டி பிரதேசங்களிலிருந்து வியாபாரத்தின் மூலம் அதிகளவு வருமானத்தை டச்சுக்காரர் பெற்றிருக்கின்றார்கள் என்பது மேற்படி புள்ளிவிபரங்கள்மூலம் தெரியவருகிறது.

ஆனால் வரிகள் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் மேற்படி காலகட்டத்தில் டச்சுக்காரர் கண்டி அரசனுடன் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததன் விளைவாக மட்டக்களப்பு, திருகோணமலை, கற்பிட்டிப் பிரதேசங்களில் முழுமையாகத் தமது நிர்வாக அமைப்பு முறைகளை அமுல் நடத்த முடியாமற் போய்விட்டதேயாகும்.

ஏனெனில் டச்சுக்காரர் மேற்படி பிரதேசங்களின் துறைமுகப் பகுதிகளைத் தான் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். (தொடரும்)

# “இலங்கையில் இனி ஒருபோதும் ஆயுதப் போருக்கு வாய்ப்பில்லை”

## பிரி. தூதரக அதிகாரிகளுடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் சந்திப்பு





(திருமலை)

ஜனநாயகபோராளிகள் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானியகத்தின் உயர்ஸ்தானிகரின் முதன்மை செயலாளர் போல் கிறீன் மற்றும் பிரித்தானியாவின் ஜெனிவாவுக்கான மனித உரிமைகள் குழுவின் பிரதித்தலைவர் பொப் லாஸ்ட் குழுவினருக்கு மிடையிலான சந்திப் பொன்று திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் பிரித்தானியா ஆற்றுகின்ற பணிகள் தொடர்பிலும் எதிர்காலத்தில் காணாமல் செய்யப்பட்டோருக்கான பொறுப்புக்கூறலில் தாங்கள் செய்யவிருக்கின்ற பணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது

புனர்வாழ்வு பெற்ற போராளிகள் தற்போதைய பாதுகாப்பு,அவர்களது சமூக அந்தஸ்து. வாழ்வாதார நிலை. வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்கின்றபோது சந்திக்கின்ற இடர்பாடுகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது.

எதிர்காலத்தில் போராளிகள் தேர்தல்களில் பெற்றுக்கொள்கின்ற அங்கீகாரங்களே மேலும் சர்வதேச இராஜதந்திரிகளும் அவர்கள் சார்ந்த நாடுகளும் போராளிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் எதிர்கால சமூக பொருளாதார வாழ்வியல்முன்னேற்றங்களில் செயற்படுவதற்கான ஏது நிலைகளை உருவாக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயக அரசியலுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பு விரைவாக தங்களை தயார்படுத்தி செயற்படுவது நம்பிக்கையினையும் வரவேற்பினையும் சர்வதேச அளவில் ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாறிவரும் உலக ஒழுங்குகளுக்கேற்ப தமிழ் மக்களின் கௌரவமான தீர்வு பொருளாதார சமூக முன்னேற்பாட்டு முயற்சிகளில் போராளிகள் தமிழர் அரசியல் பரப்பில் உள்ள அனைவருடனும் பொது உடன்பாடுகளுக்கமைய செயற்பட உள்ளதாகவும். இனி ஒரு போதும் இலங்கைத்தீவில் ஓர் ஆயுதப்போர் ஒன்றுக்கான ஏது நிலை தமிழ் மக்களிடமோ போராளிகளிடமோ உறுதியாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)





சாவகச்சேரி நுணாவில் மேற்கு வான்மதி சனசமூக நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெற்றது. அடிக்கல் நாட்டு வைபவத்தில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே. சயந்தன் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வான்மதி சனசமூக நிலையக் கட்டடம் அமையப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-சுபேசன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1585

### குணவதி

பணத்தின் மீது நம்பிக்கை வைப்பதைவிட நல்ல நண்பர்கள் மீது நம்பிக்கை வைப்பதே சிறந்தது




### விஜயா

யாரிடமும் அதிக அன்பு வைக்காதே பிரியும் நேரங்களில் அழுவது உன் கண்களாக இருக்காது உன் இதயமாகத் தான் இருக்கும்



### கலையரசன்

எப்படியும் முயற்சிக்கலாம், ஆனால் முயற்சிக்காமல் புலம்பாதே



### டினோசன்

துரோகங்கள் நமக்கு கற்றுக்கொடுப்பவை ஒன்றுதான் சற்றே சுயநலமாய் இருந்திருக்கலாம் என்று



### தேவா

ஒரு உறவு நம்மிடம் மன்றாடுகிறது என்றால் வேறு போக்கிடம் இல்லாமல் இல்லை நம்மை இழக்க மனமில்லாததால்தான்




### கஸ்தூரி

Sunday ஆனா போதும் இந்த அம்மாங்க தொல்லை தாங்க முடியல அதைச் செய் இதைச் செய்யுனு...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட மாபெரும் விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட 2019 ஆண்டு நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்தவகையில்,

**மென்பந்தாட்டம்** 7 பேர் 5 ஓவர் வடமாகாண ரீதியில் 1 ஆம் இடம் 30,000/- 2ஆம் இடம் 20,000/- 3ஆம் இடம் 10,000/- **இருபது-20 கடினப்பந்து** 1ஆம் இடம் 50,000/- 2ஆம் இடம் 30,000/- 3ஆம் இடம் 20,000/- **கரப்பந்தாட்டம் வடமாகாண (செற்றப்)** 1ஆம் இடம் 30,000/- 2ஆம் இடம் 20,000/- 3ஆம் இடம் 10,000/-

**கரப்பந்தாட்டம் வடமாகாண ஓவர்கேம் 5பேர்** 1ஆம் இடம் 30,000/-, 2ஆம் இடம் 20,000/-, 3ஆம் இடம் 10,000/-, **கடற்கரை கரப்பந்தாட்டம்** Beach Volleyball **வடமாகாண செற்றப்** 1ஆம் இடம் 20,000/-, 2ஆம் இடம் 15,000/-, 3ஆம் இடம் 10,000/-

வடமாகாண ரீதியில் அஞ்சல் ஓட்டப் போட்டிகள் Really carnival பாடசாலை ரீதியில் மற்றும் கழக ரீதியில் 300,000/- பெறுமதியில் பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. வடமாகாண ரீதியில் கராத்தே போட்டிகள் பாடசாலை ரீதியில் மற்றும் கழக ரீதியில் 200,000/- பெறுமதியில் பணப்பரிசு வழங்கப்படும். உதைபந்தாட்டம் யாழ்.மாவட்டம் 1ஆம் இடம் 50,000/-, 2ஆம் இடம் 30,000/-, 3ஆம் இடம் 20,000/-, கிளித்தட்டு வடமாகாண ரீதியில் 1ஆம் இடம் 30, 000/, 2ஆம் இடம் 20, 000/-, 3ஆம் இடம் 10,000/-, கபடி, வலைப்பந்தாட்டம் வடமாகாண ரீதியில் 1ஆம் இடம் 30,000/-, 2ஆம் இடம் 20,000/-, 3ஆம் இடம்10,000/-, வடமாகாண ரீதியில் கராத்தே போட்டிகள் பாடசாலை ரீதியில் மற்றும் கழக ரீதியில் 200,000/- பெறுமதியில் பணப்பரிசு வழங்கப்படவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவர்கள் விளையாட்டு தலைவர் ந. சுதேஸ்குமார் 077 617 6988, இணைச் செயலாளர்களான கவிந்தன் 077 309 5745 மற்றும் மதியழகன் 077 907 3792 ஆகியோருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என போட்டி ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (க)




2018 இற்கான ஜப்பான் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 09 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் எஸ்.எஸ்.கே.ஏ. கராத்தே கழகம் சார்பாக பங்குகொண்ட பூநகரி விக்னேஸ்வரா மாணவன் ஐ.ஜெனிஸ்ரன் 12 வயதுப் பிரிவில் காட்டா, குமித்தே ஆகிய இரு போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பூநகரி மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவி எ.ஜெனிஸ்ரலா 8 வயதுப் பிரிவு காட்டா போட்டியில் முதலாம் இடத்தையும் குமித்தேயில் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். (க)



2018 இற்கான ஜப்பான் சோட்டோகான் கராத்தே சங்கத்தால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 09 ஆம் திகதி கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குகொண்ட சக்குறா சோட்டாகான் கராத்தே சங்க அணியினர் 12 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம் என 16 பதக்கங்கள் பெற்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள். (க)

# பப்பரே சம்பியன்ஷிப் போட்டிகள் சென்.பற்றிக்ஸ் அணியும் களத்தில்







இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுமதியுடன், இலங்கை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் பப்பரே சம்பியன்ஷிப் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி யாட்டங்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள, முதலாவது அரையிறுதியாட்டத்தில் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்ரெல்லா கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சென்.ஜோசப் அணி மோதவுள்ளது.

அன்றைய தினம் 5.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரி மோதவுள்ளது.



அரையிறுதியில் விளையாடும் நான்கு அணிகளில் 3 அணிகள் கொழும்பு அணிகள் ஆகும். நான்காவது அணியாக யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் உள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இறுதிப்போட்டி மற்றும் மூன்றாமிடத்துக்கான போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. (க-26)

# தனது சுயத்தை இழந்ததால்தான் அவுஸ்திரேலிய அணி தோல்வியடைந்தது

அவுஸ்திரேலியா பழைய ஆக்ரோஷத்துடன் விளையாடாவிட்டால் மீண்டும் கிரிக்கெட்டில் எழுந்துவர முடியாது. வெற்றியை ருசிக்க முடியாது என சமீபத்தில் ஓய்வு பெற்ற இந்திய வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார். பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் அவுஸ்திரேலிய வீரர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை அடுத்து அந்த அணியின் செயல் மோசமாக சென்று கொண்டிருக்கின்றது.

இது குறித்து பேசிய இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர், அவுஸ்திரேலியாவின் வெற்றியே அவர்களின் ஆக்ரோஷம் தான். களத்தில் எதிரணி வீரரை கிண்டல் செய்வது, முறைப்பது, வீரரை வீழ்த்த செய்யும் சூழ்ச்சி என அவர்களின் உண்மை குணத்தை மறந்து விட்டனர்.




நானும் களத்தில் ஆக்ரோஷமாகவும், கிண்டல் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டவன் தான். எனக்கும் அது நடந்துள்ளது. ஆனால் அவுஸ்திரேலியாவின் இயல்பான அந்த ஆக்ரோஷத் தன்மை இல்லாததால் இந்தியாவிடம் அந்த அணி தோல்வியடைந்தது. மீண்டும் தங்கள் இயல்பு நிலைக்கு அவர்கள் வரலாம் எனக் கூறியுள்ளார். (க)

# இன்னொரு முறை அப்படி நடந்தால் உன் கழுத்தைப் பிடித்திடுவேன்

தனக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய ரோகித் ஷர்மாவுக்கு இந்திய வீரர் யுவராஜ் சிங் கிண்டலாக பதிலளித்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணி வீரர் யுவராஜ் சிங் நேற்று தனது 37-வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். இதையடுத்து அவருக்கு டுவிட்டரில் சக கிரிக்கெட் வீரர்களும், ரசிகர்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.




இந்நிலையில் ரோகித் ஷர்மா டுவிட்டரில் யுவராஜ் சிங்குக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். அந்த பதிவில் யுவராஜ், ரோகித் ஷர்மாவின் கழுத்தை பிடிப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டார். அதற்கு பதிலளித்த யுவராஜ் சிங், அடுத்த தடவை 37 ஓட்டங்களில் அவுட்டானால், மீண்டும் இதேபோல உன்னுடைய கழுத்தை பிடிப்பேன் என பதிவிட்டுள்ளார். அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ரோகித் ஷர்மா 37 ஓட்டங்களில் அவுட்டானது குறிப்பிடத்தக்கது. (க)




# உதங்க மேகங்கள்



மகாபாரதப் போர் முடிந்து, கிருஷ்ணர் குருஷேத்திரத்தில் இருந்து தன் ஊரான துவாரகைக்குச் செல்லக் கிளம்பினார். போகும் வழியில், ஒரு மாபெரும் பாலை வனத்தைக் கடக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

அதைக் கடந்து போய்க் கொண் டிருந்த போது, அந்தப் பாலை வனத்திலேயே தங்கிக் கடும் தவம் செய்து கொண்டிருந்த முனிவரான உதங்கர், கிருஷ்ணரைக் கண்டார் .

கடவுள் உருவமான கிருஷ்ணரைக் கண்டதும் உதங்கரின் மனதில் மகிழ்ச்சி மேலிட்டது.

அவர் கிருஷ்ணரிடம் வந்து பாதபூஜை செய்து வணங்கி நின்றார். பின்னர் கிருஷ்ணரிடம் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நிலவி வந்த பிரச்சினையைப்பற்றிப் பேசத் தொடங்கினார் .

"கிருஷ்ணா! கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்குமான பிரச்சினையைச் சரி செய்வதற்காக நீ தூது சென்றாயே! அது நீ நினைத்தபடி வெற்றி அடைந்ததுதானே?" என்று கேட்டார்.

கிருஷ்ணரோ அவ்வாறு நடக்கவில்லை என்று கூறிவிட்டு மகாபாரதப் போர் நடந்த விபரத்தையும் எடுத்துரைத்தார்.

இப்போது உதங்கருக்கு, கிருஷ்ணர் மேல் கோபம் வந்தது. "நீ! எப்படியாவது சமாதானத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டியவன். நீயே இப்படிச் செய்யலாமா? உன் செயல் தவறானது. ஆகையால் உனக்கு நான் சாபம் கொடுப்பதென்று முடிவு செய்து விட்டேன், என்று சொல்லி, கிருஷ்ணருக்குச் சாபம் கொடுக்கத் தயாரானார்.

அமைதியாக உதங்கரின் பேச்சைக் கேட்ட கிருஷ்ணர்,

"உதங்கரே! துரியோதனனுக்கு நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவனே வலிய வந்து போர் செய்யப் பாண்டவர்களைத் தூண்டினான்.

கொஞ்சமும் சமாதானத்துக்கு அவன் தயாராக இல்லாத போது, நான் வேறு என்ன செய்யமுடியும்?" என்று அவருக்குத் தெளிவாக விளக்கினார்.

உதங்கருக்குக் கிருஷ்ணரின் பேச்சில் உள்ள நியாயம் புரிந்தது. "கிருஷ்ணா! அவசரப் பட்டுப் பேசிவிட்டேன். என்னை மன்னித்துவிடு 'என்று கிருஷ்ணரை வணங்கினார்.

கிருஷ்ணர் அவரை மன்னித்தாலும் அவர் மனதுக்குள் ஒரு எண்ணம் எழுந்தது. இவ்வளவு நியாயம் பேசும் இந்த உதங்கர், அப்படி என்னதான் நியாயவாதி என்பதைக் கொஞ்சம் சோதித்துத்தான் பார்ப்போமே! என்று நினைத்துக் கொண்டார்.

உதங்கரிடம் வேண்டிய வரத்தைக் கேட்கும்படி சொன்னார். உதங்கர், "வரம் ஏதும் வேண்டாம்" என்று மறுத்தபோதும் கிருஷ்ணர் வற்புறுத்தவே உதங்கரும் வேறு வழியின்றி ஒரு வரத்தைக் கேட்டார். "கிருஷ்ணா! இந்தப் பாலை வனத்தில் நான் நினைக்கும் போது, எனக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டும்" என்று வரம் கேட்டார் கிருஷ்ணரும், "அப்படியே ஆகட்டும்" என்று வரமளித்து விட்டு அவ்விடத்தில் இருந்து அகன்றார்.

நாட்கள் பல கடந்து விட்டன.

உதங்கர் வழக்கம்போலத் தவம் செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் திடீரென்று உதங்கருக்கு மிகுதியான தாகம் எடுத்தது.

தாகத்தால் தவித்தார்.

"என்ன இது! ஒரு நாளும் இல்லாத திருநாளாக இன்று இப்படி தாகம் எடுக்கிறது. என் தவவலிமையைக் கொண்டும் கூட இந்த தாகத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே" என்று எண்ணினார் உதங்கர். மாயவன் விரித்த மாயவலையில் வீழப்போகும் உதங்கருக்கு தாகம் அவ்வளவு எளிதில் அடங்கி விடுமா என்ன? வெகு நேரமாக தாகத்தை அடக்க முயற்சித்தும் அது இயலாது போன நிலையில் கிருஷ்ணர் கொடுத்த வரம் உதங்கரின் நினைவுக்கு வந்தது.

உடனடியாக கிருஷ்ணரை நினைத்தபடி "எனக்கு இப்போதே தண்ணீர் கிடைக்க வேண்டும்" என்று மனதால் வேண்டிக் கொண்டார்.

சற்று நேரத்தில், அந்த வழியாக நாய்களை ஓட்டியபடி ஒருவன் வந்தான். அவனது உருவம் பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. மாமிசத்தை கையில் வைத்து சுவைத்தபடி அவன் உதங்கரை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனிடம் இருந்த தோல் பையில் தண்ணீர் இருந்தது. உதங்கர் தாகத்தில் தவிப்பதைப் புரிந்து கொண்ட அவன், "உதங்கரே! என் பையில் தண்ணீர் இருக்கிறது. இந்தாருங்கள். இதைக் குடித்து உங்கள் தாகத்தைத்தணித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினான்.

"பார்க்கவே அருவருப்பாக இருக்கும் இவனிடம் தண்ணீர் வாங்கிக் குடிப்பதா?" என்று நினைத்த உதங்கர், "எனக்கு உன் தண்ணீர் ஒன்றும் வேண் டாம். தயவுசெய்து இங்கிருந்து சென்று விடு" என்று அவனை விரட்டினார்.

உடனடியாக அவன் அங்கிருந்து மறைந்து போனான்.

அதைக் கண்ட உதங்கர் அதிர்ச்சி அடைந்தார். அந்த அதிர்ச்சியில் இருந்து அவர் மீள்வதற்குள், அந்த இடத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்தார் கிருஷ்ணர். அதிர்ச்சியில் உறைந்து போய் இருந்த உதங்கரைப் பார்த்து,

"என்ன உதங்கரே! நீர் நினைத்தபடி தண்ணீர் கிடைத்ததா?" என்று கேட்டார்.

உதங்கரோ, "கிருஷ்ணா! என்ன விளையாட்டு இது? சண்டாளனிடம் நான் எப்படி நீர் வாங்கிக் குடிப்பது? தர்மம் தெரிந்த உனக்கு இது தெரியாதா?" என்று இழுத்தார்.

கிருஷ்ணர் சிரித்துக் கொண்டே, உதங்கரே! இப்படி ஒருவனை, அவன் செய்யும் தொழிலைக் கொண்டு இழிவாகப் பார்ப்பது தவறு . உங்கள் தர்மம்தான் விசித்திரமாக இருக்கிறது.

சரி அது போகட்டும். வந்தது யார் தெரியுமா?" என்று கேட்க, உதங்கரோ ஒன்றும் புரியாமல், தெரியாமல் திகைப்பில் விழித்துக் கொண்டிருந்தார்.

வந்தது... இந்திரன்...

"நானே சொல்கிறேன். வந்தது இந்திரன். அவன் கையில் இருந்த தண்ணீர் அமிர்தம். உம்மைச் சோதிப்பதற்காவே அவன் அப்படி வந்தான். அமிர்தம் குடித்து தேவனாக வாழ்வு பெறும் ஒரு நல்ல வாய்ப்பை நீங்கள் இன்று இழந்தீர்கள்" என்று கிருஷ்ணர் உதங்கருக்கு விளக்கினார். தன் செய்கையை நினைத்து உதங்கர் வெட்கித் தலை குனிந்தார்.

"இருந்தாலும் பரவாயில்லை. உங்களுக்கு நான் அளித்த வரத்தின்படி, இனி நீங்கள் தண்ணீர் வேண்டும் போதெல்லாம், இந்தப் பாலை வனத்தில் மேகங்கள் வந்து மழை பொழிந்துவிட்டுப் போகும். அவை உங்கள் பெயரால் "உதங்க மேகங்கள்" என்றே அழைக்கப்படும்' என்று உதங்கருக்கு அருள் செய்து விட்டு அங்கிருந்து மறைந்தார், கிருஷ்ண பரமாத்மா.

# மரம் வளர்ப்போம்

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!

பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறையக் கொடுக்கிறது!

அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருது!

அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது!



அண்ணன் வைத்த மாதுளையும்,
கிண்ணம் போல பழுக்கிறது!

சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வள்ர்ப்பேனே.....

# துணுக்குகள்

- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.
- கெட்டுப்போகாத உணவுப்பொருள் தேன்.
- கிளியும் முயலும் தங்கள் பின்னால் இருப்பதை தலை திருப்பாமலே கண்டு பிடிக்கும்.
- பனிக்கரடிகள் ஒரே அமர்வில் 86 பெங்குயின்களை விழுங்குமாம்.

ஆசிரியர்: ஏன்டா உன் புத்தகங்களை எல்லாம் பக்கத்து மேசையில் வச்சிட்டு நீ வந்து இங்க உட்கார்ந்திருக்க?

மாணவன்: நீங்க தானே சேர் பிரச்சினைகளைத் தள்ளி வைக்கணும்னு சொன்னீங்க?



மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# என்று தணியும் இந்த அரசியல் குழப்பம்!

பாராளுமன்றம் நேற்றைய தினமும் கூடியது. ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கான பெரும்பான்மை பலம் நேற்றும் நிரூபிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை வழங்குமா? வழங்காதா? என்பது தொடர்பில் பாராளுமன்றம் கூடும்வரை தெரிவிக்கப்படவில்லை.

எனினும் பாராளுமன்றம் கூடி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவது என்ற தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்ற தகவலை முன்கூட்டியே வெளியிட்டால் அது தம் கட்சி மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தும் என்ற பயம் காரணமாகவே கூட்டமைப்பு இரகசியம் காத்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு எப்போதும் இருக்கும் என்பது தெரிந்த உண்மை.

இவை ஒருபுறம் இருக்க, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கான பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெற்றதை அடுத்து அதுபற்றிய தகவலை சபாநாயகர் ஜனாதிபதி மைத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இறுதி முடிவு எடுக்கின்ற முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கே உண்டு என்ற அடிப்படையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவாரா என்பதுதான் இப்போது எழுகின்ற வினா.

ஜனாதிபதியை பொறுத்தவரை எக்காரணம் கொண்டும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்க மாட்டேன் எனப் பல தடவைகள் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்நிலையில் பாராளுமன்றம் மீண்டும் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவது பற்றியே சிந்திக்கிறது.

ஆக, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவது என பாராளுமன்றமும் ரணிலைப் பிரதமராக்குவதில்லை என ஜனாதிபதியும் கடும் பிடியாக நிற்கின்றனர்.

சுருங்கக்கூறின் பிரதமர் ரணில் – ஜனாதிபதி மைத்திரி என்ற இரண்டு நபர்கள் தொடர்பில் இலங்கை அரசியலமைப்பு ஈடுகொடுக்க முடியாமல் சிக்குண்டு போயுள்ளது.

நிலைமை இப்படித்தான் இருக்கும் என்பதைப் புரிந்து ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அறிவிப்பை விடுத்தார்.

எனினும் பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை எனக் கூறி பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இம் மனு மீதான விசாரணைகள் முடிவுற்ற போதிலும் தீர்ப்பு இன்னமும் காலதாமதமாகிறது.

இந்நிலையில் நாட்டின் தற்போதைய அரசியல் குழப்பம் தணியுமா என்றால்,

ஒன்று பிரதமர் பதவியில் ரணில் விக்கிரமசிங்கவை விடுத்து அவரின் கட்சியைச் சார்ந்த ஒருவரைப் பிரதமராக முன்மொழிந்தால் அரசியல் குழப்பம் தணியும்.

இல்லை அப்படி எதுவும் செய்ய முடியாது என்றால், நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றுதான் அரசியல் குழப்பத்தைத் தணிக்கும் அருமருந்தாகும்.

# மகிந்த மீது அமெரிக்கத் தூதுவர் அபாண்டமாக குற்றம் சுமத்துகிறார்

## பந்துல குணவர்த்தன விசனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததன் பின்னரே இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களுடனான சந்திப்பில் அபாண்டமாக குற்றம் சாட்டியுள்ளார்.

2015ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுப்பேற்ற போதே இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது என்பதை அவருக்குத் தெரியப்படுத்த விரும்புவதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களை அண்மையில் சந்தித்திருந்தார்.

அந்தச் சந்திப்பின்போது தற்போது இலங்கை பொருளாதாரம் பாரிய வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். அவருக்கு ஒரு விடயத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை.

கடந்த 2015ஆம் ஆண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொருளாதார நிர்வாகக் குழு அமைக்கப்பட்ட போதே இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது.

ரணில் விக்கிரமசிங்கவினுடைய பொருளாதாரக் கொள்கையின் மூலம் இறக்குமதி வரி குறைக்கப்பட்டு ஏற்றுமதி வரி அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாரிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# வசமாக மாட்டிய சைக்கிள் திருடன்

துவிச்சக்கரவண்டி திருடடில் ஈடுபட்ட திருடன்ஒருவரை மடக்கிப்பிடித்து தர்ம அடி கொடுத்து பொலிஸிடம் கொடுத்த சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம்பெற்றுள்ளது.

சமபவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள வீடொன்றில் துவிச்சக்கர வண்டியை திருடிய திருடன் ஒருவரை அங்கு பொருத்தப்பட்ட சிசிரிவி கமரா மூலம் வீட்டின் உரிமையாளர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த வீடியோவை தனக்கு தெரிந்தவர்களுக்கு அனுப்பியுள்ளார். இதனால் இந்த வீடியோவைப் பார்த்த ஒருவர் நேற்று அரசடி வீதியில் சந்தேகநபர் துவிச்சக்கர வண்டியில் வருவதனைக் கண்டு வீட்டின் உரிமையாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனால் சாதுரியமாகச் செயற்பட்ட வீட்டின் உரிமையாளர் மேற்படி திருடனை மடக்கிப் பிடித்து தர்ம அடி கொடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்

இது தொடர்பிலான விசாரணையை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-78)

# போலி சான்றிதழ்கள் அச்சிடுபவர் கைது

(கல்னேவ)

கல்னேவ, கலங்குட்டிய பிரதேசத்தில் போலி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஒரு தொகையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சகம் ஒன்றில் போலி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்கள் அச்சிடப்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவலின்படி நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 42 போலி சாரதி அனுமதிப்பத்திர ங்கள், 08 வாகன வரு மான வரிப்பத்திரங்கள், மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள், பிறப்புச் சான் றிதழ்கள் உள்ளிட்ட போலி ஆவணங்கள் அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்னேவ, கலங்குட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## டென்ஷன் ஆகாமல் இருக்க..

- நிதானமாக எதையும் சிந்தியுங்கள், பேசுங்கள், வீண் வதந்திகளை நம்பாதீர்.
- உங்களை நீங்களே அழித்துக்கொள்ளும் ஆயுதம் டென்ஷன் என்பதை அறிந்திடுங்கள்.
- பதற்றத்தைத் தவிர்த்து பக்குவப்படுத்திக் கொள்ள ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து முடிவு எடுங்கள்.
- அமைதி, அன்பு, கருணை இவைகளை மனதில் வளர்த்துக்கொண்டால் டென்ஷன் தோன்றாது.
- இறைவழிபாடுகளும் தன்னம்பிக்கையூட்டும் புத்தகங்களும் தியானப் பயிற்சிகளும் மேற்கொண்டால் டென்ஷனைத் தவிர்த்து சிறந்து விளங்கலாம்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் சமகால அரசியற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைகழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நடத்தும் "சமகால அரசியற கருத்தரங்கு" நாளை 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.05 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக அரசியற் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் "2009 இற்கு முன்னரான இராஜதந்திரத்தின் நினைவுகளை மீட்டல்", யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவா கே.குருபரன் "யுத்தத்திற் குப் பின்னரான சர்வதேச அரசியலை தமிழ்க் கண்தொண்டு பார்த்தல்", அரசியல் விமர்சகர் எம். நிலாந்தன "2009 இற்குப் பின்னரான தமிழ இராஜதந்திரம்" எனும் தலைப்பிலும் உரையாற்றுவர். (இ-5)

# வவுனியாவில் சடலம் மீட்பு

வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் தாயார் வெளியில் சென்று வீடு திரும்பிய பொழுது தனது மகன் சடலமாக இருப்பதை கண்டுள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

26 வயதுடைய காளியப்பன் கஜமுகன் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,281)

# மாரடைப்பால் குடும்பப் பெண் மரணம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கொடிகாமம பகுதியில் நேற்றுப் புதன் கிழமை காலை குடும்பப் பெண் ஒருவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.

நெஞ்சு வலி காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட் டதாக தெரிவிக்கப்படுகிறது. பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 58 வயதான புஸ்பாதேவி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-30)

# சத்திய தரிசனம்

## ஆனந்தம் இன்று ஆரம்பம்



❖ அறிவுக்கதவை திறப்பதுடன், அறியாமை என்ற திரையையும் கிழித்து எறிந்தால் தான் கடவுளைக் காண முடியும்.

❖ இதயம் உட்பட அனைத்து இடங்களிலும் கடவுள் இருக்கிறார், அவரை அங்கே கண்டு கொள். உனக்கு மிக நெருக்கமானவர், அனுக்கிரகமானவர் என்றும் அறிந்து கொள்.

❖ நாவில் சர்க்கரை இருக்கும் வரை இனிப்பும் இருக்கும். இதயத்தில் அன்பு, அமைதி, பக்தி இருக்குமானால் ஆனந்தம் இன்று துவங்கி வாழ்நாள் வரை தொடரும்.

❖ ஒவ்வொரு அணுவிலும் இறைவன் இருக்கிறான். அவனை விட்டு மனிதனால் உயிர் வாழ முடியாது. உலகமே இறைவனைக் காண விழைகிறது.

❖ கருணையால் நிரம்பிய இதயத்திற்கும், உண்மையை பூஜிக்கும் சொல்லை கொண்டவருக்கும், பிறருக்கு உதவி செய்பவருக்கும் இவ்வுலகிலுள்ள எந்த தீய ஆற்றலாலும் தீமை செய்ய முடியாது.

உன்னால் முடியும்

N.T.GAJENTHIRAN

# Bio BIOLOGY Rank List 2020

**Serial Exam**

வெற்றி நிச்சயம்

## Month November

**N.T.GAJENTHIRAN BSc**

NEW SCIENCE WORLD

| Name | School | Rank | Name | School | Rank |
|---|---|---|---|---|---|
| Thadshayini Ragunathan | J/Vembadi Girl's High School | 88.58 | Vatenja Selvarasa | J/Vembadi Girl's High School | 59.29 |
| Yogarasa Aravinthi | J/Kokuvil Hindu College | 84.53 | Nanthakumaran Viththyasagan | J/Hindu College | 59.22 |
| Layansika Jegatheeswaran | J/Manipay Ladies College | 83.90 | Thadshajini Jeevathasan | J/Vembadi Girl's High School | 59.11 |
| Murralitharan Piragayan | J/Hindu College | 83.48 | Kamshajini Thayananthan | J/Kokuvil Hindu College | 58.95 |
| Sundareswary Tharmaputhiran | J/Kokuvil Hindu College | 81.46 | Shankavi Sayanthan | J/Hindu Ladies College | 58.76 |
| Anista Kailasapathy | J/Hindu Ladies College | 81.27 | Dinusha Ravichandran | J/Kokuvil Hindu College | 58.21 |
| Thiviyani Jeyanthan | J/Vembadi Girl's High School | 81.01 | Impulan Shathushana | J/Kokuvil Hindu College | 58.17 |
| Shambavi Baskaran | J/Vembadi Girl's High School | 80.67 | Kajani Cukaparan | J/Vembadi Girl's High School | 57.94 |
| Indrajith sangeerthanan | J/Kokuvil Hindu College | 80.09 | Sriskanthakumar Thivikkshanan | J/Hindu College | 57.40 |
| Myvily Nagendran | J/Kokuvil Hindu College | 80.02 | Aranee Thiyagarajah | J/Kokuvil Hindu College | 57.31 |
| Kalaimathy Premanathan | J/Manipay Ladies College | 79.75 | Jenarubi Kanagarathnam | J/Manipay Ladies College | 57.13 |
| Wijayanthy Wijayakumar | J/Vembadi Girl's High School | 78.96 | Premachandran Abishek | J/St.Patrick's College | 57.03 |
| Kajani Gurusamy | J/Vembadi Girl's High School | 78.96 | Anusha Ravindran | J/Vembadi Girl's High School | 56.52 |
| Avanika Varatharasa | J/Vembadi Girl's High School | 78.41 | Printhini Selvaranjen | J/Manipay Ladies College | 56.45 |
| shanhavi Kamaleswaran | J/Vembadi Girl's High School | 78.13 | Arthigaa Veeraragavan | J/Vembadi Girl's High School | 56.12 |
| Vyshnavi Paramanantham | J/Vembadi Girl's High School | 77.51 | Valantena Jeyachandran | J/Vembadi Girl's High School | 55.92 |
| Mathumai Srikaran | J/Vembadi Girl's High School | 76.77 | Vaishnaa Babakaran | J/Vembadi Girl's High School | 55.74 |
| Vimalendranathan Venukaran | J/Hindu College | 76.40 | tharminy Ravithasan | J/Hindu Ladies College | 55.35 |
| Sujajini Ravichandran | J/Vembadi Girl's High School | 76.09 | sritharan Pranavan | J/Hindu College | 54.42 |
| Uthayakumar Bavalakshan | J/Chavakachcheri Hindu College | 75.72 | Jerad Anthonipillai Sageenan | J/St.Patrick's College | 54.37 |
| Senthamilselvi Senthinathan | J/Kokuvil Hindu College | 75.60 | kugapiriyan sathiyavarathan | J/Hindu College | 53.83 |
| Givashanth Thamotharakumar | J/Hindu College | 75.23 | Rakshiny Nagaradnam | J/Hindu Ladies College | 52.68 |
| Papitha Uthayajakumar | J/Vembadi Girl's High School | 75.23 | Thulashiga Balasingam | J/Vembadi Girl's High School | 52.40 |
| Tharuka Parameswaran | J/Vembadi Girl's High School | 74.41 | Sivapalan Thenisha | J/Hindu Ladies College | 51.97 |
| Thamilpriya Arivarasan | J/Vembadi Girl's High School | 74.16 | Yathusha RanjithKumar | J/Vembadi Girl's High School | 51.83 |
| Piranavi Kapilan | J/Hindu Ladies College | 73.96 | Suresh Dinoja | J/Kokuvil Hindu College | 51.65 |
| Suvethika Thillainathan | J/Hindu Ladies College | 73.93 | Lavanisha Balakanthan | J/Hindu Ladies College | 51.64 |
| Mary Evengel Anton Premathas | J/Vembadi Girl's High School | 73.53 | Vithushalini Anjupit | J/Chundikuli Girl's College | 51.62 |
| Jayachandran Mathavan | J/Hindu College | 73.15 | Thadshanamoorthy Dinesh | J/Kokuvil Hindu College | 51.58 |
| Sanjika Sundaralingam | J/Hindu Ladies College | 73.15 | Sangkavika Kanesalingam | J/Hindu Ladies College | 51.58 |
| Manojika Subaskarakukamoorthy | J/Vembadi Girl's High School | 73.14 | Jegaseelan Agash | J/Hindu College | 51.41 |
| Varunja Tharmaselan | J/Vembadi Girl's High School | 73.10 | Aarabhi Anton Yoganayagam | J/Vembadi Girl's High School | 50.49 |
| Suresh Birunthavan | J/Hindu College | 72.75 | Thenusha Thayalan | J/Vembadi Girl's High School | 50.30 |
| Jathursiny Tharmasena | J/Vembadi Girl's High School | 72.57 | Sharan .kugathasan | J/Hindu College | 50.16 |
| Uthayakumar Ragavi | J/Vembadi Girl's High School | 72.32 | Kemissha Thavendran | J/Holy Family Convent | 49.73 |
| Miruthy sureshkumar | J/Vembadi Girl's High School | 71.48 | Ramini Thineshkumar | J/Chundikuli Girl's College | 49.64 |
| VasanthaKumar Javagar | J/Hindu College | 71.37 | Vinayagamoorthy Thivakaran | J/St.John's College | 49.58 |
| Anubama Sivashanmugarajah | J/Vembadi Girl's High School | 70.92 | Habilini .Paramthillairajan | J/Vembadi Girl's High School | 49.56 |
| Eswaran Showmiya | J/Manipay Ladies College | 70.90 | Vaishnavi Yogarajah | J/Hindu Ladies College | 49.41 |
| Vijansika Nanthakumar | J/Vembadi Girl's High School | 70.33 | Yogarasa Gowryshanker | J/Hindu College | 49.40 |
| Janusiya Muralithas | J/Kokuvil Hindu College | 69.99 | Kokilaraja Sijani | J/Kondavil Hindu College | 48.95 |
| Kajalukshy Kirubananthan | J/Vembadi Girl's High School | 69.80 | Mathiyalakan Suvethan | J/Hindu Ladies College | 48.44 |
| Tharshiga Mahendran | J/Vembadi Girl's High School | 69.72 | sutheskumar Hamshayini | J/Kokuvil Hindu College | 48.36 |
| Saboordeen Althaf Ahamed | Ak/pottuvil Central College | 69.71 | Linganarupan Mathurshan | J/Hindu College | 48.32 |
| Vaishnavi Thushyanthan | J/Vembadi Girl's High School | 69.33 | Lishani Vikneswaran | J/Vembadi Girl's High School | 48.25 |
| Mohanarajan Thiviyaharan | J/Hindu College | 69.29 | Mary Jasmini Rajmohan | J/Manipay Ladies College | 48.21 |
| W.N.Aruljeevithan | J/St.John's College | 68.55 | Theebikha Chandrathas | J/Hindu Ladies College | 47.97 |
| Kugathasan Jathurshan | J/St.John's College | 68.54 | Thenuya Ragu | J/Vayavilan Central College | 47.86 |
| Kajani Gnanasampanthan | J/Vembadi Girl's High School | 67.21 | Danushikka Jegatheeswaran | J/Kokuvil Hindu College | 47.80 |
| Shalini Berty Bannister | J/Vembadi Girl's High School | 66.40 | Karththikagine Kunasegaram | J/Vembadi Girl's High School | 47.65 |
| Parathan Faith Naomi | J/Vembadi Girl's High School | 66.12 | Kosikan Kadotkaan | J/Hindu College | 47.61 |
| muralietharan Vithusha | J/Vembadi Girl's High School | 65.65 | Shaambavi Umasegar | J/Hindu Ladies College | 47.41 |
| Vithusana Aingkaraverl | J/Kokuvil Hindu College | 65.57 | Abinaya Balachandran | J/Hindu College | 47.18 |
| Sivakonesan Mannamirthan | J/Hindu College | 65.44 | Ramesh Kithurshana | J/Vembadi Girl's High School | 46.95 |
| Piraveena Thavendren | J/Vembadi Girl's High School | 65.39 | Preethika Thavanesan | J/Uduvil Girl's College | 46.94 |
| Sinthushan Thavarasha | J/Mahajana College | 65.21 | Sritharan Kularaj | J/St.John's College | 46.27 |
| Kirushigha Sureshkumar | J/Vembadi Girl's High School | 65.00 | Pirabaharan Gabilesh | J/Hindu College | 46.17 |
| Thevarajan Jathurshan | J/Hindu College | 63.97 | Vasanthan Jatheesan | J/Kopay Christian College | 45.78 |
| Nitheepa Sriranganathan | J/Vembadi Girl's High School | 63.57 | Dilakshana Senthilkumaran | J/Kokuvil Hindu College | 45.61 |
| Shanthakumar Dinushanthan | J/Hindu College | 63.41 | Sharanyah Makeshwaran | J/Hindu Ladies College | 45.30 |
| Ranjan Invenstan | J/St.Patrick's College | 63.33 | Sangavitha Chandramowleeswaran | J/Vembadi Girl's High School | 45.21 |
| Mathiyalakan Harikaran | J/Hindu College | 63.06 | Niroshana Sivananthan | J/Hindu Ladies College | 44.88 |
| Bashna Vijayakumar | J/Hindu Ladies College | 62.28 | Channuthaange Jeyakaran | J/Vembadi Girl's High School | 44.83 |
| Jeyakumar Akilan | J/Hindu College | 62.25 | Subramaniyam Rumesh | J/Hindu College | 44.68 |
| Suthanika Thillainathan | J/Hindu Ladies College | 61.44 | Selvarathinam Prashanth | J/Urumpirai Hindu College | 44.61 |
| Tharaga Vijendran | J/Kokuvil Hindu College | 61.19 | Jeyakanthan Sulucksan | J/St.John's College | 44.58 |
| Kugathasan Umakajan | J/Hindu College | 60.62 | Mugunthanathas Mitharsan | J/Kokuvil Hindu College | 44.31 |
| Suntharalingam paranitharan | J/Hindu College | 60.62 | Kirubakaran Janarthan | J/Kokuvil Hindu College | 43.93 |
| Paktharasa Pavatharakan | J/Hindu Ladies College | 60.54 | Rammiya Maheswaran | J/Vembadi Girl's High School | 43.36 |
| Suvetha Makeshwaran | J/Vayavilan Central College | 60.46 | Mohanathas Mathurshana | J/Kokuvil Hindu College | 43.29 |
| Sivanathan Sujeepan | J/Kokuvil Hindu College | 60.38 | A.Romikha | J/Vembadi Girl's High School | 43.11 |
| Manokaran Panuga | J/Vembadi Girl's High School | 60.33 | Vithushana Nirmaleswaran | J/Kokuvil Hindu College | 42.46 |
| Sugantha Kamalanathan | J/Hindu Ladies College | 60.16 | A.Dinujan | J/Hindu College | 41.92 |
| Thevarasa Sivavarunan | J/Hindu College | 60.14 | Nirojana Nadarasa | J/Vaddu Hindu College | 41.85 |
| Sritharan Keerthigan | J/Hindu College | 60.00 | Ampikarasa Lakulan | J/Hindu College | 41.69 |
| Sathursana Kethieswaran | J/Manipay Ladies College | 59.93 | Vaishnavadevy Vasanthakumar | J/Hindu Ladies College | 41.46 |
| sivashaayeni Mahendran | J/Vembadi Girl's High School | 59.81 | Pavithira Arunasalam | J/Vembadi Girl's High School | 41.23 |
| Kawshika Mahendran | J/Hindu Ladies College | 59.46 | Vithusha Yogathasan | J/Hindu Ladies College | 40.96 |
| Kanthakumar Shankaran | J/Hindu College | 59.33 | Zuruthe Uthayakumaran | J/Hindu Ladies College | 40.76 |

NEW SCIENCE WORLD

VICTORY MUST

Brown Road, Jaffna.

## பாராளுமன்று...

மன்ற அமர்வினை புறக்கணித்திருந்தனர்.

இந்நிலையில்ஒரு மணிநேர ஆரம்பமான அமர்வின்போது ரணில் விக்ரமசிங்க மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அந்தப் பிரேரணை 117 பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாக வாக்களித்திருந்ததுடன். மக்கள் விடுதலை முன்னணி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## புலமைப் பரி...

கிழமை வெளியிடப்பட்டுள்ளன.

தரம் 6 இற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக பாடசாலைகள் மட்டத்தில் இந்த வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தவகையில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு வெவ்வேறாக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கான வெட்டுப் புள்ளி விபரங்கள்,

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி - 164, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 164, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி - 164, யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி - 164, யா/வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை - 167, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை - 171, யா/ஹாட்லிக் கல்லூரி - 176, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - 164. (ம)

## அரச தரப்பாக...

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவான நம்பிக்கை பிரேரணை மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அரசாங்கம் மீள ஸ்தாபிக்கப்பட ஒத்துழைப்போம் என்று கடந்த நவம்பர் 29ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்ததை அவ்வாறே பின்பற்றுவோம் என்ற தமது நிலைப்பாடு குறித்த கடிதத்தை சபையில் சமர்ப்பித்த அவர், தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இக் கடிதத்தை வர்த்தமானியில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் மன்றை வலியுறுத்தினார். (ம)

## ரணில் பிரத...

த்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் (சபாநாயகர் உட்பட) ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினால் அவரை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் பாராளுமன்றில் ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 117 பேரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை ஏற்று பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவாரா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம-3)

## பிரதமர் பதவி...

வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கத்தின் எதிர்காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலன்றி, தமது செயற்பாடுகள், அமைச்சரவை, ஆட்சி நிர்வாகம், மக்கள் நம்பிக்கை என்பவற்றிலேயே தங்கியுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக எண்ணிக்கையின் அடிப்படையில் பெரும்பான்மையை நிரூபித்து வந்த நல்லாட்சி, மக்கள் நம்பிக்கையை வெல்ல தவறிவிட்டது.

ஒக்டோபர் 26ஆம் திகதி சூழ்ச்சியை மைத்திரிபால சிறிசேன தமது அரசியல் தேவை கருதி செய்தார். மகிந்தவும் அதற்கு பங்காளி. அப்படியொரு சூழலை உருவாக்குவதற்கான பின்னணி குறித்து புரிந்து கொள்ள வேண்டும்.

நான் அந்த விடயத்தை நியாயப்படுத்தவில்லை. ஜனாதிபதி அவ்வாறு செய்ய ஏன் முனைந்தார்? மக்களுடைய தேவைகளை நிறைவேற்றாமல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் செயற்பட்ட காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டது.

ரணில், மகிந்த இருவரும் இந்த கதிரைகளில் இருந்து ஆட்சிசெய்த சந்தர்ப்பத்தை பார்த்துள்ளோம். ஒக்டோபர் 26ஆம் திகதி ஆட்சியை பிடித்த விடயம் எமக்கு பிரச்சினை. மகிந்த பதவிக்கு வந்ததோ, ரணில் சென்றதோ எமக்கு பிரச்சினை கிடையாது.

அரசியல் ரீதியில் நாம் ஒரு நிலைப்பாட்டில் உள்ளோம். பாராளுமன்றிலும் சரி நீதிமன்றிலும் சரி அரசியல் சூழ்ச்சிக்கு எதிராக செயற்படுவோம். ரணில் இந்த கதிரையில் அமர்ந்தால் எந்த புதிய விடயமும் இடம்பெறாது எனத் தெரிவித்தார். (ம-3)

## ஜனாதிபதி...

தற்கான ஆணையை மக்களிடம் பெறுவதற்கான பொது வாக்கெடுப்பை நடத்தும் ஜனாதிபதியின் திட்டமும் சட்டவிரோதமானது என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பெருங்குழப்பத்தில் உள்ளார்.

அரசியலமைப்புக்கு முரணாக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பாராளுமன்றக் கலைப்பு உத்தரவை நீக்கி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால், பொது வாக்கெடுப்புக்குச் செல்வது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தீர்மானித்துள்ளனர். இதுதொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டிருந்தார்.

பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அல்லது பாராளுமன்றில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படாத தீர்மானம் ஒன்றை நடைமுறைப்படுத்த மக்களின் ஆணையைப் பெறுவது உள்ளிட்டவற்றுக்கே பொது வாக்கெடுப்பை நடத்த முடியும்.

அரசியலமைப்பை ஜனாதிபதி மீறிவிட்டார் என்று உயர் நீதிமன்றமே தீர்ப்பளிக்கும் சட்டத்துக்கு முரணான விடயத்துக்கு பொது வாக்கெடுப்புக்குச் செல்ல அரசியலமைப்பில் இடமில்லை என சட்டத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3)

## நாளை வரை...

தொடர்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நாளை வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஆரம்பத்தில் விசாரணையை சில நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக நீதவான் அறிவித்தார். (ம-3)

## சட்டரீதியாக...

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் எமது அரசாங்கத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டிருக்கலாம். பிரதான கட்சிகள் இணைந்து பணியாற்றிய போது ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக இக்குறைபாடுகள் தோற்றம் பெற்றதுடன் அதனால் மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் சில தாமதங்களும் ஏற்பட்டிருக்கலாம்.

வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து, நாம் நன்கு அறிவோம். எமது அபிவிருத்தி செயற்பாடுகளில் அவர்களது பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்போம். அதேபோல் சட்டரீதியான பிரச்சினைகளையும் தீர்க்க நடவடிக்கை எடுப்போம்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக ஒற்றையாட்சியில் பிரிக்கப்படாத நாட்டிற்குள், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வினை வழங்க நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அதில் மாகாண சபையைப் பலப்படுத்துதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கவும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம் என்றார். (ம-3)

## நாட்டின் ஸ்திரத்தன்மைக்...

மன்ற உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியானது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கிய ஆதரவு எதற்கானது என்பது தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு விளக்கியுள்ளது. இது தொடர்பாக கருத்துரைத்துள்ள அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்,

அரசாங்கத்தின் பங்காளியாக இணையாது எதிர்க்கட்சியாக இருந்து ஆதரவு வழங்குவது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

இந்த முடிவின்போது எந்தவொரு முன் நிபந்தனையையும் நாம் முன்வைக்கவில்லை. நாட்டின் ஸ்திரத்தன்மையை யோசித்தே இந்த முடிவை எடுத்துள்ளோம். இருந்தபோதும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சகல தரப்பினரிடமும் கலந்துரையாடியிருந்தோம்.

ஐக்கிய தேசிய முன்னணியிடமும் இது பற்றிக் கலந்துரையாடினோம். ரணில் விக்கிரமசிங்கவின் உரையில் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதாகவும், பிரிக்கப்படாத பிளவுபடுத்த முடியாத நாட்டுக்குள் அரசியல் தீர்வொன்றை முன்வைப்போம் என தெளிவாகக் கூறியிருந்தார் என்றும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர். (ம-3)

## கூட்டமைப்பு - முன்னணி...

வாக்கெடுப்பு இன்றியே பாதீடு நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 3ஆவது விசேட பொதுக்கூட்டமானது நேற்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மாநகர சபா மண்டபத்தில் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் கடந்த அமர்வில் உறுப்பினர்களால் முன்வைக்கப் பட்ட கோரிக்கைகள், திருத்தங்களுடன் சபையில் முதல்வரால் பாதீடு முன்வைக்கப்பட்டது.

நேற்றைய தினம் முன்வைக்கப்பட்ட பாதீட்டில் சில திருத்தங்கள் மற்றும் வகை மாற்றங்கள் உறுப்பினர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டன. வகை மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாக்கெடுப்பு பாதீடு நிறை வேற்றப்பட்டது. (ம)

# மரண அறிவித்தல்



மலர்வு 11 • 07 • 1931

உதிர்வு 12 • 12 • 2018

## செல்லப்பா பேரின்பம்

(முன்னாள் உரிமையாளர் Yoga Trading Co., Dam Street, Col-12)

புங்குடுதீவு 12-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா பேரின்பம் அவர்கள் நேற்று (12.12.2018) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், விஜயசுந்தரம் (சுவிஸ்), பராசக்தி (கனடா), காலஞ்சென்றவர்களான கனகம்மா, புவனேஸ்வரி, பத்மநாதன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானவதி (கனடா), சரஸ்வதி, குகேந்திரன், கனகேந்திரன், கிருபாநந்தன் (சுவிஸ்), யோகவதி, கிருஷ்ணகுமார் (லண்டன்), மதிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மனோகரன் (கனடா), குகதரன், காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் சரோஜினி, மோகனா, வதனி (சுவிஸ்), வித்தியா (லண்டன்), தயானா ஆகியோரின் அன்பு மாமனாரும், தரணீகரன், கிரிவதனன், பிரியதர்ஷினி, சுஜிதா, கார்த்தீபன், நிஷாந்தன், நிருஷிகா, பிரஷாந், சாருஜா, தனஞ்சயா, அருண்பிரசாந்த், இலக்கியா, கோபிகா, கோகுலன், அபிநயா, சஸானா, சபித்தா, சஜித், கிரிஷாந், அனுஷன், தாஸியா, ஆரவ், அக்ஷரன், ஆருத்ரன், ஆதிரா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.12.2018) வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் ஜெயரட்ணா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.09, Ridgeway Place,
Colombo - 04. (இ)

தகவல்: மக்கள், மருமக்கள்,
குடும்பத்தினர். 011 258 5489

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12-12-2018
சீட்டிழுப்பு இலக்கம் 899
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
E 8 5 8 5 2 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.12.12
சீட்டிழுப்பு இலக்கம் 1971
G 18 32 59 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 12/12/2018
சீட்டிழுப்பு இலக்கம் 317
I 13 08 11 63 74
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-12-12
சீட்டிழுப்பு இலக்கம் 87
H 05 06 16 42
தேசிய லொத்தர் சபை

NEW SCIENCE WORLD
VICTORY MUST

# NEW SCIENCE WORLD

**Navalar Road, Brown Road Junction, Jaffna.**

**Telephone: 077 336 4055, 021 221 6690**

# G.C.E (A/L) 2021 SCIENCE STREAM

## தமிழ்மொழி மூலம்

பௌதிகவியல் : திரு.R.குமரன்
திரு.R.குகன்

இரசாயனவியல் : திரு.டயஸ்
திரு.K.T.சிவகுமார்

உயிரியல் : திரு.N.T.கஜேந்திரன்

இணை. கணிதம் : திரு.S.S.செந்தில்ராஜ்

## English Medium

**Physics** : Mr.R.Kumaran

**Chemistry** : Mr.Dias

**Biology** : Mr.N.T.Gajenthiran

**Com.Maths** : Mr.S.Krishna

(4684)

**ஆரம்பம்: 14.12.2018 வெள்ளி காலை 7.00 மணி**

அனுமதிகளை காலை 6.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# இரசாயனவியல்

*A/L 2020* **Serial Exam-06** *Dec 2018*

NEW SCIENCE WORLD

| Index No | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/4114/B | Muralitharan Piragajan | J/J.H.C | 93 | 1 |
| J/4126/B | Poovalingam Nilaxsan | J/J.H.C | 93 | 1 |
| J/3276/M | P.Dias Anold | J/J.H.C | 92 | 3 |
| J/3166/M | Ketheeswaran Nitharsan | J/S.V.C | 91 | 4 |
| J/4099/B | Kalaimathy Premanathan | J/M.L.C | 88 | 5 |
| J/3356/M | Thavasuntharam Kopikan | J/K.H.C | 86 | 6 |
| G/3589/M | Mohamed Ashar Ahamed Ayyash | G/M.S.C.C | 83 | 7 |
| J/4401/B | Srithuvaragan | J/J.H.C | 82 | 8 |
| J/4279/B | Layansika Jegatheeswaran | J/M.L.C | 81 | 9 |
| J/3057/M | Sabananthar Sivanujan | J/V.H.C | 79 | 10 |
| J/5010/M | Mahenthirarasa Uthayathasan | J/V.H.C | 78 | 11 |
| J/4455/B | Sasitharan Aathiththan | J/K.H.C | 77 | 12 |
| J/3300/M | Kukanentheran Shanshajan | J/V.H.C | 76 | 13 |
| J/3048/M | Pathmanathan Abiram | J/J.H.C | 76 | 13 |
| J/3346/M | Sandrasekaran Thenujan | J/V.H.C | 76 | 13 |
| J/3017/M | Balakrishnan Ajinthan | J/K.H.C | 74 | 16 |
| J/4453/B | shanuja Pakkiyanathan | J/S.V.C | 74 | 16 |
| J/3094/M | Asokan Rajeevan | J/V.H.C | 73 | 18 |
| J/4535/B | Printhini Selvaranjen | J/M.L.C | 73 | 18 |
| J/4149/B | Balakrishnan Kurusanth | J/S.V.C | 71 | 20 |
| J/4654/B | Mathiyalakan Puventhan | J/J.H.C | 70 | 21 |
| J/4609/B | Thanaseelan Agash | J/M.C | 70 | 21 |
| J/3425/M | Jeyakumar Insan | J/V.H.C | 69 | 23 |
| J/4100/B | Showmiya Easwaran | J/M.L.C | 69 | 23 |
| J/5003/M | Malarvannan Regan | J/J.H.C | 68 | 25 |
| J/3176/M | Somasundaram Banujan | J/V.C.C | 67 | 26 |
| J/4578/B | Susanthika Mohanaraj | J/J.H.L.C | 67 | 26 |
| J/3319/M | Thevamoorthy Jaathavan | J/V.H.C | 67 | 26 |
| J/4611/M | Sriskanthakumar Thivikkshanan | J/J.H.C | 66 | 29 |
| J/4427/B | Archchana Raveendran | J/V.G.H.S | 65 | 30 |
| J/3722/M | Mahendrarasa Kabeesan | J/J.H.C | 64 | 31 |
| J/4223/B | Thevasagini Thirukkumar | J/U.C | 64 | 31 |
| J/3205/M | Kirushika Kirubakaran | J/M.L.C | 63 | 33 |
| J/4097/B | Mathiyalakan Hariharan | J/J.H.C | 63 | 33 |
| J/4017/B | Vaishnaa Babakaran | J/V.G.H.S | 63 | 33 |
| J/3374/M | Surenthiran Gopeeshan | J/J.H.C | 62 | 36 |
| J/3507/M | Ananthakumarasamy Rakulan | J/S.V.C | 60 | 37 |
| J/3623/M | Baskaran Robinsan | J/S.V.C | 60 | 37 |
| J/3101/M | Bavanantham Nivethan | J/K.H.C | 60 | 37 |
| J/3202/M | Thavarasa Diberdan | J/M.H.C | 60 | 37 |
| J/4403/B | Varatharajah Krishnavarnan | J/J.H.C | 59 | 41 |
| J/3148/M | A. J. Tuke Remingan | J/K.H.C | 58 | 42 |
| J/4476/B | Edvina Dasan | J/M.L.C | 58 | 42 |
| J/3590/M | Selvarajah Pinthujan | J/A.C | 58 | 42 |
| J/3669/M | Srikaran Srisankar | J/J.H.C | 58 | 42 |
| J/3316/M | Mahilini Kirubananthan | J/C.H.C | 57 | 46 |
| J/4313/B | Sneka Sathiyenthira | J/V.G.H.S | 57 | 46 |
| J/3043/M | Tharmathayalan Sankeethan | J/J.H.C | 56 | 48 |
| J/3160/M | Theyohne Sriharan | J/V.G.H.S | 56 | 48 |
| J/3323/M | Kumaraiya Sasikaran | J/J.H.C | 55 | 50 |
| J/4544/B | Sangavi Rasenthiram | J/M.L.C | 55 | 50 |
| J/4300/B | Mariyanatharasa Loyesbachchek | J/S.H.C | 54 | 52 |
| J/4061/B | Rajendran Harishanth | J/J.H.C | 54 | 52 |
| J/4615/B | Sangeetha Srivarathan | J/K.H.C | 54 | 52 |
| J/4604/B | Veerasingam Vithusan | J/J.H.C | 54 | 52 |
| J/4410/B | Alagentheran Abishanth | J/V.H.C | 53 | 56 |
| J/3099/M | Sanmugarasa Kanusiyan | J/K.H.C | 53 | 56 |
| J/4512/B | Thenuja Premakanthan | J/J.H.L.C | 53 | 56 |
| J/3671/M | Thiruvarudselvan Kobirajah | J/S.V.C | 53 | 56 |
| J/3595/M | Arulraj Suvethan | J/M.C | 52 | 60 |
| J/3701/M | Kanesan Ranushanth | J/C.H.C | 52 | 60 |
| J/3427/M | Nageswaran Jenistan | J/V.C.C | 52 | 60 |
| J/3355/M | Sooriyakumar Sarujan | J/J.H.C | 52 | 60 |
| J/3721/M | Mugunthan Megarooban | J/K.H.C | 51 | 64 |
| J/3433/M | Sivarasasingam Rajeev | J/K.H.C | 51 | 64 |
| J/4265/B | Bavatharani Punniyamoorthi | J/V.C.C | 50 | 66 |
| J/3556/M | Jasmini Gnanasekaram | J/K.H.C | 50 | 66 |
| J/3635/M | Kiruthika Sathiyaseelan | J/V.G.H.S | 50 | 66 |
| J/3172/M | Sathananthan Kirushanth | J/K.H.C | 50 | 66 |
| J/4375/B | Janaruby Kanagarathnam | J/M.L.C | 49 | 70 |
| J/4451/B | Priyanka Uthayaraj | J/S.V.C | 49 | 70 |
| Mu/4630/B | Sajeeva Satkunarasa | Mu/Y.M.V | 49 | 70 |
| J/3689/M | Sathursika Santhakumar | J/K.H.C | 49 | 70 |
| J/3553/M | Tharsana Vigneswaran | J/S.V.C | 49 | 70 |
| J/3515/M | Venuka Rajasuntharam | J/V.C.C | 49 | 70 |
| J/4223/M | Christeen Nirmalaraj Priyanshan | J/M.H.C | 47 | 76 |
| J/4629/B | Thirushani. R | J/M.L.C | 47 | 76 |
| J/3756/M | Gnanendran Piragalathan | J/S.V.C | 46 | 78 |
| J/3736/M | Jokarasa Jasith | J/M.C | 46 | 78 |
| J/4287/B | Samuvell Johnson Clarance | J/K.H.C | 46 | 78 |
| J/4664/B | Panuvanthy Sivakanthan | J/J.H.L.C | 45 | 81 |
| J/3597/M | Rukminikanthan Sarangan | J/J.H.C | 45 | 81 |
| J/3103/M | S.Chulaxshan | J/J.H.C | 45 | 81 |
| J/3177/M | Sathananthan Mahinthan | J/V.C.C | 45 | 81 |
| J/3523/M | Satkunaswaran Nithulan | J/M.C | 45 | 81 |
| J/3117/M | Selvaratnam Kajanan | J/V.H.C | 45 | 81 |
| J/3528/M | Sivakumar Elankgumaran | J/C.H.C | 45 | 81 |
| J/3626/M | Vijayakumar Vithusan | J/J.H.C | 45 | 81 |
| J/3164/M | Krishnarajah Sankarasan | J/S.V.C | 44 | 89 |
| J/3136/M | S.N. Juliyaddinosan | J/J.H.C | 43 | 90 |
| J/4474/B | Sharanyah Mageshwaran | J/J.H.L.C | 43 | 90 |
| J/3078/M | Sivakukan Ukenthiran | J/V.H.C | 43 | 90 |
| J/3228/M | Arthana Pushpalingam | J/U.G.C | 42 | 93 |
| J/4562/B | Kadotkasan Kosikan | J/J.H.C | 42 | 93 |
| J/3242/M | Nakulaswaran Vithakan | J/K.H.C | 42 | 93 |
| J/4118/B | S. Pirunthapan | J/K.H.C | 42 | 93 |
| J/4672/B | Tharsika Parameswarasarma | J/U.G.C | 42 | 93 |
| J/4563/B | Thenisha Sivapalan | J/K.H.C | 41 | 98 |
| J/3098/M | Kunam Abisharan | J/J.H.C | 40 | 99 |
|  | M.Hirushan | J/M.C | 40 | 99 |
|  | Padmanathan Ajith | J/J.H.C | 40 | 99 |
| J/3619/M | Pukalini Tharumarasha | J/K.H.C | 40 | 99 |

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

# K.T.சிவகுமார் B.Sc, PGDE

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.